24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 35 மார்கழி 15ஆம் நாள் திங்கட்கிழமை 31 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

பக்கங்கள்: 28
விலை: 30

# ஒருமித்த நாடு என்ற சொல்லை ஏற்றுக் கொள்ளவேயில்லை

## ஐக்கிய தேசியக் கட்சி திட்டவட்டமாகத் தெரிவிப்பு



கொழும்பு, டிசெம்பர் 31

அரசமைப்பில் "ஏக்கிய ராஜ்ஜிய" என்ற சொல் மூன்று மொழிகளிலும் இருக்கும். அதில் எந்தவொரு மாற்றமும் செய்யப்படாது. "ஏக்கிய ராஜ்ஜிய" வுக்குத் தமிழில் ஒருமித்த நாடு என்ற பதத்தை இணைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இவ்வாறு சபை முதல்வரும், அமைச்சரும், வழிநடத்தல் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். >> 06

## பரீட்சை மீளாய்வுக்கு 16இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்

கொழும்பு, டிசெ. 31

2018ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைபெறு பேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை எதிர் வரும் 16 ஆம் திகதிக்குள் அனுப்பிவைக்குமாறு பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் எஸ். பிரணவதாசன் தெரிவித்துள்ளார்.

'பாடசாலை மாணவர்கள்விண்ணப்பங்களை தமது அதிபர்கள் ஊடாகப்பெற்றுக்கொள்ளமுடியும். தனிப்பட்ட பரீட்சார்த்திகள், பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாக விண்ணப்பங்களைப்பெற்றுக்கொள்ள முடியும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (5)

## புலிகளை அழித்த எமக்கு ரணிலை வீட்டுக்கு அனுப்புவது கடினமல்ல!

### விரைவில் ஆட்சிப்பீடம் ஏறுவோம் என்று மகிந்த சூளுரை



கொழும்பு, டிசெ. 31

தமிழீழ விடுதலைப் புலிகளைக் கூண்டோடு அழித்தோம். மாபெரும் வெற்றிச் செய்தியுடன் பயங்கரவாதத்துக்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டு வந்தோம். இப்படிப் பல சாதனைகளை நிலைநாட்டிய எமக்கு ஊழல், மோசடிகளை மறைத்து ஆட்சி நடத்தும் ரணில் >> 22

ஏ.எல். பெறுபேறுகளில்

## தேசிய ரீதியில் முன்னணியில் தமிழ் மாணவர்கள் இல்லை

யாழ்ப்பாணம், டிசெ. 31

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெளியாகின. தேசிய ரீதியில் முதல் மூன்று இடங்களைத் தமிழ் மாணவர்கள் எவரும் பெற்றுக் கொள்ளவில்லை.

கடந்த ஆண்டு தமிழ் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்தபோதும், இந்த ஆண்டு பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளனர்.

இதேவேளை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் >> 06

## பல்கலை மானியங்கள் ஆணைக்குழு கையேடு விரைவில் வெளியிடப்படும்

கொழும்பு, டிசெ. 31

வெளியாகியுள்ள உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய, பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என்று பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொகான் சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழகத்துக்கு மாண >> 06



## மோட்டார் குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 31

யாழ்ப்பாணம் நெடுங்குளம் இறங்குதுறையில் இருந்து 250 >> 06

## வட மாகாண முன்னாள் உறுப்பினர்கள் ஒன்றிணைந்த அமைப்பு உருவாக்கம்

### மூன்று விடயங்கள் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்கவும் நேற்று முடிவு

யாழ்ப்பாணம், டிசெ. 31

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள் ஒன்றிணைந்த அமைப்பு நேற்று உருவாக்கப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் வரையில், முன்னாள் உறுப்பினர்களின் கருத்துக்களை அபிவிருத்தி விடயங்களில் உள்வாங்குவது உள்ளிட்ட மூன்று முக்கிய தீர்மானங்கள் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணசபையின் ஆயுள் >> 06

## குளிரான காலநிலை நாட்டில் நீடிக்கும்

கொழும்பு, டிசெ. 31

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் காலையிலும் இரவிலும் குளிரான நிலைமையுடன் கூடிய காலநிலை நிலவும் என்று வளிமண்டலவியல்திணைக்களம் அறிவித் >> 23

## மைத்திரியின் வாக்குறுதி மீண்டும் பொய்த்தது

யாழ்ப்பாணம், டிசெ. 31

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள தனியார் காணிகள் அனைத்தும் இந்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு - இன்றைய தினத்துக்கு - முன்னர் விடுவிக்கப்படும் என்று அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேன இருதடவைகள் உறுதியளித்தபோதும் அது நடைபெறவில்லை.

இந்த நிலையில், ஜனவரி மாதம் இரண்டாம் வாரத்துக்குள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விவசாயக் காணிகள் ஆயிரத்து 99 ஏக்கர் மாத்திரம் விடுவிக்கப்படும் >> 06





வெள்ளம் பாதித்த

## கிணறுகளைக் கலக்கித் துப்புரவாக்கும் பணியில் களமிறங்கினார் அமைச்சர் பாலித தெவரப்பெரும

கிளிநொச்சி, டிசெ. 31

கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிணறுகளை கலக்கித் துப்புரவாக்கும் பணியில் பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும நேற்று ஈடுபட்டார்.

தென்னிலங்கையில் பேரிடர்களின் போது களத்தில் குதித்து இவ்வாறான பணிகளில் சர்வசாதாரணமாக பாலித தெவரப்பெரும ஈடுபடுவது வழமை. அவர் இவ்வாறான பணிகளில் ஈடுபட்ட ஒளிப்படங்கள் சமூகவலைத் தளங்களில் அதிகம் பகிரப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையில், கிளிநொச்சியில் வெள்ளம் முழுமையாகப் பாதித்த கிணறுகளைக் கலக்கி >> 06

## சந்திரிகா தலைமையில் சு.கவில் புதிய அணி

கொழும்பு, டிசெ. 31

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரும், முன்னாள் அரச தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்கா தலைமையில் சுதந்திரக் கட்சியின் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஜனவரி மாதம் சங்கமிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கட்சித் தலைவரான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைக் >> 06

# பிரிந்தவர்கள் மீண்டும் வர சுதந்திரக்கட்சி அவகாசம்

கொழும்பு. டிசெ. 31
சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து சென்றவர்கள் திரும்பவும் கட்சியில் இணைந்து கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் அதிகம் உள்ளன என்று தெரிவித்த அந்தக் கட்சியின் பொதுச் செயலர் பேராசிரியர் ரோகண லக்ஸ்மன் பியதாச, அவ்வாறு சென்றவர்கள் திரும்பி வருவதற்கு அவகாசமும் கொடுத்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், கட்சியிலிருந்து சென்றவர்களுக்கு கட்சியின் மத்திய செயற்குழு என்ன வகையான நடவடிக்கையை முன்னெடுக்கும்? என வினவியதற்கே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கட்சியிலிருந்து சென்றவர்கள் அனைவரும் தாம் இன்னும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றே கூறிவருகின்றனர். தாம் ஐ.தே.க.விலோ வேறு கட்சியிலோ இணைவதில்லையென்றும் குறிப்பிடுகின்றனர். சிலர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சில் உள்ளனர். சென்றவர்கள் கட்சியில் இணைந்து கொள்வார்கள் என்றே நம்புகின்றோம். கட்சியை விட்டுச் சென்றவர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு அவசரப்படுவதை விடவும், அவர்கள் மீண்டும் வந்து கட்சியுடன் இணைந்து கொள்வதற்கு அவகாசம் அளிப்பதே எமது நிலைப்பாடு என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## எதிர்க்கட்சித் தலைவராக

# மகிந்த ராஜபக்ச வேண்டாம் துமிந்தவையே நியமியுங்கள்

## சு.க. உப தலைவர் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 31
**நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு மகிந்த ராஜபக்சவின் பெயரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பரிந்துரைத்துள்ள நிலையில், அந்தப் பதவிக்கு சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயலர் துமிந்த சில்வாவை நியமிக்குமாறு, சுதந்திரக் கட்சியின் உப தலைவர்களுள் ஒருவரான பியசேன கமகே தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் கடந்த 18ஆம் திகதி, சபாநாயகர் கரு ஜயசூரியா மகிந்த ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவராக அறிவித்திருந்தார்.

இதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போர்க் கொடி தூக்கியிருந்தது. எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் தொடர்பில் எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது தனது முடிவை அறிவிப்பதாக சபாநாயகர் கரு தெரிவித்திருந்தார்.



இந்த நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை குமார வெல்கமவுக்கு வழங்குமாறு சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கம் ஒன்று கோரிக்கை விடுத்திருந்த நிலையில், சுதந்திரக் கட்சியின் உப தலைவர் துமிந்தவுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

"நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியானது சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவருக்கே வழங்கப்படவேண்டும். கட்சியின் மூத்த உறுப்பினரான நிமல்சிறிபாலடி சில்வா அந்தப் பதவிக்கு பொருத்தமானவர். அவ்வாறு இல்லாவிட்டால் துமிந்த திசாநாயக்க நியமிக்கப்படவேண்டும். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இணைந்த உறுப்பினர்களுக்கு அந்தப் பதவியை வழங்கக் கூடாது. அதைப் பெறுவதற்கு அவர்கள் ஏற்புடையவர்களும் அல்லர். மகிந்த எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டால் அது சட்டவிரோதமாக அமையும். இது தொடர்பில் சபாநாயகரிடமும் எடுத்துரைப்பேன்" என்றும் பியசேன கமகே கூறினார். (5)

# மகிந்தவின் புதல்வர் மருத்துவமனையில்!

கொழும்பு, டிசெ. 31
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது மகன் யோசித ராஜபக்ச ரகர் விளையாட்டின் போது படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

விளையாட்டின்போது இடம்பெற்ற விபத்தில் யோசிதவின் முகம் மற்றும் தலைப் பகுயில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் அவருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவரது முகம் இரும்புத் தகடுகள் பயன்படுத்தி மீளவும் சரி செய்யப்பட்டுள்ளது என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

# தேர்தலை இலக்காகக் கொண்டு பொதுமக்கள் முன்னணி வியூகம்

கொழும்பு, டிசெ. 31
தேர்தல்களை இலக்காகக் கொண்டு இலங்கைப் பொதுமக்கள் முன்னணி ஜனவரி மாதம் முதல் மக்களை அறிவுறுத்தும் கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவித்துள்ளது.

கிராம மட்டத்தில் மக்களுக்கு அறிவுறுத்தவும், மாவட்ட மற்றும் தொகுதி ரீதியில் பொதுக் கூட்டங்களையும் நடத்தவும் திட்டமிட்டுள்ளதாகவும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது. புதிதாக உறுப்பினர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளையும் பெப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் வரை சகல கிராமங்கள் தோறும் முன்னெடுக்கவுள்ளதாகவும் அந்தக் கட்சியின் முக்கிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ம)

# தலதா மாளிகையில் நேர்த்திக் கடனை நிறைவேற்றினார் ஹிருணிக்கா பிரேமசந்திர

கொழும்பு, டிசெ. 31
நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமசந்திர கண்டி தலதா மாளிகைக்குச் சென்று அவரால் வைக்கப்பட்ட நேர்த்திக் கடனை நிறைவேற்றியுள்ளார்.

தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க நீக்கப்பட்டார். அவருக்கு மீண்டும் தலைமை அமைச்சர் பதவி வழங்கப்பட்டால், தலதா மாளிகைக்கு தலைமை அமைச்சர் ரணில் வந்து வழிபாடு நடத்துவதாக நேர்த்திக் கடன் வைத்துள்ளதாகவும். அதற்கமைய தலதா மாளிகைக்கு சென்ற தலைமை அமைச்சர் தனது நேர்த்திக் கடனை நிறைவேற்றியதாக ஹிருணிக்காக குறிப்பிட்டுள்ளார்.

ஹிருணிக்கா தலதா மாளிகைக்கு வருகை தருவதற்கு சற்றுத் தாமதமாகிய நிலையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனது வழிபாடுகளை நிறைவேற்றிவிட்டு வெளியேறும் வரிசையில் நின்றுள்ளார். இதனை அவதானித்த ஹிருணிக்காக தனது பூசை பொருள்களை தலைமை அமைச்சரிடம் வழங்கியுள்ளார். அதனைத் தலைமை அமைச்சர் கை வைத்து வணங்கியுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மலிக் சமரவிக்ரம மற்றும் லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோர் இணைந்து கொண்டுள்ளனர். தலைமை அமைச்சர் கை வைத்து வணங்கிய பின்னர் புத்தர் சிலைக்கு பெரிய மாலையை அணிவித்துள்ளார். (5)

# எனக்குத் திருமணமா? மறுக்கிறார் ரோகித

கொழும்பு, டிசெ. 31
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் இளைய புதல்வர் ரோகித ராஜபக்ச திருமண பந்தத்தில் இணையவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், அவர் அதனை மறுத்துள்ளார்.



ரோகித ராஜபக்ச அவரது காதலியான ரற்றியானாவை அடுத்த மாதம் 24ஆம் திகதி திருமணம் செய்து கொள்ளவுள்ளார் என்றும் அது தொடர்பான அழைப்பிதழும் ஊடகங்களில் குறிப்பாக சமூக ஊடகங்களில் வெளியாகியிருந்தது. தங்காலை, மெதமுலன - வீரகெட்டியவில் உள்ள ரன்ன ஹோட்டலில் திருமணம் நடைபெறுகின்றது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது போலியான தகவல் என்று ரோகித குறிப்பிட்டுள்ளார்.

அவரின் உத்தியோகபூர்வ கீச்சகப் பக்கத்தில் இந்தத் தகவலை ரோகித வெளியிட்டுள்ளார்.

ரோகித ராஜபக்ஷவின் மூத்த சகோதரர்களான நாமல் ராஜபக்ஷ, யோஷித ராஜபக்ஷ இன்னும் திருமணம் முடிக்காதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# கூட்டுஅரசு விரைவில் அமையும் அரசும் உறுதித்தன்மை பெறும்!

## இராஜாங்க அமைச்சர் சாகிர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 31
எமது நாட்டில் அரசியல் குழப்பம் தற்போது தணிந்துள்ளது. ஏனைய கட்சிகளிலிருந்து அரசுடன் இணையவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு மிகவிரைவில் கூட்டு அரசு அமைக்கப்படும். அதன் மூலம் தற்போதைய அரசு உறுதியைப் பெறும் என்று தெரிவித்தார் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அலி சாகிர் மௌலானா.



அண்மையில் எமது நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தின்போது சில அரசியல்வாதிகள் பதவி மற்றும் பணத்துக்காக பொய்யான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஆனபோதிலும் அழைப்புக்கள் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நாம் அவற்றுக்கு தலைசாய்க்காது நீதி, நியாயம் ஜனநாயகத்துக்காக அகிம்சை வழியில் போராடினோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாகிர் மௌலானா, சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றுள்ளார். அவரை வரவேற்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அந்த நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம)

# சு.க. தலைமையகச் சாவி பொலிஸாரிடம் கையளிப்பு

கொழும்பு, டிசெ. 31
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவுக்கு அமைய மூடப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமை அலுவலகத்தின் சாவி, மருதானைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை காலை தலைமையகம் மூடப்பட்டது. இதன் பின்னர் அதன் சாவியைப் பெறுவதற்கு ஒருவரும் முன்வரவில்லை.

இதன் காரணமாக அலுவலக ஊழியரினால் அதன் சாவி மருதானைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த பேச்சாளர் உறுதிப்படுத்தியுள்ளார். (5)

## வவுச்சர்களை விற்பனை செய்தால்

# பாடசாலை அதிபர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

## கல்வி அமைச்சர் காட்டம்

கொழும்பு, டிசெ. 31
பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள சீருடை வவுச்சர்களை வைத்து வியாபாரம் செய்யும் பாடசாலை அதிபர்களுக்கு எதிராக கடும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாடு முழுவதும் பல முறைப்பாடுகள் அமைச்சுக்கு கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (5)



## மூளாயில் மரநடுகை

பொன்னாலை, டிசெ. 31



யாழ்ப்பாணம் பொன்னாலைக்கடற்கரையைஅண்டியபகுதிகளில்நேற்றுமரக்கன்றுகள்நடுகைசெய்யப்பட்டன.

பொன்னாலைக் கடற்கரை, மூளாய்க் குடியேற்றத்திட்டம்,பொன்னாலைச் சந்தி போன்ற இடங்களில் நேற்று முற்பகல்10 மணி தொடக்கம் மரநடுகை இடம்பெற்றது. மூளாய் ஜே. 171 கிராம அலுவலர் ந.சிவரூபன் தலைமையில் மரநடுகை இடம்பெற்றது.

சைவமகாசபை, சுழிபுரம் றோட்டறக் கழகம், சங்கானைப் பிரதேச செயலகம் ஆகியனஇணைந்துஇந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. சைவமகாசபை, றோட்டறக் கழகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலரும் இதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். தனியே மரம்நடுவதோடுநின்றுவிடாது ஆடு, மாடுகளிடம் இருந்து அவற்றைப் பாதுகாத்து வளர்க்கும் நோக்கில் நடுகை செய்யப்பட்ட மரங்களைச் சுற்றி பனை மட்டையால் தடுப்பு ஒன்றையும் அவர்கள் அமைத்தனர். குடியேற்றத்திட்டத்தில் உள்ள மக்களுக்கு வீடு ஒன்றுக்கு இரண்டு மரக்கன்றுகள் கையளிக்கப்பட்டுநடுகைசெய்யப்பட்டன. அந்த மரக் கன்றைப் பாதுகாப்பதற்கும் வீட்டின் உரிமையாளர்களுக்கு மட்டைகள் வழங்கப்பட்டன. (21)

# கிளிநொச்சியிலுள்ளமேலதிகஆசிரியர்களின் இடமாற்றத்தைத் தற்காலிகமாக நிறுத்துங்கள்

## ஆளுநரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 31

**கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் அங்கு பணியாற்றி இடமாற்றம் வழங்கப்பட்ட மேலதிக ஆசிரியர்களின் வலய மட்ட இடமாற்றத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு ஆளுநர் ரெஜினோல்ட் குரேயிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேலதிகமாகக் காணப்படும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களில் 63 பேரைக் கிளிநொச்சி வலயத்துக்கு வெளியே உள்ள கல்வி வலயங்களுக்குஇடமாற்றப்பட்டனர். அவர்கள் துணுக்காய், முல்லைத்தீவு, மடு போன்றகல்விவலயங்களுக்குநியமிக்கப்பட்டிருந்தனர். இடமாற்றம்வழங்கப்பட்ட 63 ஆசிரியர்களும் நாளைமறுதினம்புதன்கிழமைமுதலாம்தவணைக்காகப் பாடசாலைகள் ஆரம்பிக்கும் தினத்தில் புதிய பாடசாலைகளில் பொறுப்பேற்கவேண்டும்என்றுபணிக்கப்பட்டிருந்தனர்.

வடக்கு மாகாண ஆளுநரின் உத்தரவுக்குஅமையவழங்கப்பட்டஇடமாற்ற உத்தரவை தற்போதைக்கு நிறுத்த வேண்டும்.

ஆசிரியர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்என்றுதெரிவித்துநாடாளுமன்ற உறுப்பினர் இந்தக் கோரிக்கையை ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுசென்றார்.

இடமாற்றத்தைஇரண்டாம்தவணைக் காலம் வரையில் இடைநிறுத்தி ஆசிரியர்களுக்கு உதவி புரியுமாறு அவர் கோரியுள்ளார்.

தற்போதைய சூழ் நிலையைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்களுக்குச் சாதகமாகப் பரிசீலிப்பதாக வட்க்கு மாகாண ஆளுநர் பதிலளித்துள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(4,105)

## புதுவருடத்துக்கான வியாபாரம் மன்னாரில் களைகட்டவில்லை

### வெள்ள அபாயம் காரணம் என்று தெரிவிப்பு

மன்னார், டிசெ. 31

மன்னாரில்இந்தவருடத்துக்கானநத்தார்மற்றும்புதுவருட வியாபாரங்கள்சென்றவருடத்தைவிடமிகக்குறைவாகவே உள்ளன என்று வியாபாரிகள் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர். வெள்ளப்பெருக்குஏற்படும்என்றுகருதிஅதில்ஆர்வம் கொண்டிருக்கவில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

முன்னைய வருடங்களில் புதுவருடம் உட்பட சிறப்புநாள்களில் வியாபாரங்கள் சிறப்பாக இடம்பெறும். இந்தமுறை மக்கள் ஆர்வமற்றுள்ளனர் என்று வியாபாரிகள் கூறினர்.


இது பற்றி பொதுமக்களிடம் கருத்துக் கேட்டபோது அவர்கள் தெரிவித்ததாவது:

எந்த ஒரு கொண்டாட்ட நிகழ்வுகளைச் செய்யவும் மனதில் ஒருஅச்சஉணர்வுஎழுகின்றது. காரணம்சிலநாள்களுக்கு முன்னர் வடபகுதியில் காணப்பட்ட இயற்கை அழிவுதான். ஆரம்பத் தகவலின்படி மழையால் மன்னார் மாவட்டமும் பாதிக்கப்படக்கூடும்என்றநிலைஇருந்தது. ஒவ்வொருவரின் மன்றாட்டங்களாலும்அதுதவிர்க்கப்பட்டது. இழப்புவந்தால் எவ்வாறு எதிர்கொள்வது? குடும்பத்தை எவ்வாறு காப்பது என்னும்சிந்தனையால்இப்படியானகொண்டாட்டநிகழ்வுகள் விருப்பமில்லாமல் போய்விட்டன. தவிர மன்னார் மாவட்ட மக்கள் அனைவரும் வசதியானவர்கள் இல்லை. எம்மால் முடிந்த சிறு உதவிகளைச் செய்கின்றோம். பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்களுக்காக அவர்கள் மீள் எழுச்சி பெற வேண்டும் என்று கடவுளிடம் மன்றாட மட்டுமே முடியும். அரசும்அரசியல்வாதிகளுமேஅந்தமக்களுக்குச் சகல வசதிகளையும் செய்து கொடுத்து வீழ்ந்தவர்களைத் தூக்கிவிட வேண்டும் - என்றனர்.

(4,213)



## கற்றாழைகளைப் பிடுங்கியவர்கள் பொன்னாலையில் விரட்டப்பட்டனர்



யாழ்ப்பாணம், டிசெ. 31

நோய்களைத் தீர்க்கும் மருத்துவக் குணமுடைய - கற்றாழைகளை அனுமதியின்றிப் பிடுங்கிக் கொண்டு செல்லமுற்பட்டனர்என்றுகூறப்படும்நபர்கள்வலிகாமம்மேற்குப் பிரதேச சபையின் உறுப்பினர் மற்றும் இளைஞர்களால் துரத்தப்பட்டனர்.

இந்தச் சம்பவம் பொன்னாலைக் கடற்கரையோரத்தில் நேற்றுமுற்பகல்10.30அளவில் இடம்பெற்றது.

பட்டா ரக வாகத்தில் வந்த சிலர் பொன்னாலைக் கடற்கரையோரத்தில்வளர்ந்துள்ள மருத்துவக்குணமுடைய-கற்றாழைகளைப்பிடுங்கியுள்ளனர். இரண்டுபைகளில்அவற்றை நிரப்பியுள்ளனர். இதை அவதானித்த அந்தப் பகுதியைச் சேர்ந்தஇளைஞர்கள்சம்பவம்தொடர்பில்வலிகாமம்மேற்குப் பிரதேச சபையின் பொன்னாலை வட்டார உறுப்பினர் பொன்ராசாவுக்கு அறிவித்தனர். சம்பவ இடத்துக்கு விரைந்தபிரதேசசபைஉறுப்பினர்கற்றாழைகளைப்பிடுங்கியவர்களைவிசாரித்தார். அவர்கள்தென்பகுதியைச்சேரத்தவர்கள் என்பது தெரியவந்தது. பிரதேச செயலகத்தின் அனுமதியுடனே கற்றாழைகளைப் பிடுங்குகிறோம் என்று அவர்கள் தெரிவித்தனர். அதற்கான அனுமதியைக் காட்டுமாறு கோரியபோது அவர்களிடம் அனுமதியில்லை. இதனால் அவர்கள் அங்கிருந்து துரத்தப்பட்டனர். பிடுங்கிய கற்றாழைகளும் அங்கேயே மீண்டும் வைக்கப்பட்டன.

சம்பவம்தொடர்பில்கருத்துத்தெரிவித்தஉறுப்பினர்பொன்ராசா. இந்தப்பகுதிக்குச்சொந்தமானபொருள்களைச்சூறையாடுவதற்குஇவர்கள்போன்றுபலர்வருகின்றனர். எனவே இந்தப் பகுதி மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (4,21)

## வெள்ள இடர் காரணமாக 5,000 வாழ்வாதார உயிரினங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் சாவு

### மாவட்டச்செயலக புள்ளிவிவரம் தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 31

முல்லைத்தீவுமாவட்டத்தில்கடந்தவாரம்பெய்தகடும்மழை மற்றும் வெள்ளத்தால் மக்களின் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்பட்ட கால்நடைகளான ஆடு, மாடு, கோழி உள்ளிட்ட சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிரினங்கள் இறந்துள்ளன என்று மாவட்ட புள்ளிவிவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மக்கள்தங்கள்வீடுகளில்வாழ்வாதாரத்துக்காகவளர்த்துவந்தகோழிகளில்முல்லைத்தீவுமாவட்டத்தில் 3ஆயிரத்து 363 கோழிகள் வெள்ளத்தில் அடித்துச் சென்று உயிரிழந்துள்ளன. பட்டிகளில் வளர்க்கப்பட்ட 363 ஆடுகள்மழைவெள்ளத்தால்உயிரிழந்துள்ளன. ஆயிரத்து 270 மாடுகள் உயிரிழந்துள்ளன.

குறிப்பாகப்பட்டிகளில்கட்டப்பட்டமாடுகள்பலவெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. கன்றுக்குட்டிகள் குளிர் தாங்கமாட்டாமலும் நீரில் மூழ்கியும் உயிரிழந்துள்ளன.

பயன்தரும் கால்நடைகளே உயிரிழந்துள்ளன. குறிப்பாக ஒட்டுசுட்டான் பிரதேசத்திலும் புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலும் அதிகளவில் உயிரிழந்துள்ளன என்று மாவட்ட புள்ளிவிவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4,ரி3)

## சப்ரகமுவ மாகாண ஆளுநர் கிளிநொச்சி மக்களுக்கு உதவி



கிளிநொச்சி, டிசெ. 31

கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சப்ரகமுவ மாகாண ஆளுநர் நேற்று முன்தினம் உதவிப் பொருள்களை வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுனர் ரெஜினோல்ட்குரேஊடகங்கள்ஊடாக விடுத்த கோரிக்கைக்கமைய குறித்த உதவிகளை வழங்குகிறோம்என்றுசப்ரகமுவமாகாண ஆளுநர் நிலுக்கா ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அவர் உள்ளிட்ட குழுவினர் கிளிநொச்சிக்கு நேரடியாகவந்து உதவிப் பொருள்களை வழங்கினர். அவர்களுடன்வடக்குஆளுநரும் இணைந்துகொண்டிருந்தார்.

பொருள்களை வழங்கும் நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மு. சந்திரகுமார், படையினர் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(4,6)

**இறுதிச்சந்தர்ப்பம்**
**CIMA-UK ENGINEERING-USA**
**BIT - University of Colombo**
**புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள்** கோரப்பட்டுள்ளன. தொழில் தேடுவோர், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தோர், பல்கலைக்கழக மாணவர்கள் பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் வெளிநாடு செல்வோர் ஆகியோருக்கு ஏற்றது. கற்கைநெறி முடிவில் அரச வேலையிலும், வங்கிகளிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிகசம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்வாங்கப்படுவர். ஆகக்குறைந்த கல்வித் தகைமை க.பொ.த.சா.த சித்தி. விண்ணப்ப முடிவு திகதி 10 ஜனவரி. புலமைப் பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற்கும் உங்கள் முழுப்பெயர், கற்கைநெறி பிறந்த திகதி என பவற்றை 772395895 ற்கு sms செய்யவும். பதிவுக்கட்டணம், வருடாந்தக்கட்டணம், கற்கை நெறிக்கட்டணம், பரீட்சைக் கட்டணம் என்பன புலமைப்பரிசிலாக வழங்கப்படவுள்ளன. மேலதிக விபரங்களை யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள MCS நிறுவனத்தில். A.L 2018 மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில்

# படைவசமுள்ள காணிகளை விடுவிக்கத் தவறின் ஓரிரு நாள்களில் நாங்களாகவே குடியமர்வோம்!

## படையினரால் இடையூறுகள் ஏற்படின் மைத்திரிதான் பொறுப்பு

## முல்லையில் போராடும் மக்கள் சம்பந்தனுக்கு அவசரக் கடிதம்

முல்லைத்தீவு, டிசெ. 31

முல்லைத்தீவில் படையினர் வசமுள்ள மக்களின் காணிகள் இன்று திங்கட்கிழமை முழுமையாக விடுவிக்கப்படாவிட்டால், அடுத்துவரும்நாள்களில் விருப்பத்துடன் எமது காணிகளில் மீள்குடியமர்வோம். எமக்கு இராணுவத்தினரால் இடையூறு, முரண்பாடுகள் ஏற்பட்டால்நாட்டின் அரசதலைவரும் முப்படைகளின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவே பொறுப்புக்குரியவராவார்.

இவ்வாறு முல்லைத்தீவில் 670 நாள்களாகப் போராடிவரும் மக்கள் கடிதம் மூலமாகக் கூறியுள்ளனர். இது பற்றிய கடிதத்தை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைவர் இரா. சம்பந்தனுக்கு அனுப்பியுள்ளனர். அரசதலைவருக்குத் தெரியப்படுத்தும் நோக்கில் இது அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கேப்பாப்பிலவின் பூர்வீக மக்களாகிய நாம் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அந்த இடங்களை விட்டுச்செல்ல இராணுவத்தினர் எங்கள் நிலங்களை அபகரித்து வைத்துள்ளனர். அந்தக்காணிகளைவிடுவிக்குமாறு கோரி 670 நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

2009 ஆண்டு நடைபெற்ற இறுதிப் போரின் போது எமது சொத்துக்களை இழந்து நிர்க்கதியான நிலையில் எமது சொந்த ஊரைவிட்டு இடம்பெயர்ந்தோம். பின்னர் கேப்பாப்பிலவு மாதிரிக்கிராமத்தில் மீள்குடியமர்த்த ப்பட்டோம். ஜனநாயக அரசு எங்களை மீள்குடியமர்த்தும் என்று எமது கிராம அலுவலர் பிவுக்குள்ளேயே 10 வருடங்களுக்கு மேலாக அகதிகளாக வாழ்ந்து கொண்டிருந்தோம். எமது பூர்வீக வாழ்விடம் எமக்கு வேண்டும் என்று பல வடிவங்களில் உரிமைக் குரல் கொடுத்தோம். அரசுபாராமுகமாக இருக்க எமது வாழ்விடத்தை நாமே பெற்றெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

'எமது பூர்வீக வாழ்விடங்கள் எமக்கு வேண்டும்' என்று அகிம்சை வழிப்போராட்டத்தை 2017 மார்ச் முதலாம் திகதியன்று ஆரம்பித்தோம். இன்றுவரை தொடரும் எமது போராட்டத்தின் நியாயத்தை, தார்ப்பரியத்தை அரசு ஏற்கவில்லை.

எமது போராட்டத்துக்கு முழுமையான நிரந்தரமான தீர்க்கமான தீர்வை அரசு இதுவரை பெற்றுத்தரவில்லை என்பது எங்களை மிகவும் வேதனைக்குள்ளாக்குகின்றது. அரச தலைவர் இதைப் புரிந்துகொள்கிறாரில்லை.

### யாருக்கும் நாங்கள் எதிரானவர்களல்லர்!

நாம் அரசுக்கோ இராணுவத்தினருக்கோ தேசியநல்லிணக்கசமாதானத்துக்கோஎதிரானவர்களல்லர்!

எமது வாழ்விடத்தில் நிம்மதியாக சுதந்திரமாக எங்களால் வாழமுடியவில்லை என்பதால் தான் இந்தப் போராட்ட நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டோம் என்பது தாங்களும் பன்னாடுகளும் அறிந்த உண்மையே. போர்க்காலத்தில் இடம்பெயர்ந்த 138 குடும்பங்களின் 282 ஏக்கர் வாழ்விடக்காணிகள், 8 நபர்களின் 25 ஏக்கர்திட்டமத்தியவகுப்புக்காணிகள் உட்பட்ட 200 ஏக்கர் உள்ளடங்கலாக மொத்தம் 482 ஏக்கர் காணித் துண்டங்கள் விடுபடும் வரை எமது கவனவீர்ப்புப்போராட்டத்தைக்கைவிடமாட்டோம் என்ற மனவுறுதியுடனும் காணி அத்தாட்சிப் பத்திர உறுதியுடனும் போராட்டத்தைத் தொடர்கின்றோம்.

எமது போராட்டத்தின் கோரிக்கைகளை அரச தலைவருக்கு நீங்கள் எடுத்துரைத்ததற்கு அமைய போராட ஆரம்பித்து 303 நாள்களுக்குப் பின்னர் 104 குடும்பங்களின் 171 ஏக்கர் காணியும் மக்களின் பொது அமைவிடங்களான பாடசாலை, பொதுநோக்கு மண்டபம், சனசமுகநிலையம், முன்பள்ளி, பொதுக்கிணறு, ப.நோ.கூ. சங்கம், பொதுவிளையாட்டு மைதானம், இந்து, கிறிஸ்தவ மயானங்கள், கிறிஸ்தவ ஆலயம் போன்றன இராணுவ ஆக்கிரமிப்பிலிருக்கின்றன. அவ்வாறிருக்க 65 பேருக்குச் சொந்தமான 111 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டு 38 குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்பட்டமைக்கு எமது நன்றிகள்.

எனினும், 71 ஏக்கர் மக்கள் வாழ்விடக்காணிகள் 25 ஏக்கர்திட்ட பெருந்தோட்டக்காணி, 100 ஏக்கர் காணிகள் உள்ளடங்கலாக (காணி அத்தாட்சிப்பத்திரமுடைய) 104 குடும்பங்களின் 171 காணிகள் விடுவிக்கப்படவில்லை. கொட்டும் மழை, பனியிலும் நுளம்புத் தொல்லையுடன் குழந்தைகுட்டிகளுடன் எதிர்காலமழலைகளின் கல்வி கலாசாரம் பண்பாடு சீரழியும் நிலையில் நாற்சந்தி தெருவோரத்தில் 670 நாள்களாக கிடக்கும் எமது வாழ்விடத்துக்கு ஒரு தீர்வு இல்லை என்பதை நாங்கள் தங்களுக்குச் சுட்டிக்காட்டுகின்றோம்.

இன்று 671 ஆவது நாளாக அதாவது 22 மாதங்களும் 5 ஆவது நாளாகவும் எமது போராட்டம் தொடர்கின்றது.

இந்த நிலையில் அரசதலைவர் டிசெம்பர் 31ஆம் திகதிக்கிடையில் சகலமக்களின் காணிகளும் கையளிப்பேன் என்று வாக்குறுதியளித்திருந்தார். கேப்பாப்பிலவு மக்களின் காணிகள் தொடர்பில் ஆராயப்படும் என்று தெரிவித்திருந்தார் என்றும் நாங்கள் ஊடகங்கள் வாயிலாக அறிந்துள்ளோம். எமது வாழ்விடத்தில் மீள் குடியமர்த்தப்படுவோம் என்ற ஆதங்கத்துடன் நாம் எதிர்பார்த்திருந்தோம். ஆனால் டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் காணிகள் விடுவிக்கப்படும் என்று அரசதலைவர் விட்ட அறிவிப்புக்கு அமைய காணிகள் விடுவிப்புப் பட்டியலில் எமது வாழ்விடங்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதை மாவட்டச்செயலர் மூலமாக அறிந்து சொல்லணா கவலையில் மூழ்கியுள்ளோம்.

672 நாள்களாகப் போராடிய நாம் இனியும் காலம் தாழ்த்தவோ பொறுத்துப் போராடக்கூடிய நிலையிலோ நாம் இல்லை என்பதை மனவருத்தத்துடன் அறியத் தருகிறோம்.

டிசெம்பர் 31ஆம் திகதிக்கிடையில் இன்று அரசதலைவர் எமது மக்கள் வாழ்விடக் காணிகளை கட்டம்கட்டமாக அன்றி முழுமையாகக் கையளிக்காவிட்டால் அடுத்துவரும் நாள்களில் எமது பூர்வீக நிலங்களில் எமது சொந்த விருப்பத்து டன் மீள்குடியமர்வோம். அதன் போது எமக்கு இராணுவத்தினரால் இடையூறுகள், முரண்பாடுகள் ஏற்பட்டால் நாட்டின் தலைவரும் முப்படைகளின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவே பொறுப்புக்குரியவராவார்! அவரே பொறுப்புக்கூற வேண்டும் என்பதை மிகுந்த மனவேதனையுடன் ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்று போராடிவரும் மக்கள் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4,ரி3)

---

# பொது, போதனா மருத்துவமனைகளிலுள்ள வசதிகள் ஏனைய மருத்துவமனைகளுக்கும்

## சுகாதார இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிசெ. 31

பொது மற்றும் போதனா மருத்துவமனைகளில் உள்ள வசதிகள் இனிமேல் ஏனைய மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்தப்படும். சிறப்பு மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படும் என்று சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் தெரிவித்துள்ளார்.

அவர் இராஜாங்க அமைச்சரானதும் அவரை வரவேற்கும் நிகழ்வு மட்டக்களப்பு நிந்தவூரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார் என்று அவரது ஊடகப் பிரிவு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாருடாக எதைச் சாதிக்கலாம் என்பதை அறிந்து அதன்பின்னர் நிந்தவூர் மருத்துவமனை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டேன்.

எமது மக்களின் நலனையும் மருத்துவமனைகளின் பௌதிக தேவைகளையும் கவனத்திற்கொண்டு கண், காது, சிறுவர், மகளிர் மகப்பேற்று, அறுவை சிகிச்சை உள்ளிட்ட பிரிவுகளை மருத்துவமனைகளில் உருவாக்கி சகல பகுதிகளிலுமுள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முயற்சியெடுத்து வருகின்றேன்.

எமது பகுதிகளில் பொது மற்றும் போதனா மருத்துவமனைகள் இல்லை. இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு சகல பிரதேச மருத்துவமனைகளிலும் ஒவ்வொரு சிறப்பு மருத்துவப் பிரிவுகளை உருவாக்கி அவற்றினூடாகப் பொது மற்றும் போதனா மருத்துவமனைகளை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறேன்.

அரசியல் குழப்பங்கள் நிலவிய 51 நாள்களில் அமைச்சர் பதவி இல்லாமல் போனதையிட்டு நான் கவலையடையவில்லை. எமது மக்களுக்காக முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நிறைவு செய்து மக்களிடம் கையளிக்க முடியாமல் போய்விடுமே என்றுதான் கவலைப்பட்டேன்.



ஆனால், இறைவனின் ஏற்பாட்டில் உங்களுக்குப் பணியாற்ற மீண்டும் ஒரு படி உயர்வாகச் சுகாதார இராஜங்க அமைச்சராக வந்துள்ளேன்.

நிந்தவூர் பிரதேச சபை என்னால்கொண்டு வரப்படும் அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை. நகர திட்டமிடல் அமைச்சு ஒதுக்கீடு செய்த 40 மில்லியன் ரூபா நிதி திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது நிந்தவூர் பிரதேசத்தில் தலைமை அமைச்சருடைய நிதியிலிருந்து 600 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வீதி அபிவிருத்தி இடம்பெற்று வருகின்றது. அதனைத் தடுப்பதற்குப் பிரதேச சபை பல முட்டுக்கட்டைகளைப் போட்டது.

இந்த அபிவிருத்தி பைசல் காசிமுக்கு சொந்தமானதல்ல. உங்கள் ஊர் மக்களுக்குச் சொந்தமானது. நிந்தவூர் பிரதேச சபையை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கையில் கொடுத்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. சபை மாற்றுக் கட்சிக்கு சென்றதால் தனது அபிவிருத்தி வேலைகளின் வேகம் குறைவடைந்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார் - என்றுள்ளது.

(4)

---

### ஈருருளிகள் திருடினார் என்று பருத்தித்துறையில் ஒருவர் கைது

#### இதுவரையான விசாரணையில் 9 ஈருருளிகள் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், டிசெ. 31

பருத்தித்துறை நகர்ப்பகுதியில் தொடர்ந்து ஈருருளிகளைத் திருடிவந்தார் என்ற குற்றச்சாட்டில் மானிப்பாயைச்சேர்ந்த 29 வயதுடையவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் நடத்திய விசாரணையிலிருந்து இதுவரை 9 ஈருருளிகள் மீட்கப்பட்டுள்ளன என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் இரண்டு நாள்களுக்கு முன்னர் ஈருருளியைவீதியில் இழுத்தவாறு சென்றுள்ளார். அவரிடம் என்ன நடந்தது என்று பொலிஸார் கேட்டபோது அவர் ஈருருளியை விட்டு ஓடமுற்பட்டார். அவரைப் பிடித்து விசாரித்தபோதே அவர் ஈருருளியைத் திருட முற்பட்டமைதெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் திருடிவிற்றார் என்று அவர் விசாரணையில் தெரிவித்தவற்றுள் இதுவரை 9 ஈருருளிகள் மீட்கப்பட்டுள்ளன. அவை பொலிகண்டி, பருத்தித்துறை, மல்லாகம், யாழ்ப்பாணம் பகுதிகளில் விற்கப்பட்டு ள்ளமையும் தெரியவந்தது. அவை மீட்கப்பட்டன. அவர் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. மீட்கப்பட்டவற்றுள் 2 ஈருருளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏனையவை இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(4,26)

# இலவச கற்கை நெறிகள் புதன்கிழமை ஆரம்பம்

கிளிநொச்சி, டிசெ. 31

தற்கால வேலை வாய்ப்பைக் கருத்திற்கொண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் தொழிற்கற்கை நிலையங்களில் அடுத்த ஆண்டு கற்கை நெறிகளை இலவசமாக நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

பளைதொழிற்பயிற்சிநிலையத்தில்தகவல்தொடர்பாடல் தொழிநுட்பவியலாளர், கட்டட அமைப்பு உதவியாளர் மற்றும்வீட்டுமின்இணைப்பாளர் ஆகிய கற்கை நெறிகளுக்கும், பூநகரி தொழிற்பயிற்சி நிலையத்தில் தையல் மற்றும் வெளியிணைப்புஇயந்திரதிருத்துநர் ஆகிய கற்கை நெறிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான பதிவுகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

இவற்றைக் கற்க விரும்புபவர்கள்தங்கள்பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம்,155ஆம்கட்டை, ஏ9வீதி, கிளிநொச்சிஅல்லது அந்தந்தத் தொழிற்பயிற்சி நிலையத்தில் பதிவு செய்யவும்.

நாளை மறுதினம் புதன்கிழமை பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளனஎன்று இலங்கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட தொழிற்பயிற்சி நிலைய உதவிப் பணிப்பாளர் இரா. அகிலன் தெரிவித்துள்ளனர். (4)

# தொடருந்துகளில் பொதிகளை ஏற்ற மறுக்கின்றனர் அதிபர்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 31

தொடருந்துகளில் பொதிகளை ஏற்றுவதற்குத் தொடருந்துநிலைய அதிபர்கள் மறுப்புத்தெரிவிக்கின்றனர் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னையகாலங்களில்தொடருந்துகளில்தென்பகுதிக்குப் பொதிகள் அனுப்பப்பட்டன. தொடருந்து சாரதிகள் பாதுகாவலர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட பின்னர்பொதிகளைஏற்கபாதுகாவலர்கள்மறுத்துவருகின்றனர் என்று நிலைய அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

கோரிக்கைகளை முன்வைத்து தொடருந்துச் சாரதிகள் மற்றும் பாதுகாவலர்கள் அண்மையில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவிருந்தனர். பின்னர் சாரதிகள் பணிப்புறக்கணிப்பைவிலக்கிக்கொண்டுதொடருந்து சேவையை ஆரம்பித்துள்ளனர்.

எனினும் பாதுகாவலர்கள், தமது கோரிக்கை நிறைவேற்றப்படாத நிலையில் கடமை செய்து வருகின்றனர். அதனால் தொடருந்து நிலையங்களில் ஏற்றுக்கொள்ளப்படும் பொதிகளைப் பாதுகாவலர்கள் ஏற்க மறுக்கின்றனர்என்றும்அதனால்நிலையஅதிபர்கள் பொதிகளைதொடருந்துகளில்ஏற்றுவதற்குத்தயக்கம் காட்டிவருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் நாவற்குழி, கொடிகாமம்ஆகியதொடருந்துநிலையஅதிபர்களுடன்நேற்று முன்தினம் தொடர்பு கொண்டபோது "நாங்கள் பொதிகளைப் பொறுப்பேற்று வைத்திருந்தால் தொடருந்துகளின் பாதுகாவலர்கள் அவற்றை ஏற்க மறுக்கின்றனர். அதனால் உடனடியாகத் தொடருந்துகளில் பொதிகளை அனுப்பமுடியவில்லை. பழுதடையக்கூடிய பொருள்களைப் பொறுப்பேற்று உரிய காலத்தில் அவைகொண்டுசெல்லப்பட்டுவழங்கப்படாவிட்டால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படலாமென்று கருதி பொதிகள்ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இதுதொடர்பாகமேலிடத்துக்கு அறிவித்து அவர்கள் தரும்திகதிகளில் பொதிகளைப் பொறுப்பேற்கிறோம்" என்று தெரிவித்தனர். (4,9)

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு

# விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு அடுத்தவருடம் அமைக்கப்படும்!

## வடக்குக்கு 150 தாதியர்களும் நியமிக்கப்படுவரென்று சுகாதார அமைச்சர் ராஜித கிளிநொச்சியில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 31

**கிளிநொச்சி மருத்துவமனைக்கு விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு, மருந்து வழங்கல் மற்றும் களஞ்சியம் என்பன அடுத்தவருடம் அமைக்கப்படும். வடக்குக்கு 150 தாதியர்களும் அடுத்தவருடம் நியமிக்கப்படுவர் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.**

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமை, மருத்துவ தேவைகள் குறித்து ஆராயும்நோக்கில்அவர்கிளிநொச்சிக்கு நேற்றுமுன்தினம் வந்திருந்தார். கிளிநொச்சி மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தில்அவர், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின்தேவைகள்தொடர்பில் ஆராய்ந்தார். இதன்போதே மேற்படி விவரத்தைத் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரம் சார் பணியாளர்கள், மாகாணசுகாதாரத்திணைக்களஅதிகாரிகள்மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்டோர் பங்கு கொண்டிருந்தனர்.

சந்திப்பில் சுகாதார அமைச்சர் இரு மாவட்டங்களிலும்வெள்ளஇடரின்பின்னரானநிலமைகள், மாவட்டத்தின்நிரந்தர நிலமைகள் ஆகியவற்றைக் கேட்டறிந்துகொண்டார். அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் எலும்பு முறிவு, நெறிவு சிகிச்சைக்கானவசதிகள்ஏற்படுத்தப்படும். மருத்துவர் பற்றாக்குறை தொடர்பில் கவனம் செலுத்தப்படும். ஆளணி அங்கீகாரம் மீளாய்வு செய்யப்பட்டு நிரப்பப்படும்.

தற்போது காணப்படும் தாதிய வெற்றிடங்களுக்கு வடக்கு மாகாண சபைக்கு விரைவில் 150 தாதியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

இவை வடக்கில் பகிர்ந்தளிக்கப்படும் என்று அவர் உறுதியளித்துள்ளார்.

இவற்றைவிட, முல்லைத்தீவுமாவட்டத்தில் அடுத்த வருடம் நோயாளர்களுக்கான அடுக்குமாடி மருத்துவ விடுதி



அமைக்கப்படும். இதற்கான தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டு திட்ட அறிக்கைகள் செலவு மதிப்பீடுகளைத் தயாரித்துஉரியமுறையில்விரைவாக அனுப்பி வைக்க வேண்டும் என்று அமைச்சர்அதிகாரிகளுக்குப்பணித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (4,105)

# ஆன்மீகப் பரப்புரையாளர்களுக்கு காரைநகரில் களப்பயிற்சி



ஆன்மீகப் பரப்புரையாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நெறியைப் பின்பற்றும் ஆர்வலர்களுக்கான களக்கற்கை காரைநகர்திண்ணபுரம்சிவன் கோவிலில் நேற்று முந்தினம் இடம்பெற்றது.

ஆலய அமைப்பு முறைமை மற்றும் ஆலயம் சார்ந்த விடயங்கள்பற்றியவிளக்கங்களை சிவன் ஆலய பெருவிழாக் குரு சிவசிறி தி. உமாசுதக் குருக்கள் மற்றும் கற்கை நெறியின் வளவாளர்களானசிவசிறிதி. மயூரகிரிக்குருக்கள், செந்தமிழ்ச்சொல்லருவி ச. லலீசன் ஆகியோர் வழங்கினர். இந்து சமய கலாசார அலுவல்கள்திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நாவலர் கற்கைகள் நிலையத்தில்(ஆனைப்பந்தி குருகுலம்) பரப்புரையாளர்களுக்கான பயிச்சி இடம்பெறுகிறது. (4)

# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். இளைஞர் அணி தெரிவானது

யாழ்ப்பாணம், டிசெ. 31

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் அணிக்கான தெரிவுகள் யாழ்ப்பாணம் மாட்டீன் வீதியில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்றது.

தேர்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவைசேனாதிராசா, ஈ. சரவணபவன் மற்றும் கட்சியின் பொருளாளர் கனகசபாபதி, நிர்வாகச் செயலாளர் சேவியர் குலநாயகம் ஆகியோர் முன்னிலையில் தெரிவுகள் இடம்பெற்றன. இதன்போது மாவட்ட இளைஞர் அணித் தலைவராக பிருந்தாபன் (உடுவில் தொகுதி), செயலராக சேனாதிராசாகலைஅமுதன்(காங்கேசன்துறைத் தொகுதி), உபசெயலராக கருணாகரன் குணாளன் (ஊர்காவற்துறைத் தொகுதி, தீவகம்), உபதலைவர்களாக றேக்கன் (கோப்பாய்), நிதர்சன் (மருதங்கேணி), பொருளாளராக தனபாலசிங்கம் சுதர்சன் (சாவகச்சேரி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவற்றின்அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்ட இளைஞரணிக்கான பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் விரைவில் நடத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (4,105)

# மாணவரின் பரீட்சைப் பெறுபேறுகளை நள்ளிரவில் வெளியிடுவது மோசமானது!

## அது மனித உரிமை மீறல் என்றும் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிக்கிறது

யாழ்ப்பாணம், டிசெ. 31

இலங்கையில் நடைபெறும் பாடசாலை சார்ந்த மாணவர்களின் பரீட்சைமுடிவுகளைநள்ளிரவில்வெளியிடும்நடைமுறை மிகமோசமான செயற்பாடு என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

13 ஆண்டுகாலம் பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து, பரீட்சை எழுதி பெறுபேற்றை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் மாணவர்களின் பெறுபேறுகளை பொருத்தமில்லாத நேரத்தில் அதுவும்நடுச்சாமத்தில்வெளியிடும் நடைமுறை இலங்கையில் பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன. இதுகண்டிக்கத்தக்கதுமட்டுமன்றி கல்வி உளவியல் சார்ந்த கல்வியியலாளர்களும், பெற்றோர்களும்கூட கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் மாணவர் சார்ந்த பரீட்சைப் பெறுபேறுகளைநள்ளிரவில்வெளியிடும்நடைமுறைஏன்பின்பற்றப்படுகின்றதுஎன்றுபலர்பலஆண்டுகளாகக்கேட்டுவருகின்றனர். ஆனால்விடை தெரியாமல் உள்ளது.

இலங்கையில் பொருள்களின் விலைமாற்றம் உட்பட பல அறிவிப்புக்கள் நடுச்சாமத்திலேயே அறிவிக்கப்படுகின்றது. இதற்கான காரணத்தை மக்கள் பிரதி நிதிகளாக நாடாளுமன்றில் உள்ளவர்களும் அங்கீகரிப்பது வேதனையான விடயம்.

மனிதமனங்களின்தாக்கம், குழந்தைகளில்ஏற்படும்உளவியல் ரீதியிலான தாக்கங்கள், அதனால் ஏற்படும் விளைவுகள்இவையெல்லாம்கருத்தில்கொள்ளப்படாமல்நடந்துகொள்வதைஏற்றுக்கொள்ளமுடியாது. இதுமனிதஉரிமைகளை மீறும் செயல்.

இதனோடுசம்பந்தப்பட்டவர்கள் இனிவரும் காலங்களில் இதுபோன்றநடைமுறைகளைக் கைவிட்டுமனிதமனங்கள்பாதிக்கப்படாதவகையில்பாடசாலைப்பிள்ளைகளின் மனங்கள் பாதிக்கப்படாத வகையில் தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுக்கிறது - என்றுள்ளது. (4)



# மூடுந்து - சிற்றூர்தி மோதி விபத்து

*புன்னாலைக்கட்டுவனில் சம்பவம்*

யாழ்ப்பாணம், டிசெ. 31

புன்னாலைக்கட்டுவனிலிருந்து புன்னாலைக் கட்டுவன் சந்தியை நோக்கி வேகமாக வந்த மூடுந்தும் (ஹைஏஸ்), யாழ்ப்பாணத்திலிருந்து புன்னாலைக்கட்டுவன் சந்தியை நோக்கி வந்த சிற்றூர்தியும் (மினிவான்) மோதி நேற்று மாலை விபத்துக்குள்ளாகின. மூடுந்திலிருந்த பெண் ஒருவர் காயங்களுடன் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவ்வாறு சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த பெண் ஒருவரை மூடுந்தில் ஒருவர் ஏற்றிச் சென்றுள்ளார். அந்தப் பெண்ணின் கணவன், மூடுந்தை உந்துருளியின் மூலம் விரட்டிச் சென்றுள்ளார். மூடுந்து வேகமாகச் சென்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து புன்னாலைக் கட்டுவன் சந்தியை நோக்கி வந்த சிற்றூர்தியுடன் வேகமாகச் சென்ற மூடுந்து மோதியுள்ளது. மூடுந்திலிருந்த பெண் காயமடைந்தார்.

மூடுந்தின் சாரதி, சிற்றூர்தியின் சாரதி, உந்துருளியில் சென்ற மூவரும் பொலிஸாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மூடுந்தின் சாரதி தனது மனைவியை (காயமடைந்த பெண்) கடத்திச் சென்றுள்ளதாக உந்துருளியில் வந்தவர் விசாரணைகளின்போது தெரிவித்துள்ளதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (5,7,26)

# கசிப்பு வைத்திருந்த சந்தேகத்தில் பெண்கள் இருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 31

துன்னாலைக் கிழக்கைச் சேர்ந்த இரண்டு பெண்கள் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள்நீதிமன்றத்தில்முற்படுத்தப்பட்டபோது ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஒரு பெண்ணிடமிருந்து 4 லீற்றர் கசிப்பு, 20 லீற்றர் கோடாவும் மற்றைய பெண்ணிடமிருந்து 2 லீற்றர் கசிப்பு, 15 லீற்றர் கோடாவும் தம்மால் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (5,26)

## ஒருமித்த...

கண்டிக்குச் சென்று மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய அரசமைப்பில் உள்ளவாறு ஒற்றையாட்சி தொடர்ந்தும் பேணப்படும் என்று தெரிவித்திருந்தார். அது ஊடகங்களில் வெளியாகியிருந்தது. இது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன், ரணில் விக்கிரமசிங்க மகாநாயக்க தேரர்களுடன் தமிழிலா உரையாடினார். அவர் ஒற்றையாட்சி என்றா கூறினார். ஏக்கிய ராஜ்ஜியவுக்கு இடைக்கால அறிக்கையில் தெளிவாகவே வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது. அது ஒற்றையாட்சியைக் குறிக்கவில்லை. ஒருமித்த நாடு என்பதையே குறிப்பிடுகின்றது என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்ற அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவிடம், சுமந்திரன் தெரிவித்த கருத்துத் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், "புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அவை முடிவடைந்த பின்னர் அடுத்த வருடம் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படும். தற்போதுள்ள அரசமைப்பில் பௌத்த மதத்துக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித மாற்றமும் செய்யப்படாது. புதிய அரசமைப்பிலும் 9 ஆவது சரத்து அவ்வாறே நீடிக்கும் என்பதை உறுதியாக கூறுகின்றோம்.

அதேபோல் 'ஏக்கிய' என்ற சொற்பதத்திலும் எவ்வித மாற்றமும் செய்யப்படாது. தமிழில் 'ஒருமித்த நாடு' என்ற பதத்தை இணைக்குமாறு தமிழ்க் கட்சிகள் கோரிக்கை முன்வைத்தன. எனினும், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மும்மொழிகளிலும் 'ஏக்கிய' என்ற சொற்பதமே இடம்பெற்றிருக்கும்"- என்றார்.

இடைக்கால அறிக்கையில் ஏக்கிய ராஜ்ஜியவுக்கு ஒருமித்த நாடு என்று கூறப்பட்டுள்ளதே என்று மீண்டும் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அமைச்சர் கிரியெல்ல, "வெளிவந்துள்ளது இடைக்கால அறிக்கைதானே? அது இறுதி அரசமைப்பு இல்லையே" - என்றார். (5)

## பல்கலை...

வர்களை இணைத்துக் கொள்வது தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் கையேடுகள் தற்போது அச்சிடப்பட்டுள்ளன. எதிர்வரும் தினங்களில் இவற்றை மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தக் கையேட்டை சரியான முறையில் விளங்கிக்கொண்டு தாம் விண்ணப்பிக்கக் கூடிய ஆகக்கூடிய கற்கை நெறிக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது முக்கியமானது. சில மாணவர்கள் இரண்டு அல்லது 3 கற்கை நெறிகளுக்கு மாத்திரம் விண்ணப்பிக்கின்றனர். மாணவர்களுக்கு பொருத்தமான கற்கை நெறி இல்லாமல் போகின்றது.

ஆரம்பத்திலேயே சரியான கோரிக்கையை முன்வைக்காமையால் பின்னர் அந்த கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க முடியாது - என்றார். (5)

## மைத்திரியின்...

என்று இராணுவம் அறிவித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான அரச தலைவர் செயலணியின் கூட்டம் ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி நடைபெற்றது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்புத் தரப்பினர் வசம் உள்ள தனியார் காணிகள் அனைத்தும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்கப்படும் என்று அரச தலைவர் தெரிவித்திருந்தார். இதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அந்தக் கூட்டத்தில் பணிப்புரை விடுத்திருந்தார்.

இதன் பின்னர் மாகாண ஆளுநர்கள் தலைமையில் காணி விடுவிப்புத் தொடர்பான கூட்டங்கள் பாதுகாப்புத் தரப்பினருடன் நடத்தப்பட்டிருந்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான அரச தலைவர் செயலணியின் கூட்டம் நவம்பர் மாதம் இடம்பெற்றபோதும், தனியார் காணிகள் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்கப்படும் என்று அரச தலைவர் கூறியிருந்தார்.

இந்த நிலையில் மிகச் சொற்பமான காணிகளை விடுவிப்பதற்கு மாவட்டச் செயலகங்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் அதனை ஒத்தி வைத்துள்ளது.

இராணுவம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள ஆயிரத்து 99 ஏக்கர் விவசாய நிலங்கள் விடுவிக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜெயபுரம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில், வனப்பாதுகாப்பு திணைக்களத்துக்கு உரித்தான 194 ஏக்கர் நிலப்பரப்பும் குறித்த கிராம அலுவலர் பிரிவிலுள்ள மேலும் 285 ஏக்கர் நிலப்பரப்பும் விடுவிக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட உடையார் கட்டுக்குளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள வனப்பாதுகாப்பு திணைக்களத்துக்கு உரித்தான 120 ஏக்கர் நிலப்பரப்பும் மன்னார் - மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வெல்லம்குளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள வனப்பாதுகாப்பு திணைக்களத்துக்கு உட்பட்ட 500 ஏக்கர் நிலப்பரப்பும் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் தரப்பினர் வசம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 10 ஆயிரத்து 181 ஏக்கர் தனியார் காணிகள் உள்ளன. அவற்றை இன்றைய தினத்துக்குள் விடுவிப்பதாக அரச தலைவர் உறுதியளித்தபோதும் அது நடைபெறவில்லை.

இதேவேளை, 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தேசிய நத்தார் தின விழாவில் பங்கேற்ற அரச தலைவர் மைத்திரிபால, 6 மாதங்களுக்குள் வலி. வடக்கில் முழுமையாக காணிகள் விடுவிக்கப்படும் என்று உறுதியளித்திருந்தார். அதுவும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5,105)

## சந்திரிகா...

கைவிடுத்து, சந்திரிகா அம்மையாரின் தலைமையில் செயற்படுவது தொடர்பில் பேச்சுக்கள் நடத்தப்பட்டுவருகின்றன. கொழும்பு அரசியல் களம் மீண்டும் சூடுபிடித்துள்ளது.

அடுத்த அரச தலைவர் தேர்தலின் பின்னர் சுதந்திரக்கட்சியை முழுமையாகக் கைப்பற்றிவிடவேண்டும் என்பதிலும் மேற்படி தரப்புக் குறியாக இருப்பதாக தகவல்.

அதேவேளை, இந்தத் திட்டத்தை தடுக்கும் முயற்சியில் மைத்திரியின் சகாக்கள் இறங்கியுள்ளனர். புதுவருடத்தில் சுதந்திரக்கட்சி முழுமையாக மறுசீரமைக்கப்படவுள்ளது. அனைத்து தொகுதிகளுக்கும் புதிய அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். (5)

## தேசிய...

மாணவர்களின் சித்தி வீதம் அதிகரித்திருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய ரீதியாக முதல் மூன்று இடங்களை ஒவ்வொரு துறையிலும் பெற்ற மாணவர்களின் விவரங்களை பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

உயிரியல் விஞ்ஞான பிரிவில், கம்பகா ரத்னவெலி மகளிர் கல்லூரி மாணவி கலனி ராஜபக்ச முதலாம் இடத்தையும், கொழும்பு டீ. எஸ். சேனநாயக்க கல்லூரி மாணவி ரவிந்து சசிக இரண்டாம் இடத்தையும், மாத்தளை சாகிரா கல்லூரி மாணவன் ஹக்கீம் கரீம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்கள்.

பௌதிக விஞ்ஞானப் பிரிவில், கொழும்பு விசாகா மகளிர் கல்லூரி மாணவி சத்துனி விஜகுணவர்த்தன முதலாம் இடத்தையும், காலி ரிச்சட் கல்லூரி மாணவன் சமிந்து லியனகே இரண்டாம் இடத்தையும், கொழும்பு ரோயல் கல்லூரி மாணவன் தெவிந்து விஜசேகர மூன்றாம் இடத்தையும் பெற்றுளார்கள்.

வர்த்தகப் பிரிவில், குருநாகல் மலியதேவ வித்தியாலய மாணவன் கசுன் விக்ரமரத்ன முதலாம் இடத்தையும், கம்பகா ரத்னாவலி மகளிர் கல்லூரி மாணவி உச்சினி ரணவீர இரண்டாம் இடத்தையும், கொழும்பு மியுசியஸ் கல்லூரி மாணவி மலிதி ஜயரத்ன மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்கள்.

கலைப் பிரிவில், முதலாம் இடத்தை பாணந்துறை லைஸியம் பன்னாட்டுப் பாடசாலை மாணவன் சேனதி அல்விஸும், குருநாகல் மலியதேவ வித்தியாலய மாணவி சித்துமினி எதிரிசிங்க இரண்டாம் இடத்தையும், கண்டி மகாமாயா மகளிர் கல்லூரி மாணவி இஷானி உமேஷா மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்கள்.

பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில், கொழும்பு ஆனந்தா கல்லூரியைச் சேர்ந்த மாணவன் யசாஸ் பத்திரன முதலாம் இடத்தையும், தரிந்து ஹேஷான் இரண்டாம் இடத்தையும், நிக்கவரெட்டிய மகாசேன் கல்லூரியைச் சேர்ந்த சேஷான் ரங்கன மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்கள்.

தொழில்நுட்பவியல் பிரிவில், கம்புருப்பிட்டிய நாரன்தெனிய மத்திய மகா வித்தியாலய மாணவி சந்துனி கொடிப்பிலி முதலாம் இடத்தையும், சம்மாந்துறை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி ரிசா மொஹமட் இரண்டாம் இடத்தையும், ஹோமாகம மகிந்த ராஜபக்ச வித்தியாலய மாணவி விசிந்து லக்மால் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்கள். (5)

## மோட்டார்...

மீற்றர் தூரத்தில் உள்ள வெற்றுக் காணியிலிருந்து பழுதடைந்த மோட்டார் குண்டு நேற்று மதியம் மீட்கப்பட்டுள்ளது. (5,106)

## வடமாகாண...

காலம் ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தது. மாகாணசபை தேர்தல் இன்னமும் நடத்தப்படவில்லை. தேர்தல் முறைமை தொடர்பான இழுபறியால் இந்த நிலமை நீடிக்கின்றது.

இந்த நிலையில், வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் நடைபெறும் வரையில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் ஓர் அமைப்பாக கட்சி பேதமின்றி இணைந்து செயற்படுவதற்குத் தீர்மானித்துள்ளனர். இதன் முதலாவது கலந்துரையாடல் கிளிநொச்சியில் முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவின் வீட்டில் இடம்பெற்றுள்ளது: 20 உறுப்பினர்கள் வரையில் பங்கேற்றுள்ளனர்.

மாகாணசபையில் அங்கம் வகித்த ஈ.பி.ஆர். எல்.எவ். உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதாக ஆரம்பத்தில் தெரிவித்தபோதும் நேற்றைய தினம் கலந்து கொள்ளவில்லை. கட்சித் தீர்மானத்தின் காரணமாக கலந்து கொள்ள முடியவில்லை என்று அவர்கள் அறிவித்துள்ளனர். வடக்கு மாகாண முதலமைச்சரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

நேற்று சுமார் ஒன்றரை மணி நேரம் இடம்பெற்ற கலந்துரையாடலில் மூன்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாவட்டச் செயலகங்களிலும் இடம்பெறும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்ப வேண்டும் என்று மாவட்டச் செயலர்களிடம் கோருவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு அபிவிருத்தி அமைச்சு உள்ளிட்ட கொழும்பு அரசின் அமைச்சுக்கள் வடக்கு மாகாணத்தில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும்போது, மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களின் கருத்துக்களை உள்வாங்கவேண்டும். இது தொடர்பில் கடிதம் எழுதுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபை ஆட்சிக் காலத்தில் சுகாதாரத் தொண்டர் நியமனத்துக்கான பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டது. அந்தப் பெயர்ப் பட்டியலுக்கு வடக்கு மாகாண அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. அது தொடர்பில் மாகாணசபையில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருந்தது.

தற்போது அந்தப் பெயர்பட்டியலில் மாற்றம் செய்யப்படுவதாகவும், வெலி ஓயாவைச் சேர்ந்த பலரது பெயர்கள் அதில் உள்வாங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருடன் பேச்சு நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (5,105,246)

## கிணறுகளைக்...

இறைக்கும் பணியில் பாலி தெவரப்பெரும ஈடுபட்டார்.

கிணறுகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பூட்டுவது தொடக்கம், கிணற்றுக்குள் இறங்கி சேறு சகதிகளை அகற்றி, கிணற்றுச் சுவர்களை விளக்குமாறால் துப்புரவு செய்வது உள்ளிட்ட பணிகளில் பாலித தெவரப்பெரும ஈடுபட்டார். பிரதி அமைச்சர் என்ற எந்தவொரு 'பந்தாவும்' இல்லாமல் அவர் இந்தப் பணிகளில் ஈடுபட்டதை அந்தப் பகுதி மக்கள் மெச்சினர்.

மூன்று தினங்கள் தொடர்ச்சியாக கிளிநொச்சியில் அவர் இந்தப் பணிகளில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத்தில் நவம்பர் மாதம் 15ஆம் திகதி இடம்பெற்ற களேபரங்களின்போது, பாலித தெவரப்பெரும கையில் கத்தி வைத்திருந்ததான ஒளிப்படங்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5,35,214)

## வழக்கறிஞராவதே விருப்பம்

### கலைப்பிரிவில் மாவட்டரீதியில் முதலிடம் பெற்ற நிலக்சனா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.31

எதிர்காலத்தில் வழக்கறிஞராக வர வேண்டும் என்பதே எனது விருப்பம் என்று கலைப் பிரிவில் மாவட்ட ரீதியாக முதலிடம் பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி சிங்கராஜா நிலக்சனா தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு நேற்று முன்தினம் இரவு வெளியானது. அதில் கலைப்பிரிவில் மாவட்ட ரீதியாக சி.நிலக்சனா முதலிடம் பெற்றார். தேசிய ரீதியில் 28ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டார். அது தொடர்பாகத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நான் இந்தப் பெறுபேற்றைப் பெறப் பெரும் பங்காற்றிய எனது ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். பாடசாலையில் கற்பிப்பவற்றை முழுமையாக விளங்கிக் கற்றமையாலேயே எனக்கு வெற்றி கிடைத்தது. எதிர்காலத்தில் சிறந்த வழக்கறிஞராக வரவேண்டும் என்பதே எனது இலட்சியம்" - என்றார். (ற-8)

## மாவட்டச் செயலராக வேண்டும்

### வர்த்தகப் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற சாம்பவி தெரிவிப்பு

எதிர்காலத்தில் மாவட்டச் செயலராக வந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்பதே எனது இலக்குஎன்று தெரிவித்தார் க.பொ.த. உயர்தர வணிகப் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவி சாம்பவி ஜெயதிலக தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு நேற்று முன்தினம் இரவு வெளியானது. அதில் வர்த்தகப் பிரிவில் மாவட்ட ரீதியாக ஜெ.சாம்பவி முதலிடம் பெற்றார். அது தொடர்பாகத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நான் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லை. ஆனாலும் தன்னம்பிக்கையுடன் கல்வி கற்றேன். அதனால்தான் எனக்கு இந்த வெற்றி கிடைத்தது. பரீட்சைகளில் தோல்வியடைந்ததால் மனம் உடையாது முயற்சி செய்யுங்கள். வெற்றியடைய முடியும். நான் ஒரு மாவட்டச்செயலராக வந்து மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்பதே எனது விருப்பம் - என்றார். (ற-8)

## பொறியியலாளராவதே இலட்சியம்

### கணிதப் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற சஞ்ஜித் தெரிவிப்பு

எதிர்காலத்தில் சிறந்த பொறியியலாளராக வருவதே எனது இலட்சியம் என்று கணிதப் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற ஹாட்லிக் கல்லூரி மாணவன் சண்முகதாசன் சஞ்ஜித் தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு நேற்றுமுன்தினம் இரவு வெளியானது. அதில் கணிதப் பிரிவில் மாவட்ட ரீதியாக ச.சஞ்ஜித் முதலிடம் பெற்றார். தேசிய ரீதியில் 6 ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டார். அது தொடர்பாகத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது:

நான் இந்தத் துறையிலேயே படிப்படியாக உயர வேண்டும். எதிர்காலத்தில் சிறந்த பொறியியலாளராக வந்து சாதிக்க வேண்டும் என்பதே எனது இலட்சிம்.

எனது பெற்றோருக்கும், பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். படிக்கும் பாடங்களை வீட்டில் மீட்டல் செய்தமையால் சிறந்த பெறுபேற்றைப் பெற முடிந்தது. ஒலிம்பியாட் உட்படப் பல போட்டிகளை நடத்தி எமது கல்லூரி எமது அறிவை விருத்தி செய்தது. சிறப்பு வகுப்புக்கள் நடத்தப்பட்டன. அவையும் எனது பெறுபேற்றுக்கு உதவின - என்றார். (ற)

## பரு.காணிபதிவகஅலுவலக கட்டட நிதிக்கு நடவடிக்கை!

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

வடமராட்சி, டிசெ.31

பருத்தித்துறை பெரும்பாக காணிப் பதிவக அலுவலகத்துக்கு புதிய மாடிக் கட்டடம் ஒன்றைஅமைக்கஅடுத்துவரும்வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்ய அமைச்சருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்என்றுதமிழ்த்தேசியகூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஓராங்கட்டைச் சந்தி, தம்பசிட்டி வீதியில் தனியாருக்குச் சொந்தமான பழைய மாடிக் கட்டடத்தில் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக காணிப்பதிவகக் கட்டடம் இயங்குகின்றது. அந்தக் கட்டடம் பழுதடைந்துள்ளமையால் மழை காலங்களில் ஒழுக்கு ஏற்பட்டு காணி உறுதிகள் பழுதடைகின்றன. உறுதிகளை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைப்பதில் சிரமங்களும் ஏற்பட்டுள்ளன.

இவற்றைக் கருத்தில் கொண்டு பெரும்பாக காணிப் பதிவகத்துக்கு புதிய அலுவலகம் அமைப்பதற்காக மந்திகை பழைய அம்மை மருத்துவமனை அமைந்திருந்த இடத்தில் 2015 ஆம் ஆண்டு பிற்பகுதியில் பருத்தித்துறைபிரதேசசெயலகத்தால் காணிஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. காணி ஒதுக்கீடு செய்திருந்தும்பொதுநிர்வாகஉள்நாட்டுஅலுவல்கள் அமைச்சுபுதியகட்டடம்அமைக்கநிதிஒதுக்கீடு செய்யவில்லை.

வடமராட்சி பிரதேச மக்களின் காணிகள் தொடர்பான உறுதிகளை (ஆவணங்கள்) பாதுகாக்கவேண்டியதுஅவசியமாகும். ஒதுக்கப்பட்ட காணியில் புதிய அலுவலகக் கட்டடம்ஒன்றைஅமைக்கத்தேவையானநிதியை ஒதுக்கிப்பிரதேசமக்களுக்குரியசிரமங்களை போக்க உரிய நடவடிக்கை எடுங்கள் என்று பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் அ.ச.அரியகுமார், 5ஆம்வட்டாரஉறுப்பினர் கே.சிறிகாந்தரூபன் ஆகியோர் நாடாளுமன்றஉறுப்பினர்சுமந்திரனிடம்கோரிக்கை விடுத்ததுடன், அவரை அழைத்துச் சென்று பெரும்பாக காணிப் பதிவகத்தின் தற்போதைய நிலையையும் காண்பித்தனர்.

பதிவகஅலுவலகத்தைசுற்றிப்பார்வையிட்ட நாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன் பெரும்பாகபதிவாளரிடம் இதற்கானவிவரங்களை பெற்றுக்கொண்டு தேவையான நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ற-173)

## வடமராட்சி கிழக்கில் நேற்று பெண்களுக்குக் கருத்தமர்வு

வடமராட்சி, டிசெ.31

சமூகத்தில் பெண்களின் பங்கேற்பு என்ற தலைப்பில் நேற்று வடமராட்சி கிழக்கு, உடுத்துறையில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் அனுசரணையுடன், வடமராட்சி கிழக்கு மக்கள் குழுவின் ஏற்பாட்டில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.



வடமராட்சி கிழக்குப் மக்கள் குழுத் தலைவர் சி.த.காண்டீபன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் முதன்மை விருந்தினராகத் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைவர் கேமன் குமாரவும், சிறப்பு விருந்தினராக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு, - கிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசனும், யாழ். மாவட்ட இணைப்பாளர் இன்பம், பிரதேச சபை உறுப்பினர் வி.றஜிதா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அதிகரித்துள்ள மதுப் பாவனையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இல்லாவிடில் சிறுவர்களை மதுவில் இருந்தும், அதனால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்தும் பாதுகாக்க முடியாது போகும் என்றும் பெண்கள் சுட்டிக்காட்டினர்.

எதிர்வரும் ஜனவரி மாதம் மது ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்துவது என்றும் முடிவெடுத்தனர். (ற-160)

## திருவாசக முற்றோதல்

சைவ பரிபாலன சபையின் திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை முதலாம் திகதி காலை 8.30 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முற்றோதலைத் தொடர்ந்து மகேஸ்வர பூசை நடைபெறும் என்றும் சபை பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ற)

## கூட்டாட்சி என்று கூறி பொய்ப் பரப்புரைகள்

### சாடுகின்றார் சிவசக்தி எம்.பி.

புதிய அரசமைப்புக்குள் கூட்டாட்சி (சமஷ்டி) உள்ளடக்கப்பட்டுள்ளது என்று பொய்யான பல பரப்புரைகளைக் கூறி உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களை ஏமாற்றி வாக்குச் சேகரித்துள்ளனர். இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் அரசியல் கைதிகளின் பிள்ளைகள், பொருளாதாரத்தில் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஈருருளிகள் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கட்சியைச் சேர்ந்த பல தரப்புகளுடன் சமகால அரசியல் நிலமை தொடர்பாக ஆராய்ந்துள்ளோம். எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னர் புதிய அரசமைப்புக் கொண்டுவரப்பட உள்ளது என்ற செய்தியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கொண்டுவந்துள்ளார்.

எதிர்வரும் ஆண்டில் பல முக்கியமான தேர்தல்கள் நடைபெறவுள்ளன. மாகாண சபைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், அரச தலைவர் தேர்தல் என்பன நடைபெறவுள்ளன.

புதிய அரசமைப்புத் தொடர்பாக அரச தலைவரும், தலைமை அமைச்சரும் திரும்பத் திரும்ப ஒன்றைக் கூறுகின்றனர். ஒற்றையாட்சியை உள்ளடக்கியதாகப் புதிய அசமைப்பு இருக்கின்றது என்கின்றனர். கடந்த வெள்ளிக்கிழமை மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த தலைமை அமைச்சர், புதிய அரசமைப்பில் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும், ஒன்றையாட்சியையே இந்த நாடு கொண்டிருக்கும் என்று கூறியுள்ளார்.

இந்த நிலையில்தான் பெப்ரவரி மாதத்துக்கு முன்னர் புதிய அரசமைப்புக் கொண்டுவரும் என்று கூறப்பட்டுள்ளது. இது எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதியைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையையே ஏற்படுத்தும் - என்றார். (ற-56)

## ஆவளை மயானத்தை எவருக்கும் பாதிப்பின்றி அமைக்க இணக்கம்

யாழ்ப்பாணம், டிசெ.31

தையிட்டிக் கடற்கரைப் பகுதியில் அமைக்கப் பட்டவுள்ள மயானம் எவருக்கு பாதிப்பு இல்லாதவாறு அமைக்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை. சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் உரிய தீர்வைப் பெற்றுத் தர வேண்டும்.

இவ்வாறு தையிட்டி அன்னை வேளாங்கன்னி கடற்றொழில் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த மயானம் அமைப்பது தொடர்பாக அந்தப் பகுதி மக்களுக்கும், கடற்றொழில் சங்கத்தினருக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. அது தொடர்பாகத் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் சந்திப்பு நடைபெற்றது. அது தொடர்பாக் கருத்துத் தெரிவித்த சங்கத்தின் பொருளாளர் உ. சுதர்சன் தெரிவித்ததாவது

தையிட்டிக் கடற்கரைப் பகுதியில் 16 பரப்புக் காணி உள்ளது. அதில் மயானம் அமைக்கப் 10 பரப்புக் காணியும், கடற்றொழிலாளர்களின் பாவனைக்காக 6 பரப்புப் காணியும் ஒதுக்கீடு செய்யப்படும் என்று கூறப்பட்டது. அவர்கள் எமக்கு ஒதுக்கும் காணியை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

மயானத்தில் தகனம் செய்யும் இடம் இறங்குதுறைக்கு அருகில் உள்ளது. அதனால் தகனம் செய்யப்படும்போது எழும் புகை மற்றும் மணத்தால் அசௌகரியங்கள் ஏற்படும்.

காணி அளவீடு செய்யும்போது ஏற்கனவே இருந்த வீதிகளையும் சேர்த்து அளவீடு செய்துள்ளனர். பிரதேச செயலர் மற்றும் அந்தப் பகுதியினர் நேரடியாகக் காணி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அதுவரை எமக்கு எடுக்கப்பட்ட காணியை ஏற்றுக்கொள்ள வேண்டும். இரு தரப்புக்கும் பொதுவான ஓர் எல்லை இடப்பட்டுக் காணி பகிர்வது தொடர்பாக பிரதேச செயலர் நடவடிக்கை எடுத்துள்ளார். அதை நாம் ஏற்கின்றோம். இரு தரப்புக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வண்ணம் காணி பகிரப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை - என்றார்.

இது தொடர்பில் தெல்லிபழைப் பிரதேச செயலர் தெரிவித்ததாவது;

"வலி.வடக்கு ஆவளைப் பகுதியில் மயானம் அமைப்பது தொடர்பில் கருத்து முரண்பாடுகள் உள்ளன. ஆனால் மயானம் அமைக்க முயற்சி எடுத்துள்ள தரப்புக்கே காணி சொந்தம் என்று ஆவணங்கள் உள்ளன. இரு தரப்பும் விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டால் தீர்வு காண முடியும். இருவருக்கும் பொதுவான எல்லை பிரிக்கப்பட்டுக் காணியைப் பகிர்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சிக்கு இரு தரப்பும் இணக்கம் தெரிவித்துள்ளனர்" - என்றார்.

இது தொடர்பாக வலி.வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்ததாவது:

பாதிப்பு இல்லாதவகையில் மயானத்தை அமைக்க இணக்கம் காணப்பட்டுள்ளது. பொதுவான எல்லை அமைத்துக் காணியை அளவீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்தப் பணி முடிந்தால் பிரச்சினை சுமுகமாக முடியும்" - என்றார். (ற-8)

# தமிழ் கூட்டமைப்பும், மு.காவும் நாட்டைப் பிரிக்க முயற்சியாம்

## ஹெகலியவின் கண்டுபிடிப்பு

கொழும்பு, டிசெ.31

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து நாட்டைப் பிளவுபடுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.**


இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரான ஹெகலிய ரம்புக்வெல குற்றஞ்சாட்டியுள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சி தொடர்பில் நாட்டு மக்கள் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள். இவர்களது அமைச்சரவை தனிப்பட்ட தேவைகளுக்காக அமைக்கப்பட்டது என்று அந்தக் கட்சியில் உள்ளவர்களே குற்றஞ் சாட்டுகின்றனர். உயர் நீதிமன்று அரசமைப்புக்கு ஏற்றவாறு தீர்ப்பை வெளியிட்டிருந்தாலும் நாடாளுமன்றில் பிரச்சினை நிலவுகின்றது.

அரசுக்குப் பெரும்பான்மை இல்லை. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் பிளவு ஏற்பட ஆரம்



பித்துள்ளது. எமக்கு இவர்களது பிளவு தொடர்பில் பிரச்சினை இல்லாவிட்டாலும், நாட்டுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான அக்கறை உள்ளது.

இது தொடர்பாகக் கட்சி பேதம் இல்லாது சிந்தித்துச் செயற்பட வேண்டும். நிலையான அரசு ஒன்றை அமைக்க மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். மக்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி செய்யும் இந்தச் சூதாட்டம் நிறுத்தப்பட வேண்டும். மக்கள் தமக்கான அரசைத் தாமே தெரிவு செய்ய அனைவரும் இடமளிக்க வேண்டும்.

இந்த அரசு, அரச சொத்துக்களை பன்னாடுகளுக்கு விற்பதுடன், இனவாதத்தில் ஈடுபடவும் ஆரம்பித்துள்ளது. கூட்டமைப்பினர் கூட்டாட்சித் தீர்வைக் கொண்டுவர முயற்சிக்கின்றனர். தலைமை அமைச்சர் பௌத்தத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று கூறினாலும், அரசமைப்பில் அவ்வாறு இடம்பெறப் போவதில்லை என்பதே உண்மை. தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களைப் பிரச்சினைக்குள்ளாக்கும் வகையிலேயே அரசு செயற்படுகின்றது. அமைச்சர் ரவூப் ஹக்கீம் போன்றோர் ஐரோப்பிய நாடுகளின் உத்தரவுகளுக்கு அமைய நாட்டைப் பிளவுப்படுத்தும் நோக்கத்தில் செயற்படுகின்றனர். (ற-10)

# முன்பள்ளி மாணவர்களுக்கான மலசலகூடம் கட்டக் கோரிக்கை

வலி. தென்மேற்கு, டிசெ.31

முன்பள்ளி மாணவர்களின் நலன் கருதி அடிப்படை வசதிகளில் ஒன்றான மலசலகூடங்களை தென். மேற்கு பிரதேசத்தில் மாதகல் முதலாம் வட்டார உறுப்பினர் திருமதி வா. சிவனேஸ்வரி தவிசாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வலி . தென்மேற்கு பிரதேச சபையின் ஆண்டிறுதிக்கான கூட்டம் தவிசாளர் அ. ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

எமது வட்டாரத்தில் 9 முன்பள்ளிகள் இயங்குகின்றன. சித்திவிநாயகர் முன்பள்ளியில் 50க்கு மேற்பட்ட சிறுவர் கல்வி கற்கிறார்கள். அங்குள்ள தற்காலிக மலசலகூடத்தை பாவிப்பதற்கு பொதுச் சுகாதார பரிசோதகர் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு தடை விதித்துள்ளார். இதனால் சிறுவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். அதேவேளை அங்கு 4 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். வேறு முன்பள்ளிகளிலும் அடிப்படை வசதிகளில் ஒன்றான மலசலகூடம் தேவைப்படுகின்றது. முன்னுரிமை அடிப்படையில் சித்தி விநாயகர் முன்பள்ளிக்கு மலசலகூடம் தேவைப்படுகின்றது. முன்னுரிமை அடிப்படையில் அதனை அமைப்பதற்கு தவிசாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேபோல், மாதகல் மயில்வாகனம் புலவர் பொது மண்டபம் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளது. இங்கு மாணவர்களுக்கான மாலை நேர வகுப்புக்கள் நடைபெறுவதுடன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க கூட்டங்களும் இடம்பெறுவது வழக்கம். அத்துடன் இப்பகுதியில் உள்ள 20 இற்கும் மேற்பட்ட வீதிகளின் பிரதான வீதியாகக் கணிக்கப்படும் மாதகல் காஞ்சிபுரம் வீதி மக்கள் நடமாட முடியாதவாறு குன்றுங் குழியுமாக காட்சியளிக்கிறது. எனவே மக்களின் வசதி கருதி வீதிகளையும், மண்டபத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு தவிசாளர் முன்வர வேண்டும் என்று முதலாம் வட்டார உறுப்பினர் திருமதி சிவனேஸ்வரி தெரிவித்தார்.

இது தொடர்பில் உபதவிசாளர் ஆ. வி. கணேசவேல் தெரிவித்தாவது

கடந்த காலங்களில் வீடுகளில் இடம்பெற்றுவந்த திருமணங்கள் , பூப்புனித நீராட்டு விழா மற்றும் பிறந்த தின விழா உட்பட சகல விழாக்களும் தற்பொழுது மண்டபங்களில் இடம்பெறுகின்றமை காணக்கூடியதாக உள்ளது. எமது தலைமை அலுவலகத்துக்கு அருகாமையில் உள்ள கலாசார மண்டபம் பழமை வாய்ந்ததாக காணப்படுகிறது. வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடனும் மக்களை கவரும் நோக்குடனும் தற்காலிக சூழலுக்கு ஏற்றவாறு மண்டபத்தை மாற்றியமைக்க தவிசாளர் முன்வர வேண்டும்.

பிரதேசத்தின் அபிவிருத்தியையும் பிரதேச சபையின் வருமானத்தையும் அதிகரிக்கும் வகையில் பல வேலைத் திட்டங்கள் அடுத்தாண்டு ஆரம்பிக்கப்படவிருக்கின்றமை வரவேற்கத்தக்கது. பூங்கா அமைப்பதறகாக கொள்முதல் செய்யப்பட்ட காணியில் அதற்குரிய வேலைகளை விரைவாக ஆரம்பிக்க வேண்டும்.

உறுப்பினர் திலீபன் பேசும்போது கூறியதாவது மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் கட்டுடை வீதியில் வடக்கு பக்கமாக அமைக்கப்பட்டுள்ள வாசல் பகுதியை மக்களின் வேண்டுகோளுக்கிணங்க மயானத்தின் கிழக்குப் பக்கமாக அமைப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் மக்களின் அனுமதியின்றி வீதிகளின் பெயர் மாற்றிப்பட்டுள்ளன. இது அனைவருக்கும் சிரமங்களை ஏற்படுத்தியுளளது.

எனவே வீதிகளின் பெயர்களை மாற்றும்போது அப்பகுதி மக்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் - என்றார். (ற-115)

# மருந்துத் தட்டுப்பாடு ஜனவரி மாதம் தீரும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.31

நாட்டில் மருத்துகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டுக்கு ஜனவரி மாதம் உரிய தீர்வு வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 2 மாதங்களில் எந்த மருந்துகளும் இறக்குமதி செய்யப்படவில்லை. அதனால்தான் மருத்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த தினங்களில் இருதய நோய்க்குத் தேவையான ஸ்ரென்ட் போதிய அளவு களஞ்சியப்படுத்தப்பட்டதால் பிரச்சினைகள் ஏற்படவில்லை. இலவசமாக ஸ்ரென்ட் வழங்கப்படுவதால் முன்ன



ரைக் காட்டிலும் இருதய நோயாளர்களில் 75 சதவீதமானவர்கள் தமது உயிரைப் பாது காக்க முடிந்துள்ளது. கடந்த வருடத்தில் மருந்து வில்லைகளின் விலைகள் குறைக்கப்பட்டதால் 4.7 பில்லியன் ரூபா வருமானமாகப் பெறப்பட்டது. சீனாவின் நிதியுதவியில் இருதய நோய்க்கான சிசிச்சைத் தொகுதி எதிர்காலத்தில் அமைக்கப்படும்" - என்றார். (ற-10)

# ஜனவரி முதல் "ஸ்மார்ட்" அ. அட்டை

கொழும்பு. டிசெ.31

"ஸ்மார்ட்" அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கைகள் நாளை முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என்று ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

"ஸ்மார்ட்" அடையாள அட்டை பரீட்சார்த்தமாகக் கடந்த 17ஆம் திகதி முதல் மேல், சம்ரகமுவ மாகாணங்களில் வழங்கப்பட்டு வந்தது. அது வெற்றியடைந்துள்ளதால் தற்போது இந்த வேலைத் திட்டம் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளது என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் வியோனி குணதிலக்க தெரிவித்தார். (ற-10)

# மைத்திரி - ரணில் சேர்ந்தாலே நாட்டுக்கு நன்மை கிடைக்கும்

## இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.31

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான இழுபறி தொடருமானால் அரசைக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்படும்.



இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இருவருக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டால் மட்டுமே நாட்டில் சுபீட்சத்தை எதிர்பார்க்க முடியும். முன்னாள் அரசதலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, சோபித்த தேரர் ஆகியோரை நடுநிலையில் வைத்துச் செயற்பட்டால் மாத்திரமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் மக்கள் சேவை கருதி ஒன்று சேர்ந்தாலே நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்கும்.

நாட்டில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் ஐரோப்பிய யூனியன், பிரிட்டன் போன்ற நாடுகள் உதவிகளை வழங்கத் தயராக இருக்கின்றன.

எமக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு வழங்கப்படும் என்று தெரிவித்துப் பின்னர் இல்லை என்று கூறுவது எம்மை ஏமாற்றுவதைப் போன்றது. ஒவ்வொரு முறையும் ஐக்கிய தேசியக் கட்சி இப்படியான வேலைகளைச் செய்கின்றது" - என்றார். (ற)

# ஆலயக்கதவு உடைத்து விநாயகர் சிலை திருட்டு

கொழும்பு, டிசெ.31

தலவாக்கலை, சென்கிளயர் தோட்டத்தில் உள்ள விநாயகர் ஆலயம் ஒன்று உடைக்கப்பட்டு பித்தளையால் ஆன பிள்ளையார் சிலை களவாடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

நேற்றுக் காலை ஆலயத்துக்கு வந்த பூசகர் ஆலயம் உடைக்கப்பட்டு சிலை களவாடப்பட்டிருந்ததை அவதானித்துள்ளார். அவர் ஆலய நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளார். அவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். மோப்பநாய் கொண்டுவரப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது. எனினும் திருட்டுச் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. (ற)







## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



யாழ்ப்பாணம்.டிசெ. 31

யாழ்ப்பாண மாவட்டத்தில் அடிப்படைத்தகவல்தொடர்பாடல் தொழில்நுட்ப பயிற்சியை நிறைவு செய்த கிராம அலுவலர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மாவட்டச் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாண் மாவட்ட செயலகத்தின்கீழ்தெரிவுசெய்யப்பட்ட கிராம அலுவலர்களில் பயிற்சி நெறியை நிறைவு செய்தவர்களுக்கே இந்தச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சின் அனுசரணையுடன் ஐ.டி. எம் நிறுவனத்தினர் இந்த பயிற்சி நெறியினை வழங்கியிருந்தனர்.

நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் .அரச அலுவலர்கள். கிராம அலுவலர்கள் எனப்பலரும்கலந்துகொண்டனர். (ஐ-7)

# இறுதிநாள் நிகழ்வும் பரிசில் வழங்கலும்

சாவகச்சேரி.டிசெ.31

சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் இறுதி நாள் நிகழ்வும் பரிசில்கள் வழங்கலும் சபை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தினம் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணை ணயாளர் திருமதி மு.சுலோச்சனா, தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் க.வினோஜிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வரணி மற்றும் சரசாலைப் பகுதிகளைச் சேர்ந்த கலை மன்றங்களின்நடனநிகழ்வுகள் இடம்பெற்றன.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மாணவர்கள் மற்றும் அலுவலர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு விருந்தினர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

தலைமை உரையில், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன் உள்ளூராட்சிமன்றம் ஒக்ரோபர் மாதத்திலிருந்து நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளை உப அலுவலகங்கள் ஊடாகவாசிப்புமாதம்என்ற தலைப்பில் எமது சேவைகளை பரவலாக்கும்நோக்கிலும் உள்ளூராட்சி வாரங்களை நடத்துகிறோம்.

ஆயுள் வேத வைத்திய அதிகாரிகளினால் சுகாதாரம் சம்பந்தமான நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

சுகாதார நோய் நொடியற்ற சமூகத்தை உருவாக்கும் வகையில் பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுத்து ஆயுள் வேத வைத்தியத்தினை செயற்படுத்த வேண்டும்.

சுற்றுச்சூழல் சம்பந்தமான நடவடிக்கைகள் கல்வியை அடிப்படையாகக் கொண்டு சமூகத்திற்கு ஏற்றவாறு மாணவர்களை வளர்த்துக் கொள்ளவேண்டும்எனவும் தெரிவித்தார். (ஐ-9,159)



## பேராசிரியர் அ.சண்முகதாஸின் அகவை நிறைவை முன்னிட்டு

# "மார்கழித் திங்கள் விழா"

கொடிகாமம்,டிசெ.31

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகதகைசார்வாழ்நாள்பேராசிரியரும்யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கத்தின் தலைவருமானபேராசிரியர் அ.சண்முகதாஸின் அகவைநிறைவையொட்டி "மார்கழித் திங்கள் விழா" இடம்பெறவுள்ளது.**

நல்லூர்துர்க்காதேவிமணிமண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவரும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல் வருமாகியச.லலீசன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸின் பேர்த்தி அபிநயனி குகசிறியினால் (அவுஸ்திரேலியா)இறைவாழ்த்துமற்றும் தமிழ்மொழிவாழ்த்துஎன்பன இசைக்கப்படவுள்ளன.

அபிநயா றஜீபனின் வரவேற்பு ஆடல், சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரனின் வரவேற்புரை என்பவற்றைத் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர்சிறிலசிறிசோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா ஆகியோர் அகவை நிறைவு வாழ்த்துரைகளை வழங்குவர்.

மார்கழித் திங்கள் குறித்து வெளியிடப்படும் நூலுக்கான அறிமுகவுரையை முனைவர்மனோன்மணிசண்முகதாஸ் வழங்குவார். நூல் நயப்புரையை தென்கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் முனைவர் க. இரகுபரன் ஆற்றுவார்.

மார்கழித் திங்கள் என்ற பொருளில் அமைந்த சிறப்புரையை கலாநிதி செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்கவுள்ளார். அனைவரையும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-159)

# பொன்னாலையில் திடீரென தோன்றிய லிங்கத்துக்கு விரைவில் குடமுழுக்கு

*சைவமகாசபை முன்னெடுக்கிறது*



யாழ்ப்பாணம்.டிசெ.31

யாழ்ப்பாணம் பொன்னாலைக் கடற்கரை வெளியில் இரவோடிரவாக திடீரென முளைத்த சிவலிங்கத்துக்கு விரைவில் குடமுழுக்கு இடம் பெறவுள்ளது என்று காரைநகர் சைவமகாசபையினர் தெரிவித்தனர்.

பொன்னாலையில் தோன்றிய ஆதி லிங்கத்துக்கு தற்போது நிரந்தரமாக ஆலயம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த விடயம் தொடர்பில் சைவமகாசபையிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

சைவமகாசபையின் ஏற்பாட்டிலேயே கோவில் கட்டப்படுகிறது. ஆதிலிங்கம் அந்தக் கோவிலில் பிரதிஸ்டை செய்யப்பட்டு விரைவில் குடமுழுக்கும் இடம்பெறவுள்ளது. அது தொடர்பான விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

ஈழத்துச் சிதம்பரம் என்று அழைக்கப்படும் காரைநகர் சிவன் ஆலயத்தின் தேர்த் திருவிழா கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி நடைபெற்றது. மறுநாள் காலை பொன்னாலையில் குறித்த ஆதிலிங்கம் தோன்றியிருந்தது. சுமார் நான்கரை அடி உயரமான அந்தச் சிவலிங்கம், இரவோடு இரவாக வாகனத்தில் கொண்டுவந்து வைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. குடிநீர் வினியோகத்துக்காகப் பொன்னாலை வீதியின் கரையே குழாய்கள் பொருத்தப்பட்டு வந்தன. இந்த நிலையில், குழாய் பொருத்துவதற்காக வெட்டப்பட்ட குழியிலிருந்து எடுக்கப்பட்ட கற்கள். மணல் என்பவற்றை அள்ளி ஓர் இடத்தில் குவித்து விட்டு அதன் மேல் அந்தச் சிவலிங்கம் வைக்கப்பட்டது.

பொன்னாலை வீதியால் சிதம்பரத்துக்குச் சென்று வந்த பக்தர்கள் சிவலிங்கத்தைக் கண்டு வியந்தனர். திடீரென முளைத்திருந்த சிவலிங்கத்தை ஆச்சரியத்துடன் பார்த்தது மட்டுமன்றி சிவலிங்கத்தை வணங்கியும் சென்றனர். பின்னர் அந்த சிவலிங்கத்துக்கு அந்தப் பகுதியில் குடியிருக்கும் மக்கள் கொட்டகை ஒன்றை அமைத்து, விளக்கேற்றி வணங்க ஆரம்பித்தனர். இந்த நிலையில் தற்போது சிவலிங்கத்துக்கு குட முழுக்கு இடம்பெறவுள்ளது. (ஐ-21)



# தொடருந்து கடவையில் காவலாளிகள் இல்லை

*மக்கள்குற்றச்சாட்டு*

கொடிகாமம். டிசெ.31

கொடிகாமம், நாவலடி தொடருந்துக் கடவைக்கு காவலாளிகள் நியமிக்கப்பட்டுள்ளபோதும் அவர்கள் கடமைக்கு வருவதில்லை என்று பிரதேச மக்களால் குற்றஞ்சாட்டப்படுகின்றது. கடமைக்கு நியமிக்கப்பட்டுள்ள காவலாளிகள் கடமை நேரத்தில் கடமையில் உள்ளனரா என்பதை அதிகாரிகள்கண்காணிக்க வேண்டும் என்றும் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

இந்தக்கடவையில்காவலாளிகள்கடமையில்இல்லாததால் அடிக்கடி விபத்துக்கள் நடக்கின்றன. இளைஞர் ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, 2013ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கான தொடருந்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டதும்பொலிஸாரால் கடவைகளுக்குத் தலா 3 காவலாளிகள் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவேதனமாகவழங்கப்பட்டது. அவர்கள் தம்மைப் பணியில்நிரந்தரமாக்குமாறும், வேதன உயர் வழங்குமாறும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். (ற-159,9)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ.31

யாழ்ப்பாணமாவட்டஅரசசார்பற்றநிறுவனங்களின் இணையத்தின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 22ஆம் திகதி நாலவர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிதி. நிர்வாக, அபவிருத்தி, செயற்பாட்டுஅறிக்கைகள்சமர்ப்பிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்துஅடுத்த ஆண்டுக்கான நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு இடம்பெற்றது.

தலைவராக அறவழிப்போராட்டக் குழுவைச்சேர்ந்தவி.முருகதாஸும், செயலாளராகதியாகிஅறக்கொடைநிறுவனத்தை சேர்ந்தவீ.தியாகேந்திரனும்,பொருளாளராகயாழ். சமூகமேம்பாட்டுமையத்தைச் சேர்ந்த வி.சுதர்சனும். உப தலைவராக வடஇலங்கைசர்வோதயத்தைசேர்ந்தபி. ஜமுனாதேவியும், உபசெயலாளராகவடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தைச் சேர்ந்த என். இராசரத்தினனும் தெரிவு செய்யப்பட்டனர்.

அங்கத்தவாகளாகஅகதிகள்புனர்வாழ்வு நிறுவனத்தைச் சோந்த ரீ.தேவானந், எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமத்தை சேர்ந்த திருமதி கே. யாழினி, குடும்பப் புனர்வாழ்வு மையத்தைச் சேர்ந்த எஸ்.பார்த்தீபன், சொண்ட் நிறுவனத்தைச் சேர்ந்த மரியா கொலின்சனா மற்றும் உள்ளகக் கணக்காய்வுசாந்தீகம், பத்திராதிபர்சமூக அபிவிருத்தி மன்றத்தைச் சேர்ந்த சு. சுகிர்தா ஆகியோர் தெரிவாகியுள்ளனர் என்று யாழ்மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் நிதி, நிர்வாக அலுவலர் க.ம.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார். (ற)

## அதிகரிக்கப்படும் இளைஞர் கழகங்கள்




வவுனியா.டிசெ.31

இளைஞர்விருத்திவேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்காக எதிர்வரும் வருடம், இளைஞர்கழகங்களை அதிகரிக்கவுள்ளதாக இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் சுனில் ஜெயகமா தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு வவுனியா மாவட்ட இளைஞர் சேவைக்ள் மன்றத்தின் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும், எதிர்வரும் வருடம் மேற்கொள்ளவுள்ள வேலை திட்டங்கள் தொடர்பாகவும், விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு 27 ஆம் திகதி மாலை கண்டி வீதியில் அமைந்துள்ள மாவட்ட இளைஞ்சேவைகள் மன்ற அலுவலகத்தில் நடைபெற்றது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"வவுனியா மாவட்டத்தில் 105 இளைஞர்கழகங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவர்களூடாகநாம்பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் கிராமசக்தி திட்டத்தின் மூலம் 12 வேலைத்திட்டங்கள் இளைஞர்கள் ஊடாக முன்னெடுக்கபட்டுள்ளன.

ஒரு வேலைத்திட்டதுக்காக 3 இலட்சம் ரூபா வழங்கபட்டுள்ளது. இளைஞர்களும் அதற்கு சமமானதொகையை வழங்கி அதனை செயற்படுத்தி வருவதுடன், வவுனியாவின் 4 பிரதேச செயலக பிரிவுகளிலும் வேலைத் திட்டம் மேற்கொள்ளபட்டது. அவற்றில் பாடசாலைக்கானதேவைகள், பொதுமக்களின் தேவைகள், பொதுநோக்கு மண்டபம் அமைத்தல், விவசாயம் சார்ந்ததுறைகள் ஆகியன இடம்பெறுகின்றன.

அடுத்தவருடமும் குறித்த வேலைத்திட்டங்களை மேற்கொள்ள எண்ணியுள்ளோம். அத்துடன் தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு செயற்திட்டம் ஒன்று எம்மால் மேற்கொள்ளபட்டுள்ளது. போதைப் பொருள் பாவனையை இளைஞர்கள் மத்தியில் தடுப்பதற்காக பாடசாலை ரீதியாகவும், கழக ரீதியாகவும் போட்டி நிகழ்வுகளை நடாத்தியிருந்தோம்.

இளைஞர் விருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்காக எதிர்வரும் வருடம் இளைஞர்கழகங்களை அதிகரிக்கவுள்ளோம். பாடசாலை மட்டங்களிலும், அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் இளைஞர் மன்றங்களை விரிவுபடுத் தவுள்ளோம். அத்துடன் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு தொழிற் பயிற்சி போன்றவற்றை வழங்கவுள்ளோம். இளைஞர்களது வாழ்வை முன்னேற்றுவது தொடர்பாக, வாழ்கைத்திறன் சார்ந்த பயிற்சிகளை வழங்கவுள்ளதுடன், சுய தொழில் கடன் வசதிகளையும் வழங்க வுள்ளோம்" - என்றார்.

(110)

# ஆள் கொல்லி டெங்கில் இருந்து பாதுகாக்கப்படுகிறது முல்லைத்தீவு

முல்லைத்தீவு, டிசெ.31


**டெங்கு நுளம்பு பெருகாதவாறு முல்லைத்தீவில் தொடர்ச்சியாக வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. வீடுகளுக்குச் சென்று தரிசிப்புகளும் மேற்கொள்ளப்படுகிறது என்று முல்லைத்தீவு மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.**

வடக்கில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் உள்ளது என்று பலரும் தெரிவித்திருந்த நிலையில் அது தொடர்பில் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"முல்லைத்தீவைப் பொறுத்தவரையில் டெங்கு நோயின் தாக்கம் மிகவும் குறைக்கப்பட்டுள்ளது. டெங்கு ஒழிப்புக்கான வேலைத்திட்டங்களும் தீவிரமாக மேற்கொள்ளப்படுகிறன. தற்போது வெள்ள ல் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள இடைத்தங்கல் முகாம்களிலும் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன. இதைத் தவிர வழமையாக டெங்கு ஒழிப்புக்குச் செய்ய வேண்டிய வேலைத்திட்டங்களும் நடைபெறுகின்றன. சிறப்பான ஏற்பாடுகள் செய்யவில்லை எனினும் டெங்கு நுளம்பு பெருகாது முல்லைத்தீவைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் வழமை போன்று முன்னெடுக்கப்படுகின்றன.

நடப்பாண்டில் இலங்கையிலேயே குறைந்தளவு எண்ணிக்கையைக் கொண்ட டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்ட மாவட்டமாக டெங்குநோய் கட்டுப்பாட்டு பிரிவினரால் முல்லைத்தீவு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. நடப்பாண்டு நிறைவடைய ஓரிரு நாள்களே உள்ள நிலையில் முல்லைத்தீவில் இது வரை 110 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இந்த டிசெம்பர் மாதம் 2 பேர் மாத்திரமே டெங்கு நோயாளர்களாக



இனம்காணப்பட்டுள்ளனர். டெங்கு நோயாளர்கள் அதிகம் கொண்ட மாவட்டங்களில் நடப்பாண்டில் யாழ்ப்பாணமும் உள்ளடங்கியுள்ளது எனச் சுகாதார மத்தியநிலையம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது"-என்றார்.

(21)

## உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தாருக்கு உதவி

முல்லைத்தீவு.டிசெ.31

கனமழையினால் தொற்று நோய் ஏற்பட்டு உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தாருக்கு மாலுசந்தி மைக்கல் நேசக்கரம் ஊடாக அவசர நிதியாக ரூபா 50ஆயிரம் வழங்கி வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு முத்துஐயன் கட்டுக்குளம் அம்மன்கோவிலடிப் பகுதியில் கடந்த வாரம் நோய்த் தொற்றுக்கு உள்ளாகியிருந்த பத்து வயதுச் சிறுமி ஒருவர் எதிர்பாராத விதமாக உயிரிழந்தார்

கடும் வறுமை நிலை காரணமாக பிள்ளையின் இறுதி நிகழ்வுகளை மேற்கொள்வதற்கு சிரமத்தினை எதிர் கொண்ட குடும்பத்தினருக்கு 29 ஆம் திகதி பண உதவி வழங்கப் பட்டது.

(222)



## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எல்லைக்கிராமத்துக்கு உதவி

வவுனியா.டிசெ.31

வவுனியா வடக்கின் தமிழூர் எல்லைக்கிராமமான காஞ்சிரமோட்டை கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கபட்ட 18 குடும்பங்களுக்கான உதவிகள் வழங்கி வைக்கபட்டன.

வவுனியா திருநாவற்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம், தமிழ்த் தேசிய இளைஞர் கழகம், நகர சபை உறுப்பினர்களான சந்திரகுலசிங்கம் மோகன், சுந்தரலிங்கம் காண்டீபன், ஆற்றலரசி நிலையம் ஆகியோரின் பங்களிப்புடன் குறித்த பொருள்கள் சேகரிக்கப்பட்டு 29 ஆம் திகதி மக்களிடம் கையளிக்கப்பட்டன.

உதவிப் பணியில் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், நகரசபை உறுப்பினர்களான சந்திரகுல சிங்கம் மோகன், சுந்தரலிங்கம் காண்டீபன் , திருநாவற்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சந்திரேஸ்வரன் ரவி மற்றும் பலர்கலந்து கொண்டு பொருள்களை மக்களிடம் கையளித்தனர்.

(110)



## பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்

கிளிநொச்சி,டிசெ.31

கிளிநொச்சி- முல்லைத்தீவு மாவட்டங்களில் பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் 28 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். முன்னதாக இரண்டு மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் அந்த நிதி போதாது எனவும் நிதியை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரித்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## வீதிகளுக்குப் பொருத்தப்படும் மின்குமிழ்கள் தரமற்றவை

வவுனியா.டிசெ.31

வவுனியா நகரசைபக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக் காலங்களாக பெருமளவு மின்குமிழ்கள் பொருத்தப் பட்டுள்ளபோதிலும், அவை இரவு வேளைகளில் ஒளிர்வதில்லை. பொருத்தப்பட்டு சில நாள்களுக்குள் அவை பழுதடைந்து வருகின்றன.

இதனைத்தடுப்பதற்கு நகர சபையினர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று பொதுமக்கள் கோரி வருகின்றனர்.

வவுனியா நகரசபைக்குரிய பகுதிகளில் பழைய பேருந்துத் தரிப்பிடம், புதிய பேருந்துத் தரிப்பிடம் கண்டி வீதி ஆகிய இடங்களில், அண்மையில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன.

அதி சக்தி கொண்ட மின்குமிழ்கள் உட்பட பெருமளவு மின்குமிழ்கள் வீதிகளில் இரவு வேளைகளில் ஒளிர்வதில்லை.

இதனால் இரவு வேளைகளில் வீதிகளில் பயணிக்க முடியாமலுள்ளது.

தற்போது மழையுடனான கால நிலை நீடித்துள்ளதால், பல்வேறு சிரமங்களை எதிநோக்கியுள்ளதாகவும், தற்போது வீதிகளுக்குப் பொருத்தப்படும் மின்குமிழ்கள் தரம் குறைந்த மின்குமிழ்கள் என்றும், பொருத்தப் பட்டுச் சில காலங்களுக்குள் அது செயலற்றுப்போயுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களின் குற்றச்சாட்டுக்குறித்து நகரசபை உப நகர பிதா சு. குமாரசாமியிடம் தொடர்புகொண்டு கேட்ட போது,

அவர் தெரிவித்ததாவது:

எல்.ஈ.டி. மின்குமிழ்கள் ஒரு நிறுவனத்திலிருந்து கேள்வி கோரல் மூலமே தருவிக்கப்பட்டு, வீதிகளுக்குப் பொருத்தப்பட்டுள்ளன. அது செயலிழந்து காணப்பட்டால் அவற்றை அந்த நிறுவனங்கள் மீளப் பொறுப்பெடுத்து மாற்றித் தரவேண்டும் அவற்றுக்கு காலாவதி திகதிகள் கட்டாயம் இருந்திருக்கவேண்டும். எனினும் கேள்வி கோரல் மூலம் கோரப்படும்போது இலாபமாக கிடைக்கும்போது அதைப் பெற்றிருந்தால் அதில் ஏதும் குறைபாடுகள் இருந்திருக்கக்கூடும். தரமானதாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தால் இவ்வாறான நிலை ஏற்பட்டிருக்க வாய்ப்பிருந்திருக்காது - என்றார்.

(111)

## எழுவைதீவு இறை மக்களுக்கென ஆன்மிக நிகழ்வுகள் முன்னெடுப்பு





யாழ்ப்பாணம், டிசெ. 31
எழுவைதீவுபுனிததோமையார் ஆலய இறைமக்களுக்கான ஞானொடுக்கம் (ஆன்மிக நிகழ்வுகள்) கடந்த மாதம் 21ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 21ஆம் திகதி வரை பங்குத் தந்தை அருட்திரு இராஜசிங்கம் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் அமலமரித் தியாகிகள் சபையின் அருட்திரு போல் நட்சத்திரம்அடிகளாரின்தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தில் நடைபெற்ற மேய்ப்புப் பணி மாநாட்டின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும்முயற்சியாக இல்லத் தரிசிப்பு, அன்பிய உருவாக்கல், சிறுவர் பெரியோர் இளையோர் கருத்தரங்குகள், பக்திச்சபைகள் உருவாக்கல், அன்பிய விருந்து, அருட்சதனங்கள் நிறைவேற்றல், நற்கருணைப் பவனி, குடும்ப உளஆற்றுப்படுத்துகை, ஆலயச் செயற்பாடுகளுக்குள்அனைவரையும்உள்வாங்குதல்போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-222)

# நகர்ப்புற பாடசாலைகளை வீழ்த்தி கிராமப்புற பாடசாலைகள் வெற்றி

**கிளிநொச்சி, டிசெ.31**
**இலங்கையின் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் நள்ளிரவை நெருங்கிய நேரத்தில் வெளியிடப்பட்டன. அதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமப்புறப் பாடசாலைகள் இமாலய சாதனைகளைப்படைத்துள்ளன. நகர்ப்புறப்பாடசாலைகளின் பெறுபேறுகளை விஞ்சிய பெறுபேறுகளைப்பெற்று, கிளிநொச்சி மாணவர்கள் தமது கிராமத்துக்கும் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.**

வடக்குமாகாணத்தைப்பொறுத்தவரையில் இந்த வருடம் உயர்தரப்பரீட்சையில் யாழ்ப்பாணம் பெருமளவு சோபிக்கவில்லை.

ஆனால் வன்னிப்பகுதி மாணவர்கள் போரோடும், வறுமையோடும் போராடி முதல் நிலைகளை எட்டிப்பிடித்துள்ளனர்.

வெளியிடப்பட்ட முதலிடம்பெற்றமாணவர்களின் விவரம்:-

கிளிநொச்சிபுனிததிரேசாபெண்கள்கல்லூரி மாணவி ஜெ. மகிழினி கணிதப் பிரிவில் 3-ஏ சித்தியைப் பெற்று மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றார்.

பளை மத்திய கல்லூரி மாணவி க. அபிசிகா விஞ்ஞானப் பிரிவில் 3 -ஏ சித்தியைப்பெற்று மாவட்ட நிலையில் முதலிடத்தை பெற்றார்.



கந்தையாஜனனி

முரசுமோட்டைமுருகானந்தாகல்லூரியைச் சேர்ந்த கந்தையா ஜனனிவணிகப்பிரிவில் 3-ஏசித்தியைப் பெற்று மாவட்ட நிலையில் முதலிடத்தை பெற்றார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற உயர்தரப்பரீட்சையில் 3 இலட்சத்து 21 ஆயிரத்து 469 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்களில் 1 இலட்சத்து 67ஆயிரத்து 907 மாணவர்கள்பல்கலைக்கழகத்துக்குவிண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 119 பேரின் பெறுபேறுகள் வெளியீடு தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஒலிபெருக்கிச் சாதனங்கள் வழங்கல்



வவுனியா, டிசெ. 31
வவுனியா ஓமந்தை பறநாட்டாங்கல் ஆலயத்துக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியானஒலிபெருக்கிச் சாதனங்கள் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்திஆனந்தனின்2018 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின்மூலம் அவரது அலுவலகத்தில் வைத்து இந்த ஒலிபெருக்கிச் சாதனங்கள் ஆலய நிர்வாக சபையிடம் கையளிக்கப்பட்டன. (ஐ-222)

## வெளிச்சம் அறக்கட்டளையினரால் கல்வி உதவி

வவுனியா, டிசெ. 31
இலண்டனை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் வெளிச்சம் குடும்பம் அறக்கட்டளையினால்கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் வெள்ள இடரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் 28ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியாவிலிருந்து சென்ற வெளிச்சம் குடும்ப அறக்கட்டளைக் குழுவினரால் தர்மபுரம் நெத்தலியாறு ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் 100 பேருக்கும், தர்மபுரம் மத்தியகல்லூரி இடைநிலைப்பிரிவு . உயர்தரப் பிரிவு மாணவர்கள் 120 பேருக்கும் கற்றல் உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன. (110)



## நயினாமடுக் கிராமத்தின் வீதி பயன்படுத்த முடியாத நிலையில்



வவுனியா, டிசெ. 31
வவுனியா வடக்கு நயினாமடுக் கிராம அலுவர் பிரிவுக்குட்பட்ட பெரியமடுக் கிராமத்தின் முதன்மை வீதி இதுவரைகாலமும் சீரமைக்கப்படவில்லை என்று மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

110 குடும்பங்களின் அங்கத்தவர்கள் பயன்படுத்தும் முக்கிய வீதியாக காணப்படும் இந்த வீதியைச் சீரமைத்து வழங்க இதுவரை உரியவர்கள் முன்வராமை கவலையளிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக இந்த வீதியூடாகவே பயணிக்கின்றபோது பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கடந்த மழை வெள்ளத்தின் பின் இந்த வீதியின் நிலை மிகவும் மோசமடைந்து சிறியளவும் பயன்படுத்த முடியாத நிலைமைக்கு வந்துள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (21)


## அனுமதி இன்றி கட்டப்படும் கட்டடங்கள் உடனடியாக இடைநிறுத்தப்படவேண்டும்

### *வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 31
பிரதேசசபை அனுமதி இன்றி கட்டப்படும் கட்டடங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்படவேண்டும்இல்லையேல்அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர்கருணாகரகுருமூர்த்திதெரிவித்தார்.

வேலணைப் பிரதேச சபையின் சிறப்புக் கூட்டம்கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் பிரதேசத்தின் பல்வேறு பிரச்சினைகள்தொடர்பில்ஆராயப்பட்டன. இதன்போதே தவிசாளர் இவ்வாறு தெரிவித்தார்.



"எமதுபிரதேசஆளுகைக்குள்பலகட்டடங்கள் தற்போது அமைக்கப்பட்டு வருவதை அவதானிக்கமுடிகின்றது. இந்தநிலையில் இவ்வாறானகட்டடங்கள்அமைப்பதுசபையின் வரையறையை மீறிய செயற்பாடாகவே அமைகின்றது.

எனவே இன்று முதல் (கடந்த வியாழன்) குறித்த சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அனுமதியின்றி அமைக்கப்படும் அனைத்துக் கட்டட வேலைகளும் இடைநிறுத்தப்பட வேண்டும். இல்லாதவிடத்து அவை தொடர்பில் உரியவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்"என்றுஅவர்தெரிவித்தார். (ஐ)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 150 குடும்பங்களுக்கு மயிலங்காடு இளைஞர் நற்பணி மன்றமும் உதவி

யாழ்ப்பாணம், டிசெ. 31
கிளிநொச்சியில் வெள்ளப் பாதிப்புக்குள்ளான 150 குடும்பங்களுக்கு யாழ்ப்பாணம் மயிலங்காடு இளைஞர் நற்பணி மன்றத்தைச் சேர்ந்த இளைஞர்களும் உதவிகள்ள வழங்கியுள்ளனர்.



வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து முரசுமோட்டைப் பாடசாலையில் தங்கியுள்ள 150 குடும்பங்களுக்கே உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒருலட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன என்று மன்றத்தினர் தெரிவித்தனர்.

புலம் பெயர் நாடுகளில் உள்ள உறவுகளின் நிதியுதவியில் இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாகவும் உதவிகள் வழங்குவதற்கு மயிலங்காடு இளைஞர் நற்பணி மன்றம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்றும், எதிர்வரும்புதன்கிழமை அந்த உதவிப் பொருள்களும் மக்களிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (21)

# வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் கலை,வர்த்தக, உயிரியல் பிரிவுகளில் சாதனை

வவுனியா,டிசெ.31

**வெளியாகியுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சையின் முடிவுகளின்படி கலை, வர்த்தகம், உயிரியல் பிரிவுகளில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் மாவட்டத்தில் முதல் இடங்களை பெற்றுப் பாடசாலைக்குப் பெருமைசேர்த்துள்ளனர்.**

மாவட்ட மட்டத்தில் முதல்நிலைகளைப் பெற்றவர்கள் விபரம் வருமாறு:

### வர்த்தக பிரிவு

வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியால .யத்தில் கல்விபயின்ற மாணவன்



துரைராஜா யுகதீஸ்வரன் வர்த்தகப்பிரிவில்மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், அகில இலங்கை ரீதியில் 143 ஆம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கு பெருமைசேர்த்துள்ளார்.

வவுனியா இறம்பைகுளம் மகளிர் மகா வித்தியாலய மாணவி சிறிசேன மதுசா மாவட்டமட்டத்தில் இரண்டாம் நிலையையும். வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய மாணவன் செல்வராஜா மனோச் மூன்றாம் நிலையையும் பெற்றுள்ளனர்.

விரும்பியதை படித்தமையால் சாதிக்கமுடிந்ததாக வர்த்தகபிரிவில் மூன்றுபாடங்களிலும் 'ஏ' சித்திகளைப் பெற்று வவுனியா மாவட்டமட்டத்தில் முதலாம் இடத்தை பெற்ற வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலய மாணவன் தி. யுகதீஸ்வரன் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சாதாரணதர பரீட்சையில் எனக்கு நல்ல பெறுபேறுகள் கிடைத்தன. பலர் கூறினார்கள் உயிரியல்.கணிதப் பிரிவுகளில் உயர்தரம் கற்குமாறு. எனினும் நான் விரும்பிய வர்தகத் துறையை தேர்வுசெய்துள்ளேன். எனக்கு தரம் 10 இல் இருந்தே வர்த்தகப் பாடம் பிடிக்கும். எனக்கு பிடித்ததை படித்தமையால் சிறந்தபெறு பேறுகளை பெற முடிந்தது. மிகவும் பின்தங்கிய கிராமத்தில் இருந்தே நான் கல்வியை கற்றேன். முதல் நிலை கிடைக்கும் என்று என்னைவிட எனக்கு கல்விகற்பித்த ஆசிரியர்கள்,நண்பர்களுக்கு அதிகநம்பிக்கை இருந்தது எமது குடும்பம் ஓர் விவசாய குடும்பம். எம்மைப் போன்ற பின்தங்கிய கிராமத்தில் இருந்து சாதிக்க முடியும் என்கின்ற போது வசதி வாய்ப்புக்கள் உள்ள இடங்களில் இருப்பவர்கள் இன்னும் சாதிக்க முடியும். எல்லோரும் கணிதப்பிரிவு, விஞ்ஞானப் பிரிவு என்று செல்லாது வர்த்தகப்பிரிவிலும் கல்வி கற்று இன்னும் சிறந்த சாதனைகளைப் பெறவேண்டும். நான் இந்த நிலையை அடைய வழிகாட்டிய பெற்றோர். அதிபர். ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் எனத் தெரிவித்தார்.

### உயிரியல் பிரிவு

உயிரியல் பிரிவில் தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் அருட்செல்வன் உதிஸ்ரன் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், மாகாணமட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்று மாவட்டத்துக்கு பெருமை சேர்த்துள்ளார்.

உயிரியல் பிரிவில் தமிழ் மத்திய மகாவித்தியாலத்தைச் சேர்ந்த பாலச்சந்திரன் அபியுக்தன் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் நிலையையும், அகில இலங்கை ரீதியில்



62 ஆம் இடத்தையும், யோகநாதன் தாருணன் மாவட்ட மட்டத்தில் மூன்றாம் நிலையையும், அகில இலங்கை ரீதியில் 500 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

சிறந்த மருத்துவராக வருவதே எனது இலட்சியம் என முதலாம் இடத்தை பெற்ற வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் அ.உதிஸ்ரன் தெரிவித்தார்.

மேலும் தெரிவித்ததாவது:

எனது பெற்றோர்கள், பாடசாலைஅதிபர், ஆசிரியர்களுமே எனது வெற்றிக்கு காரணம். அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்காலத்திலும் நல்லமுறையில் கல்விகற்று சிறந்த மருத்துவராகவருவதுடன், நேர்மையான முறையில் பணியாற்றுவேன் எனத்தெரிவித்தார். இவரது தந்தையாரும் ஒரு மருத்துவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கணித பிரிவு

கணிதப் பிரிவில் இறம்பைக்குளம் மகளீர் வித்தியாலய மாணவி யெஜக்குமாரன் பூஜிதா மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியில் 14 ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.



தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவர்களான மகேந்திரராஜா யாதவன் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் நிலையும். அகில இலங்கை ரீதியில் 94 ஆம் இடமும், மதனகுமார் மோகிசன் மாவட்ட மட்டத்தில் மூன்றாம் நிலையையும் அகில இலங்கை ரீதியில் 154 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

சிறந்த பொறியியலாளராக உருவாகி மக்களுக்குச் சேவைசெய்யவேண்டும் என்று மாணவி ஜெகுமாரன் பூஜிதா தெரிவித்தார்.

மேலும் தெரிவித்ததாவது:

எனது வெற்றிக்கு பாடசாலை சமூகம், பெற்றோர்கள், ஆசிரியர்களுமே காரணம். சிறந்த பொறியியலாளராக மாறி மக்களுக்கு சேவைசெய்யவேண்டும் என்பதே எனது நோக்கம். ஆசிரியர்கள் ஒவ்வொருநாளும் கற்பிக்கும் பாடங்களை அன்றையதினமே வீட்டிக்குச் சென்று கற்று வருவதுடன்,பாசாலைக்கு ஒழுங்கான முறையில் சமூகமளிப்பதன் மூலம் சிறப்பானபெறுபேற்றை பெறமுடியும்.

அனைத்து மாணவர்களும் சரியான முறையில் பயின்று நல்லபெறுபேறுகளை பெற்று ஆசிரியர்களுக்கும்,மாணவர்களுக்கும் பெருமைசேர்கவேண்டும், என்று தெரிவித்தார்.

இவரது தந்தையார் ஒரு பொறியியலாளராகக் கடமையாற்றி வருவதுடன் சகோதரனும் பொறியியல் துறையின் மூன்றாம் வருடமாணவனாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கலைப்பிரிவு

கலைப்பிரிவில் தமிழ்மத்திய மகாவித்தியாலய மாணவி டிலாஜினி சண்முகேஸ்வரராஜா மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் அகில இலங்கையில் 35 ஆம் இடத்தையும் பெற்று பாடசாலைக்குப் பெருமைசேர்த்துள்ளார்.

மனதில் நம்பிக்கை வைத்தமையால் சாதிக்க முடிந்ததாக மாணவி ச.டிலாஜினி தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர்:

எனக்குக் கற்பித்த ஆசிரியர்களின் வழிகாட்டலினால் அனைத்துப் பாடங்களிலும் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளேன். எனது பாடசாலையும் எனக்கு பக்கபலமா்க இருந்தது. எனது குடும்பம் நண்பர்கள் அனைவரது ஒத்துழைப்பினாலும் முதல் இடத்தை பெற்றுள்ளேன். வீட்டுச் சூழல் சரியான முறையில் இருந்தாலே அமைதியான முறையில் கற்கமுடியும்

மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்திபெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் கடுமையாகக் கல்விகற்றிருந்தேன். இரவு 12 மணி வரை விழித்திருந்து கல்விகற்பேன் அது போல காலையிலும் நேரத்துடன் எழுந்து கல்விகற்பேன்.



ஒவ்வொருநாளும் ஆசிரியர்களால் கற்ப்பிக்கபடுகின்ற பாடங்களை அன்றயதினமே வீட்டில் வந்து கற்றுவிடுவேன். அதனால் அதிகமான புள்ளிகளை எடுக்கமுடிந்துள்ளது. ஆசிரியர்கள் சொல்வதைகேட்டு நடப்பதுடன், மனதில் தைரியத்தைவளர்த்தால் அனைத்து பரீட்சைகளிலும் சிறப்பானசித்தியை பெறமுடியும். சட்டத்துறையில் கல்விகற்று சட்டதரணியாக வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு - என்றார்.

(110)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் உதவி

சுழிபுரம்.டிசெ.31

வெள்ளாத்தால் பாதிக்கப்புட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மக்களில் ஒரு தொகுதியினருக்கு சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகமும் உதவிப் பொருள்களை வழங்கியுள்ளது.

விரோறியன்ஸ் விளையாட்டுக் கழக வெளிநாட்டு உறவுகளின் நிதி அனுசரணையுடனும், பழைய மாணவர்கள் கழக உறுபினர்களின் ஒத்துழைப்புடனும் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளதாக கழகத்தினர் தெரிவித்தனர்.




இரண்டாம் கட்டமாக இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவுப் பொதிகள், மருந்து வகைகள், மற்றும் குடிதண்ணீர் என்பன வழங்கப்பட்டன. இதில் விக்ரோறியஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மும்முரமாகச் செயற்பட்டனர்.

அவர்களுடன் விக்ரோறியன்ஸ்.மூளாய் கிராம அலுவலர் சி.சிவரூபனும் இணைந்து உணவுப் பொருள்களைச் சேகரிப்பதில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியிருந்தார்.

வடக்கு மாகாணத்தில் அண்மையில் கொட்டித்தீர்த்த கடும்மழை காரணமாக இடம் பெற்ற வெள்ளப்பெருக்கை அடுத்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தனர்.

(21)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

வவுனியா,டிசெ.31

வவுனியா மதியாமடு விவேகானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் 2019 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

புலம்பெயர்ந்து லண்டனில் வசித்து வரும் கந்தப்பிள்ளை திலீபன் கற்றல். உபகரணங்களை வழங்க நிதி வழங்கியுள்ளார்.

(222)



# மலைக் குருவிகளை வேட்டையாடும் மனிதர்களைத் தடுத்து நிறுத்துங்கள்

## சிங்கமலை மக்கள் கோரிக்கை

நுவரேலியா.டிசெ.31

ஹற்றனில் இருந்து பதுளை நோக்கிச் செல்லும் தொடருந்து வீதியில் கொட்டகலை - கிரிஸ்லஸ்பாம் பகுதியில் அமைந்துள்ளது சிங்க மலைச் சுரங்கம். அந்தச்சுரங்கத்தைவாழ்விடமாகக்கொண்ட மலைக் குருவிகளைச் சிலர் வேட்டையாடி வருகிறார்கள். இதைத்தடுத்து நிறுத்துமாறு அந்தப்பகுதி மக்கள் கவலையுடன் கேட்டு நிற்கின்றனர்.





சிங்க மலைச் சுரங்கத்தில் பல இனக் குருவிகள் வாழ்ந்து வருகின்றன. குறித்தகுகைகுருவிகளின்சிறியதொரு சரணாலயமாகஇருந்துவருகிறது. இந்த மலைக்குருவிகளைவேட்டையாடிவிற்பனைசெய்வதில்சிலர்ஈடுபடுகிறார்கள். சுரங்கத்துக்குள்கூடுஅமைத்துக்காலம் காலமாகவாழ்ந்துவருகின்றஅவற்றின் கூடுகளை இரவு நேரங்களில் கைப்பற்றிக் குருவிகளைப் பிடித்துச் செல்கின்றனர். மூங்கில் தடிகளைப் பிணைத்து அமைக்கப்பட்ட ஏணியைப் பயன்படுத்திக் குருவிகளை வேட்டையாடுகிறார்கள். இது குறித்துக் ஹற்றன் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சுரங்கம் முடிவுறும் பகுதியில் தொடருந்து நிலையக்காவலாளர்கள்பணியிலீடுபடுகின்றனர். ஆனாலும்குருவிகளைத்தொடர்ந்தும் பிடித்து வருகிறார்கள். குருவிக் கூடுகளைக்கைப்பற்றிக்குருவிகளைப்பிடித்துவிட்டு சுரங்கத்தை ஊடறுக்கின்ற தொடருந்து பாதையில் வெறும் கூடுகளைப் போட்டுவிட்டுச்செல்கிறார்கள். பின்னர்






பகலில் அங்கு நிலவும் குருவிகளின் தவிப்பும், அலறலும் மனதுக்குக் கவலையை ஏற்படுத்துகின்றன - என்று அந்தச் சுற்றாடலில் வாழ்கின்ற மக்கள் கவலை வெளியிட்டனர்.

இந்தச் சுரங்கப் பாதையில் சுமார் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மலைக்-குருவிகள் கூடுகளை அமைத்து வாழ்ந்து வருவதும், குறித்த பகுதிக்கு உள்நாட்டவர்களும் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும்சுற்றுலாப்பயணம்மேற்கொண்டு குருவிகளின் பல்வகைமையைப் பார்வையிட்டுமகிழ்வதும்குறிப்பிடத்தக்கது.





# தொழிலாளர் குடியிருப்புகள் தீக்கிரை

## கைரேகையைக் கண்டறியும் பொலிஸார் களத்தில்



நுவரேலியா.டிசெ.31

ஹற்றன் - போடைஸ்தோட்டத்திலுள்ளதொழிலாளர்களின் குடியிருப்புகள் கடந்த சனிக்கிழமை அதிகாலை 6.15 மணியளவில் தீக்கிரையாகின. இதில் 24வரையான குடியிருப்புகள் எரிந்து சாம்பலாகின. இந்த வீடுகளில் குடியிருந்த 19 குடும்பங்களைச் சேர்ந்த 108 பேர் பாதிக்கப்பட்டனர். 45 சிறுவர்கள் இதில் அடங்குகின்றனர்.

தீ பற்றியவுடன் வீடுகளுக்குள் இருந்தவர்கள் கூச்சலிட்டனர். அயலவர்கள்அதைஅணைக்க முற்பட்டு தீயைக்கட்டுப்படுத்தமுடியவில்லை. பின்னர் ஹற்றன் பொலிஸார், டிக்கோயாநகரசபைத்தீயணைப்புப்படையினர், நுவரெலியாமாநகரசபைத்தீயணைப்புப்படையினர் ஆகிய தரப்புகளுடன் மக்களும் இணைந்து செயற்பட்டதில் சுமார் 3 மணி நேரத்துக்குப் பிறகு தீ கட்டுக்குள்கொண்டுவரப்பட்டது. குறித்தவீடுகளில்இருந்த உபகரணங்கள், ஆவணங்கள் என எல்லாமும் தீக்கிரையாகின. பாதிக்கப்பட்டகுடும்பங்கள்தற்காலிகமாகப் போடைஸ் தமிழ் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டனர். தீஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லைஎன்றும்பொலிஸ்கைரேகைஅடையாளப் பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும்இந்தச்சம்பவம்குறித்துக் ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். ஆயிரம் ரூபா சம்பள உயர்வுகோரித் தோட்டத் தொழிலாளர்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்துவந்தசூழலில்குறித்த சம்பவம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தீயால்பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள்





நுவரேலியா.டிசெ.31

ஹற்றன் - போடைஸ் தோட்டத்தில்ஏற்பட்டதீயால் அந்தக்குடியிருப்புத்தொகுதியில் ஏற்பட்ட தீயில் குறித்த குடியிருந்த 19 குடும்பங்களைச் சேர்ந்த 108 பேர் பாதிக்கப்பட்டனர். இதில் ஆண்கள் 28பேரும், பெண்கள் 35 பேரும், 45 சிறுவர்களும் அடங்குகின்றனர். பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளைத் தோட்ட நிர்வாகம் மற்றும் ஹற்றன் பிரதேசசெயலகம், நோவூட் பிரதேசசபை, நுவரெலியா இடர்முகாமைத்துவக்காரியாலயம் எனப் பலரும் விரைந்து வழங்கினர். உடுதுணிகள், பாய் மற்றும் உலர் உணவுப்பொருள்கள், பாடசாலைக்கற்றல் உபகரணங்கள் என்பன பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டன. நேற்றைய தினம் மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் ஊடாக இவர்களுக்கு உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன.

# கோப்பித்தூளுடன் கஞ்சா கலந்து நூதன விற்பனை

## நிந்தவூரில் பெண் ஒருவர் கைது



அம்பாறை.டிசெ.31

நிந்தவூர்ப் பகுதியில் கஞ்சா விற்பனைசெய்தபெண்ஒருவரைக் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கைது செய்தாகச்சம்மாந்துறைப்பொலிஸார் தெரிவித்தனர். குறிப்பிட்டவீடொன்றில்போதைப் பொருள்விற்பனைசெய்யப்பட்டு வருவதாகத் தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அந்த வீட்டைச் சுற்றி வளைத்துச் சோதனையிட்டதிலேயே குறித்த கஞ்சா வியாபாரியைக் கைதுசெய்ததாகச் சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த பெண் கஞ்சாவைக் கோப்பித்தூளுடன் கலந்து சிறு பொதிகளாக்கி அவற்றை நூதனமாக விற்பனை செய்து வந்ததாகப் பொலிஸார்மேலும்தெரிவித்தனர். நறுமணம் கமழும் கோப்பித்தூளுடன்கலந்துகஞ்சா விற்பனை செய்யப்பட்டிருப்பது இதன் மூலம்தெரியவந்தது. அந்த வீட்டிலிருந்து இருந்துகஞ்சாகலந்தகோப்பித்தூள் 2 கிலோக் கிராமளவிலும், கோப்பியுடன்கஞ்சா கலந்த 2கிராம் நிறையுடைய சிறிய பக்கட்டுக்கள் 35வரையிலும் வீட்டில் இருந்துகைப்பற்றப்பட்டன. மேலதிகவிசாரணைகளைச் சம்மாந்துறைப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நன்றி - சஜித் பண்டார




# தலவாக்கலையில் தீக்கிரையானது கடை

நுவரேலியா.டிசெ.31

தலவாக்கலை பேருந்து நிலையத்துக்குப் பின்புறமாக உள்ள கடை ஒன்று தீயில் முழுவதுமாக எரிந்து சாம்பலாகியுள்ளதாகத்தலவாக்கலைப்பொலிஸார்தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் ஏற்பட்டுள்ளது. தலவாக்கலைபொலிஸார், மற்றும்பொது மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு எடுத்த முயற்சியின் பயனாக சுமார் 2 மணித்தியாலயங்களுக்குப் பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இந்தத் தீ ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை. தலவாக்கலைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





## "எல்லையில் சுவர் எழுப்புவேன்" அமெரிக்க அதிபர் விடாப்பிடி

### அரச நிர்வாகங்கள் முடங்கின

வோஷிங்டன்.டிசெ.31
அமெரிக்காவில் அரச துறைகள் முடங்கிப்போயுள்ளன. இந்த முடக்கம் நீடித்து வருகிறது. அமெரிக்காவின் அயல் நாடானமெக்சிக்கோவில்இருந்துஅமெரிக்காவுக்குள்சட்டவிரோதமாகளவரும் நுழையாதபடி அமெரிக்க-மெக்சிகோ எல்லையில் பிரமாண்டச் சுவர் எழுப்புவேன் என்று 2016ஆம் ஆண்டுநடந்த அதிபர் தேர்தலின் போது ட்ரம்ப் வாக்குறுதி அளித்தார். அதன்படி சுவர் எழுப்புவதற்கு மெக்சிக்கோவிடம் ட்ரம்ப் நிதி கேட்டார். மெக்சிக்கோ அதற்கு மறுத்து விட்டதால் சுவர் எழுப்புவதற்கு உள்நாட்டு நிதியை பயன்படுத்த வேண்டிய நெருக்கடி உருவானது. இதற்காக 5 பில்லியன்டொலரைஒதுக்கவேண்டும் என்று, அமெரிக்க நடாளுமன்ற ட்ரம்ப் வலியுறுத்தி வருகிறார். எல்லைச்சுவருக்காக மக்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்தக் கூடாது என்றும், அந்த திட்டத்தை இல்லாமலாக்க வேண்டும் என்றும்கூறிஜனநாயகக்கட்சி, இதற்கு ஆதரவளிக்க மறுத்து விட்டது. இதன் காரணமாகஅயலுறவு, உள்நாட்டுபாதுகாப்பு, போக்குவரத்து, விவசாயம், நீதித்துறை உள்ளிட்ட 9 துறைகள் முடங்கின. "மெக்சிக்கோ எல்லையில் சுவர் எழுப்புவேன்" என்கிற தனது முடிவில் ட்ரம்ப் விடாப்பிடியாக உள்ளார். இதனால் அரச துறைகளின் செயலிழப்புத் தொடரும் நிலை உருவாகி உள்ளது.

# பிரான்ஸைத் தொடர்ந்து தாய்வானில் 'மஞ்சள் அங்கிப்' போராட்டத்தில் மக்கள்

**தைபே.டிசெ.31**
**பெற்றோல்மற்றும்டீசல்விலைஉயர்வுக்குஎதிராகப்பலவாரங்களாகப்பிரான்ஸ் மக்கள் 'மஞ்சள் அங்கியை' அணிந்தவாறு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். குறைந்தபட்சவரிவிதிப்புவேண்டும்என்றும், வரிவிதிப்பில்பாரபட்சமின்றிச் செயற்படுமாறு கோரியும் தாய்வான் மக்கள், பிரான்ஸ் மக்களைப் போன்று 'மஞ்சள் அங்கியை' அணிந்து எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**




பிரான்சில்பெற்றோல்மற்றும்டீசல்மீதானவரியை அரச உயர்த்தியமை 'மஞ்சள் அங்கி' போராட்டம் என்ற மக்கள் போராட்டத்துக்கு வித்திட்டது. மஞ்சள் அங்கி அணிந்த மக்கள் போராட்டம் விஸ்வரூபம் எடுத்தது. பயங்கர வன்முறை வெடித்தது. 10 க்கும் மேற்பட்டோர் சாவடைந்தனர். ஒரு மாதத்துக்கு மேல் நடந்த இந்தப் போராட்டத்துக்குப் பிரான்ஸ் அரசு பணிந்தது. வரி உயர்வை நீக்குவதாக அறிவித்தது. இந்த நிலையில் பிரான்சை தொடர்ந்து தாய்வானும் மஞ்சள்புரட்சியில்இறங்கியுள்ளது. குறைந்தபட்ச வரி விதிப்பு வேண்டும் என்றும், வரி விதிப்பில் பாரபட்சமின்றிச் செயற்படுமாறு கோரியும் ஆயிரக்கணக்கான தாய்வான் மக்கள்நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். மஞ்சள் நிற உடைகளை அணிந்து, வரிவிதிப்புக் கொள்கைகள் சட்டரீதியாக இல்லை என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டபதாகைகளைஏந்தியவர்களாக தாய்வான் நாட்டின் நிதி அமைச்சகம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.


## மோடியின் கூட்டத்தில் பங்கு கொண்டோர் மீது கல்வீச்சு - பொலிஸ் அதிகாரி சாவு

காஜிப்பூர்.டிசெ.31
உத்தரப் பிரதேசம் காஜிப்பூரில் நேற்றுமுன்தினம் நடந்த இந்தியத் தலைமை அமைச்சர் மோடியின் பொதுக் கூட்டத்துக்குச் சென்று திரும்பியவர்கள் மீது நடத்தப்பட்ட கல்வீச்சில் காவலர் ஒருவர் சாவடைந்தார். இந்தக் கல்வீச்சுத் தொடர்பில் ராஷ்ட்ரிய நிசாத் கட்சியைச் சேர்ந்த 15 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இது குறித்து காஜிப்பூர் பொலிஸார் தெரிவித்ததாவது
"மோடியின் பொதுக்கூட்டத்தில் பங்கேற்க ராஷ்ட்ரிய நிசாத் கட்சியினருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால், கூட்டம்முடிந்துவந்தவர்கள்வந்தவாகனத்தை பல்வேறு இடங்களில் மறித்து, நிசாத் கட்சியினர் கல்வீசித் தாக்குதல் நடத்தினார்கள். இதில் ஓரிடத்தில் வீதியில் நிசாத் கட்சியினர் மறியலில் ஈடுபட்டபோது போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அந்தப் போக்குவரத்து நெரிசலைச் சீர் செய்ய கர்முதின்பூரில் போலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி சுரேஷ் வத்ஸ் (வயது48) சென்றார். அப்போது போராட்டக்கார்கள் கல்வீசித்தாக்குதல்நடத்தியதில் அவர் பலத்த காயமடைந்தார். சிகிச்சை பலன் அளிக்காமல் அவர் உயிரிழந்தார். "இந்தக் கல்வீச்சு தொடர்பாக இதுவரை ராஷ்ட்ரிய நிசாத் கட்சியைச் சேர்ந்த15 பேரைக் கைது செய்துள்ளோம். 20க்கும் மேற்பட்டோர் மீது வழக்கு தொடர்ந்துள்ளோம் " என்று பொலிஸார் தெரிவித்தனர். இதுகுறித்துநிசாத்கட்சியின்தலைவர் சஞ்சய் நிசாத் கூறுகையில் "எங்கள் கட்சியின் மீது அவப்பெயரை உண்டாக்குவதற்கு பா.ஜ.க. முயல்கிறது. எங்கள் கட்சியினர் வன்முறையில் ஈடுபடவில்லை" என்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## அமெரிக்காவில் ஏற்பட்ட பனிப்புயலால் 3 பேர் சாவு

சிக்காக்கோ.டிசெ.31
அமெரிக்காவில்நேற்றுமுன்தினம்பனிப்புயல் வீசியிருந்தது. இதில் சிக்கி 3 பேர் சாவடைந்தனர். அமெரிக்காவில் வீசிய இந்தப் பனிப்புயலால் வீதிகள் மற்றும் வீடுகள்மீதுபனிகொட்டுகிறது. டகோடா, மின்னெசோட்டா, கன்சாஸ் மற்றும் அயோவா மாகாணங்களில் பனி கொட்டிக்கிடப்பதால்வீதிகள்மூடப்பட்டுள்ளன. 8 முதல் 18 அங்குலம் அளவுக்குப் பனி உறைந்து காணப்படுகிறது. இதன் காரணமாக விமானக் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.
லூசியானா வில் மின்னல் தாக்கி மரம் முறிந்து விழுந்ததில் 58 வயதுப் பெண் சாவடைந்தார். கன்சாசில்ஏற்பட்டமகிழுந்துவிபத்தில்ஒருவர்சாவடைந்தார். எல்லாமாக இந்தப் பனிப்புயலால் ஏற்பட்ட அசாதாண சூழலால் 3 பேர் சாவடைந்தனர்.




## பிலிப்பைன்சில் நில ந

## சுனாமிஏற்படலாம்எனஎ



மணிலா.டிசெ.31
பிலிப்பைன்ஸ்நாட்டின் தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் 6.9 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கத்தால் சுனாமி அலைகள் உருவாக வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள மின்டானோ தீவில், டாவோ நகரை மையம் கொண்டு நேற்று காலை சக்தி வாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது. நிலத்தடியில் 59கிலோ மீற்றர் ஆழத்தில் இந்தப் பூகம்பம் நிலைகொண்டு இருந்து. ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் 6.9 ஆக பதிவாகி இருந்தது. இந்தப் பூகம்பத்தால், இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ்நாடுகளில்சுனாமி அலைகள் எந்த நேரமும் உருவாகலாம் என்பதால் மக்களை எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. இது மிகசக்தி வாய்ந்தசுனாமிஅலைகளைஏற்படுத்தினால், அவைஇந்தோனேசியா கடற்கரையையும், பிலிப்பைன்ஸ் கடற்பகுதியையும் தாக்க வாய்ப்புள்ளது என்றும் எச்சரிக்கையாக விடுக்கப்பட்டது. ஆனால் நேற்று வரை சுனாமி ஏற்பட்ட தகவல்களோ, நில நடுக்கத்தால் உண்டான இழப்புக்களோ குறித்த செய்திகள் எவையும் வெளியாகவில்லை.



# துருக்கியின் தாக்குதலைத் தடுப்பதற்காக சிரியாவுடன் குர்திஷ் போராளிகள் கூட்டு

**டமாஸ்கஸ்.டிசெ.31**

**சிரியாவின் எல்லையில் துருக்கியால் தங்கள் மீது நிகழ்த்தப்படும் தாக்குதலைத் தடுப்பதற்காகக் குர்திஷ் போராளிகள், சிரியா அதிபர் பஷார் அல் ஆசாத்துடன் புதிய கூட்டணியை அமைத்து உள்ளனர்.**



சிரியாவில் 2011ஆம் ஆண்டு, மார்ச் 15ஆம் திகதி அதிபர் பஷார் அல் ஆசாத் படைகளுக்கும், உள்நாட்டுப் போராளிகளுக்கும் இடையே உள்நாட்டுப்போர் தொடங்கியது. 9ஆவது ஆண்டாக அது நீடிக்கிறது.

இந்த உள்நாட்டுப் போரைப் பயன்படுத்தி அங்கு காலூன்றிய ஐ.எஸ். அமைப்பினரை எதிர்ப்பதற்காக அமெரிக்கா தன்னுடைய 2 ஆயிரம் சிப்பாய்களைச் சிரியாவுக்கு அனுப்பியது. ஐ.எஸ் அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்த பல நகரங்கள் மீட்கப்பட்டன. இந்த நிலையில் சிரியாவில் ஐ.எஸ். அமைப்பினரை வீழ்த்திவிட்டதாகக் கூறி அமெரிக்கச் சிப்பாய்களை சிரியாவிலிருந்து திரும்பப் பெற்றார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். இது உலக அரங்கை உலுக்கியது. விமர்சனங்கள் பல எழுந்தன. ஐ.எஸ். அமைப்புடன் அமெரிக்கா போரிடுவதற்கு சிரியாவில் குர்திஷ் போராளிகள் பக்க பலமாக இருந்தனர்.

அமெரிக்காப் படைகளைத் திரும்பப்பெறுவதான ட்ரம்பின் அறிவிப்பு அவர்களை இக்கட்டுக்குள் தள்ளியுள்ளது. தென் துருக்கி எல்லையில் தன்னாட்சி பிர தேசத்தை அமைக்க வேண்டும் என்பதற்காக 30 ஆண்டுகளாகப் போராடி வருபவர்கள் குர்திஷ் போராளிகள். அவர்களைப் பயங்கரவாதிகள் என கூறித் துருக்கி தடை செய்துள்ளது.

சிரியாவில் இருந்து அமெரிக்கா அகன்றதும் துருக்கி அதிபர் எர்டோகன் குர்திஷ் போராளிகள் மீதான தாக்குதலை அதிகரித்துள்ளார்.

சிரியா, துருக்கி எல்லையில் குர்துப் போராளிகள் தன்னாட்சிப் பிர தேசத்தைக் கட்டமைத்து விடக்கூடாது என்பதில் அவர் அக்கறையுடன் இருக்கிறார்.

இந்தநிலையில் சிரியா அரசுடன் இணைந்து செயல்படும் முயற்சிகளில் குர்திஷ் போராளிகள் ஈடுபட்டனர். அதன் ஓர் அங்கமாகச் சிரியாவின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள முக்கிய நகரமான மான்பிஜ் நகரை அவர்கள் சிரியாப் படைகளுக்கு விட்டுக்கொடுத்தனர். அங்கிருந்து குர்திஷ் போராளிகள் விலகிக்கொண்டு அங்கு சிரியாப் படைகளை வரவழைத்துள்ளனர். சிரியா படைகளும் அந்த நகரத்தில் 6 ஆண்டுகளுக்கு பிறகு முதன் முதலாக நுழைந்து இருக்கின்றன. அத்துடன் சிரியா அதிபர் பஷார் அல் ஆசாத்துடன் புதிய கூட்டணியையும் அமைத்துள்ளனர். இனித் துருக்கியின் நடவடிக்கைகளைப்படி அமையும் என்பதைப் பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும் என்றும், அமெரிக்க இரணுவத்தை மீளப்பெற்றதன் பீன்னர் பல அரசியல் விடயங்கள் வெளிப்பட்டு வருவதாகவும் உலக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.



## குரங்குக்குப் பாலியல் தொல்லை எகிப்தில் பெண்ணுக்குச் சிறை

கெய்ரோ.டிசெ.31

ஆபிரிக்கநாடானஎகிப்தில்குரங்குஒன்றுக்குப் பாலியல் தொல்லை கொடுத்த பெண் ஒருவருக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து அங்குள்ள நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எகிப்துநாட்டில்நைல்டெல்டாநகரில்செல்லப் பிராணிகளை விற்பனைக் கூடத்திலே வைக்கப்பட்டிருந்த ஒரு குரங்கே பாலியல் தொல்லைக்கு உட்பட்டிருக்கிறது. அந்தவிற்பனைக் கூடத்துக்குச் சென்ற பஸ்மா என்ற பெயருடைய 25 வயதுப் பெண் அந்தக் குரங்கைப் பார்த்துஇரசித்துஅதனுடன்விளையாடினார். அப்போது அவர் சிரித்தவாறே அந்தக் குரங்கின் பிறப்புறுப்பைச் சீண்டி, பாலியல் தொல்லை கொடுத்தார். இதை அங்கிருந்த ஒருவர் அலைபேசியில் பதிவு செய்து சமூக வலைத்தளத்தில் பதிவேற்றினார். அதைத் தொடர்ந்து அந்தப் பெண் கைது செய்யப்பட்டார். அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. விசாரணையின்போது குறித்த பெண் குற்றத்தை ஏற்றார்.


இதையடுத்துஅவருக்கு3ஆண்டுகள்சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

## லை நடுக்கம் ...னஎச்சரிக்கை







# பிரமிட்டுக்கு அருகே குண்டுவெடிப்பு சுற்றுலாப் பயணிகள் 4 பேர் சாவு

கெய்ரோ.டிசெ.31

எகிப்தில் பிரமிட்டுகள் அருகே நிகழ்ந்த குண்டுவெடிப்பில் வியட்நாமைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட 4 பேர் சாவடைந்தனர்.

எகிப்தின் தலைநகர் கெய்ரோவுக்கு அருகில் உள்ள பிரமிட்டுகளுக்கு அருகில் உள்ள மரியோத்தியா என்ற இடத்தில் வீதியோரத்தில் புதுக்கிவைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில் பிரமிட்டுகளைச் சுற்றிப்பார்ப்பதற்காகப் பயணித்த பேருந்து ஒன்று சின்னாபின்னமாகச் சிதறியது. பேருந்தில் பயணம் செய்த 3 சுற்றுலாப் பயணிகள், மற்றும் எகிப்தைச் சேர்ந்த ஒரு சுற்றுலா வழிகாட்டி ஆகியோர் உடல் சிதறிச் சாவடைந்தனர். எகிப்தைச் சேர்ந்த ஓட்டுநர் உள்ளிட்ட 11 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஊடகங்களை விமர்சிக்க முன் சுயபரிசீலனை செய்யலாமே!

இலங்கை மதச் சார்பற்ற நாடாக இருக்கவேண்டும் என்பதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாடாகத் திட்டவட்டமாகக் கொண்டிருக்கின்றது. அனைத்து மக்களும்சாதி, இனம், மதம், பால், வயது என்ற எந்தவிதமான வேறுபாடுகளும்காட்டப்படாமல்சமமாகமதிக்கப்படவேண்டும் என்று சொல்லப்படுகின்ற அரசமைப்பிலே ஒரு சமயத்துக்கு முதலிடம் கொடுப்பது என்பது முற்றிலும் மாறுபட்டதாக, முரணானதாக இருக்கும். அதனால் ஒரு குறித்த சமயத்துக்கு முதலிடம் கொடுப்பது என்பது எந்தக் காலத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது.

இப்படி யார் சொல்லியிருக்கக்கூடும் என்று தமிழ் மக்கள் ஆச்சரியப்படத்தேவையில்லை. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த தெளிவான கருத்துக்கள்தான் இவை. வெளிநாட்டிலிருந்து இயங்கும் தமிழ் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அறுத்து உறுத்து மிகத் தெளிவாக சுமந்திரன் கூறிய கருத்துக்கள் இவை. அதற்கான ஆதாரம் காணொலி வடிவில் இன்றும் இணையத்தில் காணக்கிடைக்கின்றது.

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குவதற்குத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அரசமைப்பு வழிகாட்டல் குழுவிலே இணங்கியிருக்கிறது என்று சிங்கள அரசியல்வாதிகள் தெரிவிக்கும் கருத்துத் தொடர்பில் சுமந்திரனிடம் அந்த ஊடகம் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே சுமந்திரன் இப்படித் தெரிவித்தார்.

அதுமட்டுமல்ல, அரசமைப்பு பேரவை உருவாக்கம் தொடர்பான தீர்மான வரைவு நாடாளுமன்றத்துக்கு வந்தபோது ஆற்றிய உரையில், எந்தவொரு இனத்துக்கோ சமயத்துக்கோ முதலிடம் கொடுப்பது சரியானதொன்றல்ல என்று தெளிவாகவே சொல்லியிருந்தார். ஆகவே, பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கின்ற ஓர் இணக்கப்பாட்டுக்கு நாங்கள் வரவில்லைஎன்றுதிட்டவட்டமாகச்சொல்லிக்கொள்கின்றேன் என்றுஅந்தக்காணொலியில்அவர்எந்தவிதக்குழப்பங்களும் இன்றிச் சொல்கிறார்.

இதில்கவனிக்கப்படவேண்டிய முக்கிய விடயம், "ஒரு மதத்துக்கு முக்கியத்துவம் வழங்குவது என்பதை எந்தக் காலத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது" என்கிற அவரது வாசகம். ஒருவரிஒருஎழுத்து மாற்றமின்றிஅந்தக்காணொலியில்அவர் அப்படித்தான் கூறுகின்றார்.

அதே சுமந்திரன்தான் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதும் வவுனியாவில் கருத்துத் தெரிவிக்கும்போதும் புதிய அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமைகொடுப்பதில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லை என்று கூறியிருக்கிறார். உத்தேச அரசமைப்பு வரைவிலேயே அதனை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்றும் கூறியிருக்கிறார்.

"பௌத்தத்துக்கு முதலிடம் என்று செய்திகள் வந்துள்ளன. இடைக்கால அறிக்கையில் அது சொல்லப்பட்டுள்ளது. பௌத்தத்துக்கு முதலிடம் என்று சொல்லப்படுவதில் எங்களுக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் அப்படிச் சொல்லப்படுவதனால் மற்றைய சமயத்தவர்களோ அல்லது சமயம் இல்லாதவர்களோ எந்த விதத்திலும் குறைந்தவர்களாக நடத்தப்படமுடியாது. அனைவரும் சமமாக நடத்தப்படவேண்டும். அனைத்து சமயங்களும் சமமாகப் பேணப்படவேண்டும். என்ற வாக்கியங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். என்று இடைக்கால அறிக்கையில் உள்ளது." இப்படித்தான் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் சுமந்திரன்.

இப்படி மூன்றரை வருட காலத்துக்குள் முன்னுக்குப் பின்னர் முற்றிலும் முரணாகக் கருத்துச் சொல்லுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்தான் ''ஏக்கிய ராஜ்ஜிய'' என்றால் ஒற்றையாட்சி இல்லைஎன்று100தடவைகளுக்குமேல்விளங்கப்படுத்திவிட்டேன், ஆனால் தமிழ் ஊடகங்கள் ஏக்கிய ராஜ்ஜிய என்றால் ஒற்றையாட்சிஎன்றேஎழுதுகின்றனஎன்றும்விமர்சித்திருக்கிறார்.

ஒரு மதத்துக்கு முக்கியத்துவம் வழங்குவதை எந்தக் காலத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறியவர், அதுவும் புதிய அரசமைப்பில் அதுதான் கட்சியின் நிலைப்பாடு என்று கூறியவர்,எந்தச்சந்தடிசத்தமும்இன்றிபௌத்தத்துக்குமுன்னுரிமை என்பதை ஏற்றுக்கொண்டுவிட்டோம் என்றும் கூறுகின்றார்.


அதுபோன்று இன்னும் சில காலங்களின் பின்னர் ஏக்கிய ராஜ்ஜிய என்பதை ஒற்றையாட்சி என்று என்றோ நாம் ஏற்றுக்கொண்டுவிட்டோமேஎன்றுகூறமாட்டார்என்பதுநிச்சயமல்ல என்பதால், ஊடகங்கள் பரந்துபட்ட புரிதலுக்குரியதையே தொடர்ந்தும் பேசுகின்றன.

எனவே ஊடகங்களை விமர்சிப்பதற்கு முன்னர் அரசியல்வாதிகள் தங்களைச் சுயபரிசோதனை செய்துகொள்வது சிறந்தது.

# புதியதோர் அரசமைப்பு விரைந்து வரவேண்டும்!

சேரலாதன்

புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி வைக்கும் பொருட்டே எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பைத் தொடர்ந்தும் வகிப்பதற்கு கூட்டமைப்பு விரும்புகிறது என்று மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். இதை ஏற்றுக்கொள்ளும் வகையில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் கருத்து வெளியிட்டுள்ளார்.



**புதிய அரசமைப்பு என்பதில் கூட்டமைப்பு உறுதி நிலை**

புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினால் மட்டுமே தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்குமென்பதில் கூடடமைப்பு உறுதியாகவுள்ளது. இதற்கு ரணில் தலைமையிலான அரசுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பதிலும் சம்பந்தன் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளார். ஆனால் இனவாதிகள் புதிய அரசமைப்பின் உருவாக்கத்தைக் கடுமையாக எதிர்க்கின்றனர். தமது தலைமை அமைச்சர் பதவி பறிபோனமைக்குக் கூட்டமைப்பே காரணமென்பதால் மகிந்த அதன் மீது கடுமையான கோபத்தில் உள்ளார். இதனால் கூட்டமைப்புக்கு எதிராக எதைச் செய்வதற்கும் அவர் தயாராகவே உள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கூட்டமைப்பிடமிருந்து பறித்தெடுப்பதில் அவர் தீவிரமாக உள்ளமை இதன் வெளிப்பாடேயாகும். தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும் தமிழர்களுக்கு அரசியல் தீர்வொன்றை வழங்குவதும் முடியாத காரியங்களாகும். ஆகவேதான் புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பாகக் கூட்டமைப்பு தீவிரமாக உள்ளது.

**இனப்பிரச்சினையை தீர்ப்பது இன்றியமையாத ஒன்றுதான்**

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிட்டால் நாடடில் இனமோதல்கள் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்திவிட முடியும். இதனால் சகல இனமக்களும் ஒற்றுமையாகவும் அமைதியுடனும் வாழ முடியும். ஆனால் இனவாதக் சிந்தனையுடன் செயற்படுபவர்கள் இதையெல்லாம் எண்ணிப் பார்ப்பதில்லை. மக்களைப் பற்றியும் இவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. தமது தனிப்பட்ட நலன்களைப் பேணுவதுதான் இவர்களின் ஒரே நோக்கமாகக் காணப்படுகின்றது.


அரச தலைவர் மகிந்தவுடன் இணைந்து செயற்படுவதையே விரும்புகிறார் என்பது தெரிகின்றது. இதனால் மகிந்தவின் விருப்பத்துக்கு மாறாக இவரால் நடந்துகொள்ள முடியாது. ஆகவே புதிய அரசமைப்புக்கு இவர் ஆதரவு தெரிவிப்பாரெனஎதிர்பார்க்க முடியாது. தென்பகுதி மக்கள் புதிய அரசமைப்புத் தொடர்பாக தெளிவற்ற நிலையில் காணப்படுகின்றனர். இவர்களுக்குத் தெளிவை ஏற்படுத்துவது அரசின் தலையாயா கடமையாகும்.

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான அரசுக்கு அரச தலைவர் ஒத்துழைப்பு வழங்கமாட்டாரென்பதும் மலையில் ஏற்றிவைத்த தீபத்துக்கு ஒப்பான நிலைதான். நாட்டின் அதிகாரமிக்க தலைமைப் பொறுப்பு அரச தலைவர் வசமே உள்ளது. அமைச்சரவைக் கூட்டங்களுக்கும் இவரே தலைமை தாங்குகின்றார். இனிமேல் தலைமை அமைச்சருடன் இவர் சுமுகமாக நடந்துகொள்வாரென எதிர்பார்க்க முடியாது.

**அரசமைப்பு நிறைவேற்றம் இலகுவான ஒன்றல்ல**

இந்த நிலையில் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு இலகுவான காரியமாக இருக்கப்போவதில்லை. அரசமைப்பின் பிரகாரம் இன்னமும் 20 மாதங்கள் மட்டுமே தற்போதைய அரசு பதவியில் இருக்க முடியும். அரச தலைவர் நினைத்தால் நான்கரை ஆண்டுகளை அரசு பூர்த்தி செய்யும் போது அரசைக்கலைத்துவிட முடியுமென்பதையும் மறந்துவிடலாகாது. அரசமைப்பின் பிரகாரம் அந்த அதிகாரத்தை அவர் கொண்டிருக்கின்றார். ஆகவே காலத்தைக் கடத்தாது புதிய அரசமைப்பை நாடாளுமன்றில் சமர்ப்பித்து சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அரசுக்கு அவசியமாகின்றது.

தமிழ்மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது என்பதை தென்பகுதி அரசியல்வாதிகள் புரிந்துகொள்ள வேண்டும். தமிழர்கள் ஏற்கனவே ஆயுதமேந்திப் போராடியவர்கள் என்பதையும் அவர்கள் மறந்துவிடவில்லை.



இதேவேளை சக்திமிக்க மேற்குலக நாடுகள் இலங்கையின் ஒவ்வொரு அசைவையும் அவதானித்துக் கொண்டிருக்கின்றன. அமெரிக்க செனட் சபையில் இலங்கைக்கு எதிரான பொருளாதாரத் தடைகள் குறித்த தீர்மானம் சமர்ப்பிக்குமளவுக்கு நிலைமை மோசமடைந்திருப்பதையும் இங்குள்ள அரசியல்வாதிகள் புரிந்துகொள்ள வேண்டும். தமிழர்களின் நீண்ட நாள் கனவான அரசியல் தீர்வு நனவாக வேண்டுமானால் சகல தரப்பினரும் அதற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அதுவும் சம்பந்தனின் காலத்தில் அது நிறைவேற வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.

# மோடி ஏன் கைவிடப்பட்டார்?



மக்களவைத் தேர்தலுக்கு ஆறே மாதங்கள் இருக்கும் நிலையில், ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகள் பாஜகவைக் கலங்கடித்திருக்கின்றன. மத்திய பிரதேசம், சத்தீஸ்கர் மாநிலங்களில் 15 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த பாஜக, ஆட்சிக்கு எதிரான மக்களின் மனநிலையைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டது. உளவுத் துறையின் அறிக்கை, தேர்தல் கணிப்பாளர்களின் கணிப்புகள் இவற்றுக்கெல்லாம் பிறகு, நிலைமையைக் கட்சி உணர்ந்தபோது காலம் கடந்துவிட்டிருந்தது.


**மோசமான பொருளாதாரம்**

பொருளாதாரம் எவ்வளவு மோசமாக மக்களைப் பாதித்துக்கொண்டிருக்கிறது என்பதை மோடி அரசு உணரவே இல்லை. பணமதிப்பு நீக்க நடவடிக்கைக்குப் பிறகு நடந்த உத்தர பிரதேச சட்ட மன்றத் தேர்தலில் பாஜக 312 இடங்களில் வென்று ஆட்சியமைத்தது. உண்மையில், அப்போது தேச நன்மைக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று பணமதிப்பு நீக்க த்துக்கு பாஜகவினர் முன்வைத்த காரணங்களை உண்மை என்று நம்பிய ஏழை மக்கள், அதைப் பொறுத்துக்கொண்டனர். ஆனால், நிலைமை சீராகாததும், கறுப்புப் பண ஆதிக்கத்தில் அது பெரிய மாற்றத்தை உருவாக்காததும் மக்களிடம் நாளடைவில் அதிருப்தியை உண்டாக்கியது. தொடர்ந்து, ஜிஎஸ்டி அமலாக்கம் உள்ளூர் பொருளாதாரத்தை மேலும் சிதைத்தது. தேர்தல்களில் எதிரொலித்த

**மக்களின் கோபம்**

மக்களின் கோபம் ஜனவரி முதல் நவம்பர் வரை நடந்த இடைத்தேர்தல்களில் வரிசையாக எதிரொலித்தது. ஏழு மாநிலங்களில் மக்களவை, சட்ட மன்றத் தொகுதிகளுக்கு நடந்த 13 இடைத்தேர்தல்களில் காங்கிரஸ் மூன்று இடங்களிலும், காங்கிரஸின் கூட்டணிக் கட்சிகள் ஐந்து இடங்களிலும் வென்றன. பாஜகவுக்கு இரண்டே இடங்களே கிடைத்தன. சங்கப் பரிவாரங்கள் தொடர்ந்து மதவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். 'பசு குண்டர்கள்' ஏற்படுத்திய மோசமான விளைவு, கால்நடை வளர்ப்பில் பெரும் பாதிப்பானது. இறைச்சி ஏற்றுமதியிலும் சரிவு ஏற்பட்டது.

சரிந்திருந்த கிராமப்புறப் பொருளாதாரத்தை இது மேலும் சரித்தது. சட்ட மன்ற உறுப்பினர்கள் பலர் மீது மக்களுக்கு அதிருப்தி இருந்ததை மோடி அமித் ஷா இருவரும் அறிந்தனர். ஒருகட்டத்தில், 50 வீத வேட்பாளர்களைப் புதியவர்களாகக் களமிறக்க இருவரும் திட்டமிட்டனர். ஆனால், அதுவும் தோல்வியில் முடியும் பட்சத்தில் புதிதாக உருவாகும் பகை மக்களவைத் தேர்தலிலும் கட்சிக்குள் எதிரொலிக்கும் என்று அந்த வியூகத்தைக் கைவிட்டனர்.



ஏற்கெனவே சரிந்திருந்த கிராமப்புறப் பொருளாதாரத்தை இது மேலும் சரித்தது. சட்ட மன்ற உறுப்பினர்கள் பலர் மீது மக்களுக்கு அதிருப்தி இருந்ததை மோடி அமித் ஷா இருவரும் அறிந்தனர். ஒருகட்டத்தில், 50 வீத வேட்பாளர்களைப் புதியவர்களாகக் களமிறக்க இருவரும் திட்டமிட்டனர். ஆனால், அதுவும் தோல்வியில் முடியும் பட்சத்தில் புதிதாக உருவாகும் பகை மக்களவைத் தேர்தலிலும் கட்சிக்குள் எதிரொலிக்கும் என்று அந்த வியூகத்தைக் கைவிட்டனர்.

கடைசிக் கட்டமாக தீவிரமான பரப்புரைகளுக்குத் திட்டமி டப்பட்டது. மோடி 30 பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு கடுமையாகப் பரப்புரை செய்தார்.

அமித் ஷா 170க்கும் மேற்பட்ட இடங்களில் பரப்புரை செய்தார். எதுவும் இந்த முறை பெரிதாகக் கைகொடுக்கவில்லை.

**உயரப் பறக்கிறது காங்கிரஸ் கொடி**

கர்நாடகத்தில் கூட்டணி ஆட்சியோடு சேர்த்து, பஞ்சாப், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் என்று மொத்தம் ஐந்து மாநிலங்கள் இப்போது காங்கிரஸ் ஆட்சியின் கீழ் வந்திருக்கின்றன. பாஜக ஆளும் மாநிலங்களின் பட்டியலோடு ஒப்பிட்டால் இது பெரிய விடயம் இல்லைதான். ஆனால், காங்கிரஸுக்கு இது புத்துயிர் ஊட்டியிருக்கிறது. மோடிக்கு எதிர் யார் என்ற கேள்விக்கு இந்தத் தேர்தல் பதில் தந்திருக்கிறது. முக்கியமாக பாஜகவின் இதயமான இந்தி மாநிலங்களில் காங்கிரஸ் தொடுத்திருக்கும் தாக்குதல் பாஜகவின் நிம்மதியைக் குலைத்திருக்கிறது. மோடியைக் கைவிட மக்கள் தயாராகிவிட்டனர் என்பதும், வெறும் வாக்குறுதிகளால் யாரும் நீடிக்க முடியாது என்பதுமே இத்தேர்தல் முடிவுகள் சொல்லும் முக்கியமான செய்தி. இலங்கையும் இதற்கு விதி விலக்கா என்ன?

## ஆசிரியருக்கான கடிதம்

# காட்சியறைகள் கவனமெடுக்குமா?

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடர் தற்போது கோலாகலமாக நடைபெற்று வருகிறது. துடுப்பாட்டக் காய்ச்சல் எம்மவர்களுக்கும் இருப்பது இயல்பானது. அது வரவேற்கத்தக்கதும்கூட. நேற்றுக் காலை யாழ். நகரில் உள்ள முதன்மை வீதியொன்றால் பயணிக்க வேண்டிய தேவை. அந்த வீதியில் உள்ள காட்சியறை ஒன்றில் இந்த ஆட்டம் நேரடி ஒளிபரப்பாகச் சென்றுகொண்டிருந்தது.

வீதியின் பாதிப் பகுதியை ஆக்கிரமித்து இளைஞர்கள் அந்த ஆட்டத்தைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தனர்.

அந்த காட்சியறையின் செயற்பாட்டையும் இளைஞர்கள் அந்த ஆட்டத்தைப் பார்த்தமையும் விமர்சிக்க வேண்டிய விடயங்கள் அல்ல. ஆனால் பாதி வீதியை மறித்தவாறு போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தியவாறு அந்த ஆட்டத்தை இரசித்தமை தவறு என்றே தெரிகிறது. பகல் நேரத்திலேயே இந்த நிலமை என்றால் இரவு நேரங்களில் இது இன்னும் மோசமாகும். காட்சியறைகளின் உரிமையாளர்கள் இது விடயத்தில் உரிய கவனமெடுத்துச் செயற்படுவார்கள் என்று நம்புவோம்.

*பிரகாஸ்*

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# மரங்களின் வீண் ஆசை



அந்தத் தோட்டத்திலிருந்த பெரிய மரத்துக்குநீண்டநாள்களாகவேஓர்ஆசை இருந்தது. அதனைப்பிறமரங்களிடம் அடிக்கடி சொல்லும். இதனால் ஏனைய மரங்களுக்கும்அந்த ஆசைவந்துவிட்டது

எல்லாம் சேர்ந்து இறைவனை அழைத்தன. இறைவன் தோன்றினார். "என்ன மரங்களே, எதற்காக என்னை அழைத்தீர்கள்?" என்று கேட்டார். "இறைவா எங்கள் கிளைகளில் கூடுகட்டி வசிக்கும் பறவைகள் எல்லாம் நினைத்த நேரத்தில்வெளியேசெல்கின்றன. சுதந்திரமாகவானில் பறக்கின்றன. எங்கள் நிழலில் இளைப்பாறும் மனிதர்களும்விலங்குகளும்தங்கள்பாட்டுக்குச் செல்கிறார்கள். ஆனால் நாங்கள் மட்டும் எப்போதும் ஒரே இடத்திலேயே இருக்கிறோம்" என்றது ஆலமரம். "பிறந்தது முதல் இறுதிவரை ஒரே இடத்திலேயே இருக்கிறோம். உலகில் என்ன நடக்கிறது என்பதே தெரிவதில்லை. அப்படி நாங்கள் வெளி உலகைக் காணச் செல்வதாக இருந்தால் அது எங்கள்சாவுக்குப்பின்தான்நடக்கிறது" என்றுவருந்தியதுஅரசமரம். "எல்லாஉயிரினங்களுக்கும் கால்களை அல்லது இறக்கைகளைக் கொடுத்தநீஎங்களைமட்டும்ஏன்இப்படிப்படைத்தாய்? இது என்ன ஓரவஞ்சனை" என்று கேட்டது பனைமரம். "கிளைகள்தான் இறக்கைகள். வேர்கள்தான் கால்கள் என்றார் கடவுள்" வேர்களா? கால்கள்அவைஎங்களைச்சிறைப்பிடித்திருக்கும் விரோதிகள். எங்களுக்கு வேர்கள் வேண்டாம்" என்றன மரங்கள். "அதற்குப் பதிலாக மனிதர்களைப் போல் கால்களைக் கொடுங்கள்" என்று கோபப்பட்டதுவேப்பமரம். ஒவ்வொருபடைப்புக்கும் ஒவ்வோர் அர்த்தம் இருக்கின்றது.

உங்களை இப்படி எதற்காக... என்று இறைவன் முடிக்கும் முன்னே குறுக்கிட்டது முருங்கை. விளக்கம்எல்லாம்வேண்டாம்எங்களுக்குகால்களைத்தரமுடியுமா? முடியாதா? என்றுகேட்டது. சரிநீங்கள்ஆசைப்படுவதால்இன்றுமட்டும்கால்களைத் தருகின்றேன் எங்கே செல் விரும்புகிறீர்களோ அங்கே சென்றுவிட்டு வாருங்கள். பிறகு கால்கள் நிரந்தரமாகவே வேண்டுமா வேண்டாமாஎன்பதைச்சொல்லுங்கள்என்றுஇறைவன் வரமளித்தார்.

மரங்களுக்குக்கால்கள்முளைத்தன. சந்தோசத்தில்துள்ளிக்குதித்தன. உடலைச் சிலுப்பிக்கிளைகளில்கூடி கட்டியிருந்த பறவைகளை விரட்டின. "ஏய் ஓடிப் போங்கள். இனிமேல் எங்கள் மீது வந்தமர்ந்தால் தொலைத்து விடுவோம் என்றன" பாவம் பறவைகள் எங்கே செல்வது எனப் புரியாமல் தவித்தன. மரங்கள் யாரைப்பற்றியும் கவலைப்படாமல் தோட்டத்தைவிட்டுச் சென்றன. வீதிகளில்சந்தோஷமாக ஓடின. உயரமான கட்டடங்களையும்விதவிதமான வாகனங்களையும் கண்டுபிரமித்தன.

ஆஹா இதையெல்லாம் இத்தனை நாள்களாக அனுபவிக்காமல் இருந்துவிட்டோமே என்றது ஆலமரம். இருட்டும்வேளை எல்லா மரங்களும் கடற்கரைக்கு வந்து சேர்ந்தன. மண்ணில் குதித்துக்குதித்துவிளையாடின. இதைக்கண்ட அலை ஆச்சரியப்பட்டது.

"ஏய்மரங்களே" நீங்கள்எப்படிஇங்கேவந்தீர்கள் என்று கேட்டது. "இறைவனிடம் வரம் வாங்கினோம். வேர்களுக்குப் பதிலாகக் கால்களைக் கொடுக்குமாறு கேட்டோம்" என்றது அரச மரம். "பாவம் நீ கூட ஒரே இடத்தில் வருவதும் போவதுமாக இருக்கிறாய். ஊருக்குள் செல்ல நீயும் இறைவனிடம்வரம்கேள்" என்றது வேப்பமரம். அலை சிரித்தது. "இதுபோன்றபைத்தியக்காரத்தனமான வரம் எனக்கு வேண்டாம்" என்றது. "அப்படியானால் நாங்கள் பைத்தியக்காரர்களா?" என்று கோபமாக முறைத்தது முருங்கை மரம். இதில் என்ன சந்தேகம்? சாபத்தை வாங்கிவிட்டு வரம் வாங்கியதாகச் செல்கிறீர்களே உங்களுக்குப் பெருமைசேர்ப்பதேகாய்களும்கனிகளும்தான் அவற்றைமற்றஉயிரினங்கள்உண்டுவாழ்கின்றன. அந்தக் காய்களும் கனிகளும் நீங்கள் ஒரே இடத்தில்இருந்துகொண்டுமண்ணின்சத்தத்தையும் நீரையும் பெறுவதன்மூலம் கிடைக்கிறது. வேர்கள்தான் அவற்றைப் பெற்றுத் தருகின்றன. அந்தவேர்களையேஉதறித்தள்ளிவிட்டுஇங்கும் அங்குமாக நடமாடினால் எப்படிக் கனிகளைப் பெற முடியும் என்றது அலை. நீ என்ன சொல்கிறாய். நாங்கள் செய்தது தப்பா என்று கேட்டது ஆலமரம். "ஆமாம்உங்கள்கிளைகளில்பறவைகள்வசிக்கின்றன. நிழலில் உயிரினங்கள் தங்குகின்றன.

இப்படி அடுத்தவர்களுக்கு உதவும் அற்புதமான வரத்தைஇறைவன்தந்திருக்கிறார். என்னையே எடுத்துக்கொள்ளுங்கள் நான் இங்கே இருக்கும் வரைதான் மதிப்பு. குழந்தைகள் தேடிவந்து சந்தோஷமாக கால்களை நனைக்கின்றார்கள். அதுவே நான் ஊருக்குள் சென்றால் என்ன ஆகும்? எல்லோரும் என்னைத் திட்டுவார்கள்.

யாருக்கும் பயனில்லாமல் துன்பம் கொடுப்பது வரமா? அல்லது மற்றவர்களை மகிழ்விப்பது வரமா? என்றுகேட்டது அலை. மரங்கள்ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. அலையே நீ சொல்வது சரிதான். புத்திகெட்டு இப்படி ஒரு சாபத்தை வாங்கி விட்டாம். இப்போதே இறைவனிடம் வேண்டி எங்களை அடுத்தவர்களைச் சந்தோசப்படுத்தி வாழ்கிறோம் என்றது அரசமரம். அலை கையசைத்து விடை கொடுக்க மரங்கள் அங்கிருந்து சென்றன.

# தினமும் 10 நிமிடங்கள் தோப்புக்கரணம்

தினமும் 10 நிமிடங்கள் தோப்புக்கரணம் செய்து வந்தால் பல நன்மைகள் உடலுக்குக் கிடைக்கும்.


ஆன்மிக ரீதியில் உடல் ஆரோக்கியம் பற்றிச் சிந்தித்தவர்கள் எம் முன்னோர்கள். அதனால் பிள்ளையாருக்கு தோப்புக்கரணம்போடும்பழக்கத்தைப்புகுத்தினர். மக்களிடம் இது உடல் ஆரோக்கியம்எனச்சொன்னால்கேட்கமாட்டார்கள்என்பதால் ஆன்மிக ரீதியில் அதனை வழிப்படுத்தினார்கள். இதைத் தொடர்ந்து செய்து வந்தால் பல்வேறு ஆரோக்கியமான மாற்றங்களை கண்டு கொள்ளலாம்.

**போடுவது எப்படி?**

வலது கைப்பெருவிரலால் இடதுகாது மடலின் நுனியைப் பிடித்துஇடதுகையைமடக்கியும்இடதுகைபெருவிரால்வலது காது மடலின் நுனியைப் பிடித்துக்கொண்டு வலது கையை மடக்கியும் இரு கால்களை மடக்கியும் முதுகை வளைக்கமல் நேராக உட்காரும் நிலையில் தோப்புக்கரணம் போட வேண்டும்.

தோப்புக்கரணம்போடுவதால்உடலில்ஏற்படும்மாற்றங்கள் தோப்புக்கரணத்தில்காதுநுனிகளில்தொடுவதன்காரணமாக மூளையின் நினைவுக் கலங்களின் வளர்ச்சி தூண்டப்பட்டு நினைவாற்றல், ஞாபக சக்தி என்பவை அதிகரிக்கின்றன.

உடலின் மந்தமான மனநிலை நீங்கி புதுவித ஊக்கமும் உற்சாகமும்கிடைக்கிறது. அத்தோடுஉடலின்ஆற்றல்சக்தியும் அதிகரிக்கிறது. தோப்புக்கரணம் செய்வதால் மூளைக்குரிய குருதிச் சுற்றோட்டம் சீராகி மனதில் ஏற்படும் அழுத்தம் மனச்சோர்வு என்பன நீங்கி உடலின் கை, கால்களில் தசைகள் வலிமையாகும். தோப்புக்கரணம்யோகாமற்றும்உடற்பயிற்சிகளைத் தினமும் பின்பற்றி வந்தால் பெண்களின் பிரசவம் எளிதாகும். அத்தோடுஅல்சைமா ஆட்டிசம்போன்ற நோய்கள் வராது.



## வர்ணம் தீட்டுவோம்



## தொலைந்துவிட்டது

வாகன இலக்கத்தகடு PR6172 29.12.2018 அன்று யாழ்ப்பாணத்திற்கும் பளைக்கும் இடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்குதகவல்தரவும். சன்மானம்தரப்படும்.

**- 077 9416766**

## SCIENCE HALL அருகில் (கன்னாதிட்டி வீதி)

**பௌதிகவியல்**

M.கருணாநிதி B.Sc (Spl. in . Phy)

English, தமிழ்மூலம்

A/L 2021. 2020, 2019, Day

நடைபெறுகின்றன.

**- 077 618 3064**

## எங்கள் அன்பு நிறைந்த வாடிக்கையாளர்களே!

எங்களிடம் அற்லஸ், சீபிறா, ஸ்கூல்மற், ரட்ணா, எல்லாக் கொப்பிகளுக்கும் 25% கழிவு வழங்கப்படுகிறது. அத்துடன் பாடப் புத்தகங்கள் உபகரணங்களுக்கும் 10% கழிவு வழங்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறிய தருகின்றோம்.


**A.C.D**
**No. 212, 214, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(C 8802/15/17)

உதயன்
விளம்பரதொடர்புகளுக்கு
advt@uthayan.com

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

உதிப்பு 30 . 09 . 1990



உதிர்வு 12 . 01 . 2018

**அமரர் சுந்தரலிங்கம் தினேஸ்கரன்**

திதி - 01.01.2019

எங்கள் வாழ்வின் உயர்வுக்காய் வாழ்ந்தாய்
நின் உடல் மறைந்து ஓராண்டு
சென்றது தெரியவில்லை
உன் நினைவுகள் எங்களுடன் என்றும் இருக்கும்

நாளை (01.01.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் முதலாம் ஆண்டு கிரியைகள் இடம்பெறும் உற்றார். உறவினர். நண்பர்கள் கலந்து கொள்ளவும்.

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.
(சி. சுந்தரலிங்கம்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மீசாலை வடக்கு,
ஆலங்கேணி வைரவர் ஆலயத்திற்கு
ஒலிபரப்பு சாதனங்களை வழங்கி உதவிய
வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்
கௌரவ **சந்திரலிங்கம் சுகிர்தன்**
அவர்களை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- ஆலய நிர்வாகத்தினர் -
மீசாலை வடக்கு ஆலங்கேணி வைரவர் ஆலயம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**பொன்னையா நல்லையா**
(ஓய்வுநிலை அபதிர்)

தோற்றம்
18.04.1925

மறைவு
01.12.2018



கடந்த 01.12.2018 சனிக்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் அன்பு தந்தையின் பிரிவுச்செய்தி அறிந்து எமக்கு நேரிலும், தொலைபேசிமூலமும் ஆறுதல் தெரிவித்து எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரி வித்துக்கொள்கின்றோம்.

அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு.

குடும்பத்தினர்.

(in.5427) (13 17)

## கேள்வி அறிவித்தல் நல்லூர் பிரதேசசபை
## சபை நிதி வேலைத்திட்டம் 2018

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப் பட்டவாறு வேலைகளுக்காக கோருகின்றார்

02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படு கின்றது. ஆயினும் 2016.09.30 ஆம் திகதி 04/ 2016 (1) ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின்படி வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப் பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 'தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப் புலம் வீதி கொக்குவில் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700 , 021-3142841) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் இடத்திலிருந்து 2018.12.31 ஆம் திகதியிலிருந்து 2019.01.14 ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்..

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு 2019.01.16 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கோரப்பட்ட வேலைகளுக்கான கேள்வி செல்லுபடியாகும் காலம் 1-12 கேள்வி சமர்ப்பிக் கும் இறுதி திகதியிலிருந்து 63 நாள்களும் 13-18 சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து 49 நாள்களும் ஆகும்.

09. கேள்வி பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனு திக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும்.

| இல | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | அரியாலை J/94 பிரிவு கண்டி வீதி குறுக்கு வீதி இளையதம்பி வீதியின் குறுக்கு வீதிகள் புனரமைப்பு | 3.533 | 2,000.00 | C8 | 36,000.00 | 03 மாதம் |
| 02. | அரியாலை பெரியதோட்டம் குறுக்கு வீதி புனரமைப்பு | 4.247 | 2,000 .00 | C8 | 43,000.00 | 03 மாதம் |
| 03. | மணியந்தோட்டம் 6ம் குறுக்கு வீதி புனரமைப்பு கட்டம்; III | 2.674 | 2,000.00 | C8 | 27,000.00 | 03 மாதம் |
| 04. | அரியாலை அம்மன் வீதி குறுக்கு வீதிகள் புனரமைப்பு கட்டம் II அம்பலவாணர் வீதி புனரமைப்பு | 3.359 | 2,000.00 | C8 | 34,000.00 | 03 மாதம் |
| 05. | மணியந்தோட்டம் 4ம் குறுக்கு வீதி புனரமைப்பு | 3.133 | 2,000.00 | C8 | 32,000.00 | 03 மாதம் |
| 06 | கிழக்கு அரியாலை கடற்கரை இணைப்பு வீதி புனரமைப்பு கட்டம் II | 2.645 | 2,000.00 | C8 | 27,000.00 | 03 மாதம் |
| 07. | அரியாலை கிழக்கு கோவிந்த வீதி, வீரபத்திரர் வீதி புனரமைப்பு கட்டம் III | 2.288 | 2,000.00 | C8 | 23,000.00 | 03 மாதம் |
| 08. | கல்வியங்காடு பருத்தித்துறை வீதி குறுக்கு வீதிகள் புனரமைப்பு கட்டம் II காலிங்கராஜா வீதி புனரமைப்பு | 2.351 | 2,000.00 | C8 | 24,000.00 | 03 மாதம் |
| 09. | கொக்குவில் முதலிகோவில் வீதி புனரமைப்பு | 2.856 | 2,000.00 | C8 | 29,000.00 | 03 மாதம் |
| 10 | கோண்டாவில் கொட்டைக்காடு சுடலை வீதி குறுக்கு வீதிகள் புனரமைப்பு கட்டம் I | 2.671 | 2,000.00 | C8 | 27,000.00 | 03 மாதம் |
| 11 | கோண்டாவில் இருபாலை குறுக்கு வீதிகள் புனரமைப்பு | 2.037 | 2,000.00 | C8 | 21,000.00 | 03 மாதம் |
| 12 | கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலய வீதி புனரமைப்பு தொடர்வேலை. பொன்சிட்டி வீதி புனரமைப்பு | 2.007 | 2,000.00 | C8 | 20,500.00 | 03 மாதம் |
| 13 | அரியாலை கிழக்கு காரமுனங்கு இந்து மயானத்திற்கு இளைப்பாற்று மண்டபம் அமைத்தல் | 1.232 | 2,000.00 | C9 | 13,000.00 | 03 மாதம் |
| 14 | திருநெல்வேலி இராமலிங்கம் வீதி 3ம் ஒழுங்கை புனரமைப்பு, சட்டநாதர் வீதி குறுக்கு ஒழுங்கைகள் புனரமைப்பு | 1.107 | 2,000.00 | C9 | 12,000.00 | 02 மாதம் |
| 15 | கொக்குவில் கேணியடி குறுக்கு வீதிகள் புனரமைப்பு, J/99 பிடாரி அம்மன் பின்வீதி புனரமைப்பு | 1.412 | 2,000.00 | C9 | 15,000.00 | 02 மாதம் |
| 16 | திருநெல்வேலி (இல 61/2..) பலாலி வீதி குறுக்கு வீதிகள். பலாலி வீதி குறுக்கு வீதிகள் புனரமைப்பு | 1.439 | 2,000.00 | C9 | 15,000.00 | 02 மாதம் |
| 17 | இணுவில் சிவகாமி அம்மன் வீதி புனரமைப்பு | 0.537 | 2,000.00 | C9 | 6,000.00 | 02 மாதம் |
| 18 | கோண்டாவில நெட்டிலிப்பாய் பிள்ளையார் வீதி புனரமைப்பு | 0.564 | 2,000.00 | C9 | 6,000.00 | 02 மாதம் |

**குறிப்பு:-** பந்தி 2 இல் கூறப்பட்ட நிபந்தனைகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் வேண்டப்படும் தரம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு இல்லாதவிடத்து அதனிலும் கூடியதரம் சமர்ப் பித்த கேள்விகள் பரிசீலிக்கப்படலாம்.

10. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2019.01.10 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் மு். ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

**தலைவர்**
**பெறுகைக்குழு**
**நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.**
2018.12.31

## விஷேட விலைகுறைப்பு

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய், ஊரெழுவில் கரந்தன் வீதி, நீர்வேலியில் இயங்கும் T.செல்வகுமார் ஆட்டிறைச்சிக் கடையில் (கிடாய் ஆடு) 1Kg இறைச்சி 1500/= க்கும் ஒரு பங்கு (2Kg) 3000/= க்கும் இன்று முதல் விற்பனையாகின்றது.

- 077 986 0180

## வாடகைக்கு வீடு தேவை

நான்கு பேர் கொண்ட ஒரு சிறிய குடும்பத்திற்கு யாழ். மாநகரசபைப் பகுதியில் அல்லது நல்லூர் சுற்றாடலில் வீடு தேவை. - 077 805 2520

## வாடகைக்கு

வான் நாள் ஒன்றுக்கு 5000/=, கார் நாள் ஒன்றுக்கு 3500/= க்கும் வாடகைக்கு விடப்படும். தொடர்பு - 077 005 0344

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை
## பொது அறிவித்தல் – 2019

**1. படவரைஞராக பதிவு செய்தல்.**

1.1. 2019 ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்வதற்கும், புதுப்பித்து கொள்வதற்கும், எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**2. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2019**

2.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149.150.151 ஆம் உப பிரிவுக்கு அமைவாக இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருள்களை விநியோகிப் போர் 2019ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரத்தைத் தமது பிரிவுக்குட்பட்ட உப அலுவலகங்களில் பெற்று அதனை பூரணப்படுத்தி புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், ஒலுமடு உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரியகட்டணங்களை 2019.03.31 ஆம் திகதிக்குள் மீளச் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுகொள்கின்றேன்.

**3. வீடமைப்பு நகரசீர்திருத்தம் கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்**

3.1. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார், அரசசார்பு கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல் புதுப்பித்தல் வேலைகளை அனுமதி இன்றி செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமென்பதை அறியத்தருகின்றேன்.

3.2. ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டிமுடிக்கபடாத பட்சத்தில் புதுப்பித்தல் வேண்டும்.

3.3. சபையின் அனுமதிபெற்றுக் கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச்சான்றிதழைப் (COC) பெற்றுக் கொள்ளவேண்டும்.

**4. சூழல் பாதுகாப்பு உரிமம் ( EPL) - 2019**

4.1. மத்திய சுற்றாடல் அதிகாரசபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் பாதுகாப்புச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, எமக்கு வழங்கப்பட்ட குறிக்கபட்ட அதிகாரங்களின் கீழ், புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் நிர்வாகப் பாதுகாப்பு பிரதேசத்தில் 1533/16 ஆம் இலக்க, 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கபட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக, மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு எமக்கு வழங்கபட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2019 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடாத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத் தருகின்றோம்.

**5. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

5.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) பிரிவிற்கு அமைவான துணைவிதியின் பிரகாரம் இப் பிரதேசசபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கு 28.02.2019 ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத பெயர்ப்பலகை ஒன்று மட்டும் காட்சிப்படுத்த முடியும். விளம்பரங்களுடானான பெயர்ப்பலகை மற்றும் மேலதிகமாக உள்ள விளம்பரப்பலகைகளுக்குப் பிரதேசசபையின் அனுமதி பெறப்படல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத விளம்பரப்பலகைகள் பிரதேசசபையால் அகற்றப்படும்.

**6. பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் அண்மித்த பகுதியில் கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி, உயிர்க்கோழிகள் விற்பனையைத் தடைசெய்தல்.**

6.1. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிகடைகள் அமைந்துள்ள பகுதிகளில் 1.5கி.மீ வரையான சுற்றாடலில் மரக்கறிகள் கடலுணவுகள், இறைச்சி வகைகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ, வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாகத் தடைசெய்யபட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியதருகின்றோம்.

**7. பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்**

7.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கு அமைவாக புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருள்களை அனுமதியின்றிக் கொண்டுசெல்லல், கொட்டுதல் ஆகியன பொதுசுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு தடைசெய்யபட்டுள்ளது. தவறின் பிரதேசசபை சட்டம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**8. பொது இடங்களில் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளைப் போடுதல் தடைசெய்யபட்டுள்ளது.**

8.1. சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும், வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதயோரங்களிலும் கழிவுப்பொருள்களைப் போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தங்களிடம் சேரும் கழிவுப்பொருட்களைக் கொள்கலனில் சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களில் உரியகட்டணத்தைச் செலுத்தி சுற்றாடல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**9. பொதுசுகாதாரம் பேணுதல்.**

9.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கு அமைவாக சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும், பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் பற்றைகளைத் துப்பரவு செய்து சுகாதாரதினைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**10. கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல்**

10.1. 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 66(1) ஆம் பிரிவுக்கு அமைவாக சபை எல்லைக்குள் பொதுப்போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் வகையில் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலிக் கால்நடைகளை கட்டுப்படுத்தி உரிமையாளர்கள் சரியான முறையில் பராமரித்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் பிரதான வீதியை உள்ளடக்கிய நகர்ப்பகுதிகளில் பகல்,இரவு நேரங்களிலும் ஏனைய வீதிகளில் இரவு நேரத்திலும் நடமாடும் கட்டாக்காலி கால்நடைகள் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டு பிடிகூலி, தண்டப்பணம் அறவிடப்படும் என்பதுடன் செலுத்தத் தவறும் பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படுவதுடன் உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

**11. சபை எல்லைக்குள்.**

11.1. 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 68ஆம் பிரிவுக்கு அமைவாக சபை எல்லைக்குள் கல், ஆற்றுமணல்,கிரவல் என்பவற்றுக்கான வழி அனுமதி குறித்த உப அலுவலங்களில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

11.2. சபை எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கான தரிப்பிட அனுமதி குறித்த உபஅலுவலகங்களில் பெற்றுக்கொள்ளப்பட்வேண்டும்

**12. துவிச்சக்கர வண்டிகளிற்கான உரிமம் பெறல்**

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபை சட்டத்தின் 148ஆம் பிரிவுக்கு அமைவாக 2019ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டிகளிற்கான உரிமத்தினை 2019.03.31ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**செ. பிறேமகாந்**
**தவிசாளர்,**
**பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.**
**2018.12.31**

(IN 8852) (14.17)

## யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

Experts in English Training

சிறந்த வேலைவாய்ப்பிற்கு...

உள்நாட்டு, வெளிநாட்டு உயர் கல்விக்கு...

**Spoken English**

## ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

Reading Writing Speaking Listening

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| Mon,Wed,Fri 8:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 3.30 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Sat, Sun 3:30 p.m. | Tue, Thu 08.30 a.m.<br>Sat,Sun 08.30 a.m. |

சுன்னாகம் Sat,Sun 9:30 a.m

சண்டிலிப்பாய் Mon,Wed,Fri 1:30 p.m

கிளிநொச்சி Sat, Sun 10.30 a.m

கற்பிக்கப்படும் பாடத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்

DIPLOMA IN FLUENT ENGLISH

Diploma in Fluent English Part - I — For people who are doubtful about their English and want to speak English fluently

Diploma in Fluent English Part - II — For speakers who want to master diction and style.

- அனுபவம் மிக்க விரிவுரையாளர்களினால் Grammar பற்றிய போதிய விளக்க முறைகள் மாணவர்களுக்கு பூரணமாக வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் ஆங்கிலம் கதைப்பதற்கான சந்தர்ப்பம் கணினி மூலமான
- Online Listening பயிற்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது .

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS** •Academic •General

•Unique Test Tips • Latest course Materials

**IELTS Life Skills (A1 , B1)**

திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (Reg No. P25/0056)

## DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, | M.M.V.வீதி | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | சீரணிச் சந்தி | No.19,A9 வீதி, |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021 225 6665 | Tel.: 021-228 5655 |

**IIS** 23 வருட கால அனுபவம்

எதிர்காலத்தை உங்களுடையதாக்குங்கள்

Pearson



# HND

COMPUTING

CIVIL ENGINEERING

BUSINESS MANAGEMENT

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 05.01.2019

- உயர்கல்விக்கே உரித்தான வளாகம்
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) அங்கீகாரம்
- PEARSON பிரதிநிதிகளின் நேரடி வருகையும் கண்காணிப்பும்
- தொழில்சார் பயிற்சியுடனான கற்கைநெறி
- இலகுதவணை முறையிலான கட்டண வசதி
- கல்விக்கேற்ற வேலைவாய்ப்பு வசதிகள்

IIS CITY CAMPUS

200, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

021 222 8060

iis@iis.edu.lk , info@iis.edu.lk

Hot line : 0777570038



## திருமண வாழ்க்கையை விரும்புகிறார்

# பல்லவி

லிவிங் டுகெதர் உறவு எனக்கு தேவையில்லை, நான் திருமணம் செய்து கொண்டு வாழ்வதையே விரும்பு கிறேன் என்று நடிகை சாய் பல்லவி தெரிவித்துள்ளார்.

சூர்யாவுடன்என்.ஜி.கேபடத்தில் நடித்து வரும் சாய் பல்லவி, அடுத்து பகத் பாசிலுடன்ஒருமலையாளபடத்தில் நடிக்க இருக்கிறார். காதல், திருமணம், லிவிங் டுகெதர் குறித்து ஒரு பேட்டியில் மனம்திறந்துபேசியுள்ளார்.

'நான் காதலித்திருக்கிறேனா. இல்லையா? லிவிங் டு கெதர் உறவில் வாழ்வீர்களா என்று கேட்கிறார்கள். எனது கல்லூரி நாள்களில் நான்புத்தகங்களைகாதலித்தேன். தற்போதுசினிமாவை காதலித்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய தனிப்பட்டவாழ்க்கையைபொறுத்தவரை லிவிங் டுகெதர் உறவு எனக்கு தேவையில்லை. இப்படி சொல்வதால் அதற்குஎதிராக இருக்கிறேன் என்பதல்ல.


இது எல்லாமே அவரவர்களின் செயல்பாடுகளைப் பொறுத்தது. என்னைப் பொறுத்தவரை எனக்கு அத்தகைய உறவு தேவையில்லை.

நான் திருமணம் செய்து கொண்டு வாழ்வதையே விரும்புகிறேன்". இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



பணத்தை வைத்து அரசியல்
பிணத்தை வைத்து அரசியல்
மதத்தை வைத்து அரசியல்
ஆக மொத்தம் இப்படி தான்
இலங்கை அரசியல்





## இன்றைய நாள்

**மேடம்:** பேச்சில் ரசனை மிகுந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி புதிய அனுபவம் தரும். நிலுவைப்பணம் வசூலாகும். குடும்பப் பிரச்னைக்கு சுமூக தீர்வு கிடைக்கும்.

**இடபம்:** செயல்திறன் கண்டு சிலர் பொறாமை கொள்வர். பொறுமை காப்பதால்சிரமம் தவிர்க்கலாம். தொழில் வளர்ச்சி பெற கூடுதல் பணிபுரிவது அவசியமாகும். செலவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்..

**மிதுனம்:** சிலர் உதவுவது போல பாசாங்கு செய்வர். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற சில மாற்றம் செய்வீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்க தாமதம் ஆகலாம்.

**கடகம்:** வாழ்வில் முன்னேற்றம் பெற புதிய வாய்ப்பு வரும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி நிறைவேறும். உபரி வருமானம் கிடைக்கும்.

**சிங்கம்:** சொந்த நலனில் அக்கறை கொள்வீர்கள். அவப்பெயர் வராமல் செயல்பட வேண்டும். தொழில் வியாபரம் கூடுதல் பணி உதவும். அளவான பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** நேர்மைக்குணம் அதிகம் பின்பற்றுவீர்கள். திறமை வளர்ந்து பல மடங்கு நன்மை தரும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். பணம் கொடுக்கல் வாங்கல் சீராகும்.

**துலாம்:** செயல்களில் நிதானம் வேண்டும். சகதொழில் சார்ந்த எவரிடமும் சச்சரவு பேசக்கூடாது. தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். பணவரவில் முன்னேற்றம் உண்டு.

**விருச்சிகம்:** சிறு செயலையும், நேர்த்தியுடன்செய்வீர்கள். வெற்றிபெற எளிதான வழி பிறக்கும். தொழில் வியாபாரம் வியப்பூட்டும் வகையில் செழிக்கும்.

**தனுசு:** பலநாள் தாமதமான பணி ஒன்று எளிதாக நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனையில் அனுகூலம் ஒரு சேரக் கிடைக்கும்.

**மகரம்:** மனதில்நம்பிக்கை வளர்ப்பது அவசியமாகும். தொழில் வியாபாரத்தில் உள்ள குறைகளை பிறரிடம் சொல்ல வேண்டாம். அதிக நிபந்தனையுடன் கடன் பெறக்கூடாது.

**கும்பம்:** சிலர் தவறான ஆலோசனைகள் சொல்வர். எதிர்கால நலன் கருதி விலகுவது நல்லது. தொழிலில் குறையை சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை சீராகும்.

**மீனம்:** பேச்சில் உறுதி நிறைந்திருக்கும். உயர்ந்த செயல்களால் நன்மதிப்பு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். உபரி வருமானம் கிடைக்கும்.



## வன்முறையில் ஆர்வமில்லை

பேர் வைக்கிறதிலதான் எனக்கும் என்
மனைவிக்கும் சண்டையே வரும்....
அவ காபின்னுவா... நான்
சுடுதண்ணின்னுவேன்...
அவ தோசைன்னுவா...
நான் ஊத்தாப்பம்ன்னுவேன்...
அவ பொங்கலன்னுவா.....
நான் சோறுன்னுவேன்...
அவ சாம்பார்ன்னுவா....
நான் ரசம்ன்னுவேன்....
கடைசில கைல கரண்டியோட
கிச்சனை விட்டு வெளிய வருவா.....
நான் சத்தம் போடாம கம்முன்னு
சாப்ட்ருவேன்.....
ஏனென்னா நமக்கு வன்முறையில்
ஆர்வமில்லை...










## வாழ்க்கை...

நேரா போய் ரைட் எடுத்தா, ஒரு தோல்வி வரும்... அங்கருந்து லெப்ட் போனா பெருசா ஒரு துரோகம் இருக்கும்.. கொஞ்ச தூரம் போய் ஒரு யு டேன் எடுத்தா, அங்க கடன் என்கிற ஒரு பெரிய பள்ளம் இருக்கும்.. அந்த பள்ளத்தில விழுந்து மூஞ்சி முகமெல்லாம் பேந்து எழுந்திருச்சு நேரா போனா, ஏமாற்றம் என்கிற ஒரு சிக்னல் இருக்கும், அதையும் தாண்டி போனா, போட்டி, பொறாமைங்கர ஸ்பீடு பிரேக்கர் வரும், அதையும் தாண்டி டாப் கியர் போட்டு போயிகிட்டே இருந்தால் அதுக்கடுத்த வீடு தான் நீங்க கேட்ட வெற்றியோட வீடு வரும்.. வெற்றிய தொட்ட அடுத்த கணமே திரும்பி பார்த்தால் எமன் எருமையில நம்மள விட வேகமா வருவான். இது தானுங்க வாழ்க்கை...



## நிஜமான உண்மைகள்



## மரண அறிவித்தல்

### செல்வி சாந்தநாயகி சுப்பிரமணியம்

(முன்னாள் சங்கீத ஆசிரியர், யாழ். வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி, இராமநாதன் நுண்கலைபீடம், யாழ். பல்கலைக்கழக ஓய்வு பெற்ற சிரேஷ்ட இசை (வயலின்) விரிவுரையாளர்)



அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2018) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல் :
பெறாமகள்மார் -
சுகன்யா இளவரதன் (U.K),
லாவண்யா விதூஷன்
(Sydney Australia),
கமலநாயகி (சகோதரி)
021222 6005

84/1, தபாற்கந்தோர் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(cs. 22173) (13.17)

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 07 1936



மறைவு 29 12 2018

### வேலுப்பிள்ளை அருணாசலம்

(தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் ஓய்வுபெற்ற பிராந்திய முகாமையாளர்)

வட்டுக்கோட்டை தெற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அருணாசலம் 29.12.2018 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கண்மணியம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பு ஆச்சிப்பிள்ளை (கோப்பாய்) தம்பதியினரின் அன்பு மருமகனும், நாகரத்தினத்தின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (சுழிபுரம்), சிவஞானரத்தினம் (லண்டன்), மனோரஞ்சித மலர் (லண்டன்), சிவஞானச்செல்வம் (வட்டுக்கோட்டை), தில்லையம்பலம் (வட்டுக்கோட்டை), சிவானந்தகணேசன் (கொழும்பு), சரோஜினி (நியுசிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரனும் , காலஞ்சென்றவர்களான முத்தாச்சி (கோப்பாய்) , சுவாமிநாதன் (உடுவில்), அமுதமணி (கோப்பாய்), சதாசிவம் (புதுக்குடியிருப்பு ) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 31.12.2018 முதல் இல.24, மூர்வீதி,கொழும்பு - 06 இல் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் 02.01.2019 அன்று காலை 9.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கல்கிசை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : மனைவி இல.24, மூர்வீதி,கொழும்பு - 06,தொடர்பு : 0112503852

## புலிகளை...

விக்கிரமசிங்க தலைமையிலான அரசைத் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்புவது கடினமான வேலை அல்ல. இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் தோற்கவில்லை. இன்னமும் தலைநிமிர்ந்துதான் நிற்கின்றோம். ஒருபோதும் புறமுதுகு காட்டி ஓடமாட்டோம். எவருக்கும் அடிபணியவும் மாட்டோம்.

எம்மைப் பார்த்து 'ஒக்ரோபர் 26 அரசியல் சூழ்ச்சியினர்' என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் சொல்கின்றார்கள். உண்மையில் அரசியல் சூழ்ச்சியை நாம் செய்யவில்லை. அவர்கள்தான் 50 நாள்களுக்குள் நீதிமன்றங்களைப் பயன்படுத்தி அரசியல் சூழ்ச்சியைத் செய்து எம்மை வெளியேற்றினார்கள்.

நீதிமன்றங்களை நாம் நம்பவில்லை. எனினும், நீதிமன்றத் தீர்ப்புக்குத் தலைவணங்க வேண்டிய நிலைமை வந்தது.

நாட்டின் நலன் கருதியே தலைமை அமைச்சர் பதவியிலிருந்துவிலகினேன். பதவிக்கு நான் ஆசைப்பட்டவன் அல்லன் என்பதை நிரூபித்துக் காட்டினேன். எனினும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மைப் பலத்துடன் நாட்டு மக்களின் பேராதரவுடன் நாம் மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறுவோம். அந்த நாள் தொலைவில் இல்லை. . .

நாடாளுமன்றத் தேர்தலை இழுத்தடிக்காமல் இப்பவே அரசு வைத்தாலும் நாம்தான் வெற்றி பெறுவோம். இதை உணர்ந்துதான் பொதுத் தேர்தலுக்கு அரசு அஞ்சுகின்றது. காலத்தைக் கடத்துகின்றது. அரசமைப்பைக் காரணம் காட்டுகின்றது.

தற்போதைய அரசு நிரந்தரமல்ல. புத்தாண்டில் அதிரடி மாற்றங்கள் காத்திருக்கின்றன. அதைப் பற்றி இப்பவே நாம் சொல்லமாட்டோம்.

ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு மீண்டும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனை அரச தலைவர் கவனத்தில் எடுக்கவேண்டும்.

ஊழல், மோசடிக்காரர்களின் முகத்திரையை அரச தலைவர் கிளித்துக் காட்ட வேண்டும். அரச தலைவர் தனது அதிகாரங்களைத் துணிவுடன் பயன்படுத்த வேண்டும் - என்றார். (5)

## வாடகை அடிப்படையில் வாகனம் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல்

### சாவகச்சேரி நகராட்சி மன்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் மற்றும் அலுவலக பாவனைக்கு உற்பத்தி ஆண்டு 2005 அல்லது அதற்கு பிற்பட்ட ஹயஸ் ரக வாகனம் / கார் வாகனம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு ஆர்வமுடைய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பில் மேலதிகவிவரங்களினை நகராட்சி மன்றம் சாவகச்சேரி எனும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் அறியலாம் 01.01.2019 - 07.01.2019 வரை அலுவலக நேரத்தில் நிதிக்கிளையில் ரூபா 500 .00 (மீள் பெறாத தொகையினை) செலுத்தி கேள்விப்பத்திரத்தினை பெறலாம் 2019.01.07 ஆந் திகதி நண்பகல் 1.00 மணி வரை மாத்திரமே கேள்விப்பத்திரத்தினை பெறலாம் 2019.01.07 ஆந் திகதி பி.ப. 3 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ பதிவுத்தபாலிலோ தபாலின் இடது பக்க மேல் மூலையில் வாகன வாடகை 2019 எனக்குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

2019.01.07 ஆந் திகதி பி.ப. 3 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்வது நிறுத்தப்பட்டு உடனடியாக கேள்வி திறக்கப்படும்.

2019.01.07 ஆந் திகதி பி.ப. 3 மணிக்கு பின்னராக கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் (கணக்காளர் நகராட்சி மன்றம் சாவகச்சேரி) 021 227 0963

*தவிசாளர், தலைவர்*

*சபை பெறுகைக்குழு, நகராட்சி மன்றம் சாவகச்சேரி. 31.12.2018*

## மரண அறிவித்தல்

### திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம்



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் நேற்று(30.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (உரிமையாளர் மல்ரி ஓயில்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் செல்லம்மா தம்பதியரின் அன்புப்புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை இராசம்மா தம்பதியரின் அன்புமருமகளும் நளினிசிறி (லண்டன்), நரேந்திரன் (கனடா), சிறிலலிதாம்பிகை, நரேந்திரதேவ் (லண்டன்), உதயபானு, உருத்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் சுதர்சன் (லண்டன்), தர்சினி (கனடா), கணேசமூர்த்தி (கிராம உத்தியோகத்தர், பூநகரி), சுதாமதி (லண்டன்), நிர்மலகுமார் (உரிமையாளர், கோபுரம் உற்பத்திகளும் விற்பனையும்) ஆகியோரின் அன்புமாமியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, தேவராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிரோன்மணி, தவகோபால் காலஞ்சென்றவர்களான புனிதவதி, பரராஜசேகரம், பாலச்சந்திரன் மற்றும் சரஸ்வதி, சிவபாக்கியவதி, பொன்மலர், தவமலர், சண்முகலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற பஞ்சலிங்கம், மற்றும் நாகரத்தினம், சித்தானந்தபவானி , சொக்கலிங்கம், கந்தசாமி, சிவபாதசுந்தரம், விசுவலிங்கம், மதனகுமாரி ஆகியோரின் சகலியும் நிவாசன், லக்சிகா, ஜஸ்மின், பாலகன், பைரவி, அக்ஷயா, அரிசன், அஞ்சனன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மல்ரிஓயில்
கே.கே. எஸ் வீதி, இணுவில்
021 224 1587

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தவேஸ்வரி (ஈஸ்வரி) தேவராசா

கொட்டடியைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவேஸ்வரி (ஈஸ்வரி) தேவராசா 29.12.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லக்கண்ணு தம்பதியரின் மகளும், இராஜேஸ்வரியின் சகோதரியும், தேவராசாவின் மனைவியும், தேவகஜனி(சுவிஸ்), அஸ்வினி(சுவிஸ்), காலஞ்சென்ற ஜங்கரன் (தம்பா) ஆகியோரின் தாயும், அரிச்சந்திரன் (சுவிஸ்), ஜெயா (சுவிஸ்), மேகலா ஆகியோரின் மாமியும், கம்சிகா, டக்ஷயன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்லை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



பிறப்பு 18.02.1953 இறப்பு 29.12.2018

103/13, வயல்கரை லேன்,
முருமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(cs.22197) (13.17) தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகரத்தினம் திரிபுரசுந்தரம்



தோற்றம் 10.04.1933 மறைவு 30.12.2018

கொல்லன்கலட்டியை பிறப்பிடமாகவும், கொட்டடி பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் திரிபுரசுந்தரம் நேற்று (31.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காசிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கதிரித்தம்பி தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற முருகையா மற்றும் கந்தையா ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற அன்னப்பிள்ளை மாமாங்கம் மற்றும் மீனாட்சிப்பிள்ளை மாணிக்கம், பரமேஸ்வரி மற்றும் சின்னமணிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் பாலச்சந்திரன் காலஞ்சென்ற வசந்தகுமாரி மற்றும் செல்வகுமாரி காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் விஜயகுமாரி, இதயகுமாரி ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற குணரத்தினம், துரைசிங்கம் மற்றும் ரஞ்சினிதேவி, முருகேசபிள்ளை, ஜெகராசசிங்கம், சுபபவானி ஆகியோரின் அன்புமாமியும் காலஞ்சென்ற சிவரூபன் மற்றும் ராஜரூபன், பாமினி, ஜெயரூபன், யறோஜினி, கஜரூபன், பவநீதன், அபிபிரியன், கோபிகா, பானுஜா, லயநாத், துவிஜனன், அஸ்வினி, கோகுலன், கீர்த்திகன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் பிரதிஷா, டிலுக்ஷன், ஜெயானி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2018) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொட்டடி பன்னாலை,
தெல்லிப்பழை.

தகவல் : குடும்பத்தினர்

## குளிரான...

துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிழக்கு மாகாணத்திலும் மாத்தளை மாவட்டத்திலும் சிறிதளவான மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்குத் திசையிலிருந்து வீசக்கூடும் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 25 - 35 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் மற்றும் மன்னாரிலிருந்து புத்தளம் ஊடாக கொழும்பு வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 - 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

### முதலாம் ஆண்டில் முகிழ்க்கும் நினைவுகள்



மலர்வு 07 . 01 . 1924

உதிர்வு 11 . 01 . 2018

அமரர் திருவாட்டி

**தில்லைநாயகி குகநாகதாசன் (மம்மி)**

திதி: அபரபக்க தசமி

உம் நினைவெம் நெஞ்சில் நிற்கும்

தாராண்மை யோடு இந்தத் தரணியு ளார்கள் போற்ற
பேராண்ட உறவு சூழ பேரர்பேர்த் தியர்க ளோடே
நீராண்ட வாழ்வு நீத்து நிமலன்தாள் சென்று சேர்ந்தே
ஓராண்டு ஆன போதும் உம்நினைவெம் செஞ்சில் நிற்கும்.

இல.59, இராமநாதன் வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர்.

குடும்பத்தினர்
077 610 9474

(es.22196-13)

## யாழ்ப்பாணம் மாநகர சபை. 2019 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையவாறு வீதவரி விதித்தல்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தத்துவங்களை அமுல்படுத்துவதுடன், பணிகள், செயற்பணிகளை நிறைவேற்றுகின்ற யாழ்ப்பாணம் மாநகர சபையின் இ.த.ஜெயசீலன், ஆணையாளர் ஆகிய நான் யாழ்ப்பாணம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 230(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய யாழ்ப்பாணம் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கு 2019 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வீதவரி விதிப்பதானது பின்வருமாறாக இருத்தல் வேண்டும் என்று தீர்மானிக்கின்றேன். அதாவது,

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல வீடுகள், கட்டிடங்கள், காணிகள் மற்றும் நிர்மாணிப்புகளின் வருடாந்த பெறுமதிக்கு 2018 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு /மதிப்பீட்டை 2019 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு/ மதிப்பீடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும், மேற்படி விலை மதிப்பின் அடிப்படையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 230(1) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மேற்படி ஆதனத்தின் மீது குறித்த மதிப்பீட்டுக்கு வருடாந்தப் பெறுமதியில் 6 சதவீதமான (6%)வருடாந்த வீத வரி விதிக்கப்படல் வேண்டும் என்றும்,

மேலும், 2019 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படுகின்ற வருடாந்த வீதவரியை யாழ்ப்பாண மாநகரசபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு வருடாந்த வீதவரி 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தப்படுமாயின், வருடாந்த வீதவரித் தொகையில் நூற்றுக்கு பத்து சதவீதமான (10%) கழிவும், மேற்படி அட்டவணையின் ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வீத வரித் தொகை யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் 5% ஆன கழிவும் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் வழங்கப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% திலுமான (பதினைந்து வீதம்) மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது 20% திலுமான (இருபது வீதம்) விறாந்துச் செலவு அறவிடப்படும் என்றும் தீர்மானிக்கின்றேன்.

யாழ்ப்பாணம் மாநகர சபை

**இ.த.ஜெயசீலன்**
**ஆணையாளர்,**

| **காலாண்டு** | **மேற்படி அட்டவணை செலுத்த வேண்டிய திகதி** | **5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதித் திகதி** |
|---|---|---|
| முதலாவது காலாண்டு | 01.01.2019 – 31.03.2019 | 31.01.2019 |
| இரண்டாவது காலாண்டு | 01.04.2019 – 30.06.2019 | 30.04.2019 |
| மூன்றாவது காலாண்டு | 01.07.2019 – 30.09.2019 | 31.07.2019 |
| நான்காவது காலாண்டு | 01.10.2019 – 31.12.2019 | 31.10.2019 |

**குறிப்பு:-** 2019 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. கிடைக்காதவர்களும் தமது ஆதன விபரங்களை மாநகரசபை ஆதனவரிப்பகுதியில் நேரடியாக வந்து தமது ஆதன விபரங்களைத் தெரிவித்து 2019 ஆம் ஆண்டிற்கான ஆதனவரிகளைச் செலுத்த முடியும் என்பதுடன் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 31.01.2019 ஆம் திகதிக்குள் செலுத்துவதன் மூலம் 10% கழிவினையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன். காசோலையாகவோ, காசுக்கட்டளையாகவோ செலுத்துவோர் " மாநகரசபை ஆணையாளர் யாழ்ப்பாணம்" என அனுப்பி செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(வாரவிடுமுறை நாட்களான 2019 தை மாதம் பொதுவிடுமுறை தவிர்ந்த வார இறுதி தினங்களான சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலக செயற்பாடுகள் இடம்பெறும்.)

**இ.த.ஜெயசீலன்**
**ஆணையாளர்,**
**மாநகர சபை,**

(in.8909) (13,17)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 901
சீட்டிழுப்பு திகதி 2018.12.29 சனிக்கிழமை
X 17 20 56 70
அடுத்த சுப்பர். ஜக்பொட்
ரூ. 42,916,612/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
2018.12.31ம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 30.12.2018
வெற்றி வாரம் 2426
வர்ணம் ஊதா
இடபம்
வெற்றி இலக்கங்கள் 03 11 51 60
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,212,880 /=
2019.01.01 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கொடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 387
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.12.30
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 107,787,868/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
P 01 13 71 73
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 480
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.12.30
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 55,658,800/-
வெற்றி இலக்கங்கள்
19 32 53 63 O
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**தம்பிராசா விசாலாட்சி**

தோற்றம் 28.06.1934

மறைவு 11.01.2018

அம்மா!

வருடம் ஒன்றாகியும் எம் வருத்தம் தீரவில்லை
வளர்பிறையாய் நாங்கள் வளர்ந்தோம்
தேய்பிறையாய் நீங்கள் தேய்ந்ததால்
நிலவின்றி இரவிற்கு வெளிச்சம் இல்லை
நீங்கள் இன்றி எம் வாழ்வில் வசந்தம் இல்லை.

இல.78, யாழ்.இந்துக்கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 31 . 05 . 1951

மறைவு 11 . 01 . 2018

**திருமதி சரஸ்வதிதேவி நற்குணம்**

(தங்கா)


திதி : 31.12.2018

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கதிரமலை வீதி,
சுன்னாகம் தெற்கு.

குடும்பத்தினர்

## இது புதுசு



ஆண்களுக்கான கழுத்துப்பட்டி இன்றிய மேற்சட்டைகள் (சேட்) புதிய வடிவில் அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 90 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# மீன் மஞ்சூரியன்



### தேவையான பொருட்கள்:

துண்டு மீன் 1/2 கிலோ,
சோளமாவு, மைதா தலா 25 கிராம்,
முட்டை 1,
கொத்தமல்லி சிறிது,
எண்ணெய், உப்பு தேவைக்கு,
வெங்காயம் 2,
பூண்டு 6 பல்,
இஞ்சி 1 துண்டு,
பச்சைமிளகாய் 5,
சோயா சாஸ், தக்காளி சாஸ்,
வெங்காயத்தாள் தேவைக்கு.

### செய்முறை:



கொத்தமல்லி, வெங்காயம், வெங்காயத்தாள், பூண்டு, இஞ்சி, ப.மிளகாயை பொடியாக நறுக்கி கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் சோளமாவு, மைதா, முட்டை, உப்பு சேர்த்து ஒன்றாக கலந்து அதில் மீனை போட்டு சிறிதளவு தண்ணீர் தெளித்து நன்றாக கலந்து அரை மணி நேரம் அப்படியே வைக்கவும்.

ஊற வைத்த மீனை சூடான எண்ணெயில் போட்டு பொரித்து எடுக்கவும்.

மற்றொரு கடாயில் சிறிது எண்ணெய் சேர்த்து சூடானதும் வெங்காயம், பூண்டு, இஞ்சி, பச்சைமிளகாய் சேர்த்து வதக்கி, சோயாசாஸ், தக்காளிசாஸ், மீன் சேர்த்து நன்றாக வதக்கி இறக்கவும்.

கடைசியாக அதில் கொத்தமல்லி, வெங்காயத்தாள் போட்டு சூடாக பரிமாறவும்.

# குளிர்காலத்தில் அவசியம் சாப்பிட வேண்டிய பழம்

குளிர்காலத்தில் அவசியம் தோடம்பழம் சாப்பிட வேண்டும். ஏனெனில் குளிர்காலத்தில் நோய் எதிர்ப்புச் சக்தி குறையும். சரும ஆரோக்கியமும் பாதிப்புக்குள்ளாகும். அவற்றைச் சீராகப் பராமரிக்க தோடம்பழம் உதவும்.

குளிர்காலத்தில் சமிபாட்டுச் செயற்பாடுகளும் மந்தமாக இருக்கும். அதனைத் துரிதப்படுத்துவதிலும் தோடம்பழத்தின் பங்களிப்பு இருக்கிறது. உடல்எடையைக்குறைக்கவிரும்புபவர்களும்குளிர்காலத்தில் தவறாமல் தோடம்பழம் சாப்பிட வேண்டும். அதில் இருக்கும் நார்ச்சத்து பசியைக் கட்டுப்படுத்தும்.

தோடம்பழத்தை ஜூஸாகப் பருக விரும்புபவர்கள் தோலையும் சேர்த்து ஜூஸாக்க வேண்டும். அதில்தான் அதிக நார்ச்சத்து இருக்கிறது. குளிர்காலத்தில் சளிப் பிரச்சினை அதிகமாக இருக்கும். தோடம்பழம் சளித் தொல்லையில் இருந்து தற்காத்து கொள்ளவும் உதவும். தோடம்பழத்தில் இருக்கும் விற்றமின் 'சி' சளிக்கு நிவாரணம் தரும் என்பது ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க இதய நோய்த்துறை அமைப்பு ஒன்று நடத்திய ஆய்வின் படி, பக்கவாதபாதிப்புக்கு ஆளாகாமல்தற்காத்துகொள்ளவும்தோடம்பழம் சாப்பிட வேண்டியது அவசியமாகிறது.

குருதி நாளங்களின் செயல்பாடுகளை மேம்படுத்தவும் துணைபுரிகிறது. சிட்ரேட் குறைபாடுஇருப்பதுதான் சிறுநீரககல்பிரச்சினைக்கு காரணம். தோடம்பழத்தில் இயற்கையாகவே சிட்ரேட் அமிலம் நிறைந்திருக்கிறது.

தோடம்பழத்தைஜூஸாகப்பருகுவதன்மூலம்சிறுநீரகத்தில்கல்படிவதைக் கட்டுப்படுத்தலாம். சிறுநீரகக்கல்பிரச்சினையால்அவதிப்படுபவர்களும் மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் தோடம்பழ ஜூஸ் பருகி வரலாம்.





# வாழைப்பழத்தின் நன்மைகள்

**நெஞ்செரிச்சல் :**
உங்கள் இரைப்பை மற்றும் வயிற்றில் அதிக அமிலம் சுரந்தால், ஒரு வாழைப்பழம் சாப்பிடுங்கள். உடனே அமிலங்கள் சுரப்பது கட்டுப்படும். நெஞ்செரிச்சல், சமிபாட்டுக் கோளாறு ஆகியவை குணமாகும். முக்கியமாக இவை வயிற்றில் உள்ள புண்களை ஆற்றும் தன்மை கொண்டவை.

**மலச்சிக்கல் :** நாள்தோறும் காலைக் கடனை முடிக்க முடியாமல் திணறுபவர்கள் தினமும் இரவில்வாழைப்பழம்சாப்பிடுங்கள். இதிலுள்ள அதிகப்படியான நார்ச்சத்துகுடலில்நெகிழ்வுத்தன்மையைத் தருகிறது. மலத்தை இளக்குகிறது.

**சோர்வான நேரத்தில் :** உடலில் அதிகபடியான சக்தி மற்றும் நீர் இழக்கும்போது மிகவும் சோர்வாகக் காணப்படுவீர்கள். உடனடியாக வாழைப்பழம் எடுத்துக் கொண்டால் உடலிலுள்ள நுண் சத்துக்களைசமன்செய்யும். உடனடிச் சக்தி கிடைக்கும்.

**பக்கவாதத்தைகட்டுப்படுத்தும்**
வாழைப்பழத்திலுள்ளபொட்டாசியம் குருதி கொதிப்புக்குக் காரணமானசோடியம்அளவைகட்டுப்படுத்துகிறது. மேலும்பக்கவாதம் வராமல்காக்கும்.

**குருதிச் சோகை :** வாழைப்பழத்தில் இரும்புச் சத்து உள்ளது. தினமும் வாழைப்பழம் சாப்பிட்டால்அனிமியாவைகட்டுப்படுத்தலாம். இது ஹீமோகுளோபின் எண்ணிக்கையை குருதியில் அதிகரிக்கச்செய்கிறது. குருதி ஓட்டத்தைத் தூண்டுகிறது.

**சமிபாட்டை அதிகரிக்க :** கல்லீரலைப் பலப்படுத்தும். பசியைத் தூண்டச் செய்யும். நல்ல பக்டீரியாக்களைப் பெருகச் செய்யும். சமிபாட்டுக்கோளாறுகுணமாகும்.

**குடல்புண் :** வாழைப்பழம் வயிற்றில் சுரக்கும் அமிலங்களைத் தடுப்பதோடு அதனால் உண்டாகும் புண்களையும் ஆற்றும். குடல்புண்களை உண்டாக்கும் பக்டீரியாக்களை அழிக்கும் ஆன்டி ஆக்ஸிடென்டுகளை கொண்டது.

வாழைப் பழத்தின் குண நலன்களை இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம்.
இதுவிலைகுறைவானதுஎன்றாலும் அதிகளவான நன்மைகளைக் கொண்டுள்ளது. தினமும் ஒருவாழைப்பழம்சாப்பிடுங்கள். ஆரோக்கியம் இரு மடங்காகும்.



## அற்புத மருத்துவ குணம் நிறைந்த மணத்தக்காளி

வயிற்று நோய், வயிறு உப்பசம், வாய்வுத்தொல்லைஉடைய்வர்கள் மணத்தக்காளிக்கீரையைசமைத்து உண்டால்நோய் கட்டுப்பாட்டுக்குள் வரும். கீரையுடன் தேங்காய் சேர்த்துக் கூட்டு செய்து சாப்பிட்டு வந்தால் குடல் புண், மற்றும் சிறு நீர்ப்பைஎரிச்சல்போன்றபிரச்சினைகள் நீங்கும். மணத்தக்காளி கீரை கல்லீரல் நோயை குணப்படுத்தி குருதிக்குத் தேவையான சிவப்பணுக்களைஉருவாக்குகிறது. உடல் சூடுஅதிகம் கொண்டவர்கள் மணத்தக்காளியைச் சமைத்துச் சாப்பிட்டால் உடல்ச் சூடு தணியும். இந்தக் கீரையில் பொஸ்பரஸ், அயன், கல்சியம் ஏ, சி மற்றும் பி விற்றமின் தாதுக்கள் போன்றவை அதிக அளவில் உள்ளன.

# தெற்கிலிருந்து வடக்குக்கு வரும் "மனித நேயத் தொடருந்து"

ஆக்கம்
ரவி ரத்னவேல்

மனித இனத்தால் மறக்கமுடியாத பாடங்களை கற்றுக்கொடுக்கும் முதன்மை ஆசான் இயற்கையே ஆகும். பிறப்பு முதல் இறப்பு வரை மனித குலத்துக்கு மகத்தான பல பாடங்களை புகட்டிவரும் இயற்கையை விஞ்சுவதற்கு மனிதன் மேற்கொள்ளும் முயற்சிகளே மனித இனத்தின் எதிர்காலத்தையும் நிச்சயிக்கின்றது.

மறுபுறத்தில் மனிதன் எத்தனை வித்தைகளைக் கற்று எந்த அளவு உயர்ந்தபோதிலும் என்றுமே அவனால் இயற்கைக்கு சவாலாக இருக்க முடியாது என்ற கசக்பான உண்மையையும் இயற்கையே கற்றுக் கொடுத்து வருகின்றது.

அத்தோடு அவசர உலகில் அவதிப்படும் மனிதன் தன்னையும் தான் சார்ந்த மனித குலத்தையும் மறக்க முயலும் போதெல்லாம் மனிதனுக்கு மனித நேயத்தை கற்றுக்கொடுக்கும் ஆசானாகவும் அவ்வப்போது இயற்கை செயற்பட்டு வருகின்றது.

அதுவரை ஏட்டிலும் எழுத்திலும் மாத்திரம் இலங்கையர்கள் அறிந்திருந்த சுனாமி எனும் ஆழிப் பேரலை எமது நாட்டை எட்டிப்பார்த்த போது இதுவா சுனாமி என நினைத்துப் பார்ப்பதற்குள் இருந்த இடம் தெரியாது, போகும் இடமும் தெரியாத நிலைக்கு நம்மவரைத் தள்ளிவிட்டு, மனித வாழ்க்கை இத்தனை அற்பமானதா என்பதை இற்றைக்கு 14 வருடங்களுக்கு முன்னர் எமக்கு உணர்த்தியதும் இயற்கை அன்னையே ஆகும்.

2017 ஆம் ஆண்டு தென்னிலங்கை வரலாறு காணாத வெள்ள இடர் சந்தித்த போது அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் வகையில் அரச தலைவர் செயலகமும் அரச தலைவர் ஊடகப் பிரிவும் வடக்கே காங்கேசன்துறையிலிருந்து தெற்கே மாத்தறைக்கு இலட்சக்கணக்கான பெறுமதியான உதவிப் பொருள்களுடன் பணத்தால் மதிப்பிட முடியாத வடக்கே நல்லெண்ணம் படைத்த மனிதர்களின் உழைப்பையும் கொண்டு தெற்கே சரிந்து



> அன்றும் மனித நேயமற்ற ஒரு சிலர் வடக்கிலிருந்து தெற்கிற்கு எதற்கு இந்த நேசக்கரம் என்று விமர்சித்த போதிலும் பல்லாயிரக்கணக்கான மனித நேயம் கொண்ட மக்கள் அந்த நற்பணியில் கைக்கோர்த்துக் கொண்டனர். அன்று நாம் ஏற்படுத்தியது நல்லதொரு முன்னுதாரணமாகையால் அதைப் பின்பற்றி இன்று மீண்டும் தெற்கிலிருந்து வடக்கை நோக்கிய மனித நேய தொடருந்து பயணிக்க இருக்கின்றது.

விழுந்த சகோதர மக்களின் இயல்பு வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பி வரலாறு படைத்தது.

அன்றும் மனித நேயமற்ற ஒரு சிலர் வடக்கிலிருந்து தெற்குக்கு எதற்கு இந்த நேசக்கரம் என்று விமர்சித்த போதிலும் பல்லாயிரக்கணக்கான மனித நேயம் கொண்ட மக்கள் அந்த நற்பணியில் கைக்கோர்த்துக் கொண்டனர்.

அன்று நாம் ஏற்படுத்தியது நல்லதொரு முன்னுதாரணமாகையால் அதைப் பின்பற்றி இன்று மீண்டும் தெற்கிலிருந்து வடக்கை நோக்கிய மனித நேய தொடருந்து பயணிக்க இருக்கின்றது.

இன்று மாலை 2.00 மணியளவில் தெற்கே மாத்தறையிலிருந்து புறப்படும் இம்மனித நேயத் தொடருந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான தெற்கே நல்லுள்ளம் படைத்த மனிதர்களின் மனமார்ந்த உதவிகளைச் சுமந்து காலி, ஹிக்கடுவை, அம்பலாங்கொடை, அளுத்கம, களுத்தறை, பானந்துறை வழியே கொழும்பு மருதானையை வந்தடையும்.

நாளை ஜனவரி முதலாம் திகதி அதிகாலை 5.30 மணியளவில் கல்கிசை தொடருந்து நிலையத்திலிருந்து பறப்படும் இந்த மனித நேயத் தொடருந்து வெள்ளவத்தை, கொழும்பு கோட்டை, ராகமை, கம்பஹா, வேயங்கொடை, மீரிகம, பொல்கஹவெல, குருணாகலை, கனேவத்தை, மஹாவை, கல்கமுவ, அநுராதபுரம் வழியே கிளிநொச்சியைச் சென்றடையும். இதற்கு சமாந்தரமாக ஜனவரி முதலாம் திகதி காலை காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் மனித நேயத் தொடருந்தும் அதே நாளில் உறவுகளின் உதவிப் பொருள்களுடன் கிளிநொச்சியை வந்தடைய இருக் கிறது.

வடக்கே ஏற்பட்ட வெள்ள இடர் காரணமாக பாதிக்கப்பட்ட சகோதர தமிழ் மக்களுக்கு தேவையான உதவிப்பொருள்களை தெற்கிலிருந்து சேகரித்து செல்ல வேண்டும் என "தொடருந்து சேவையை பாதுகாப்போம்" என்ற தொடருந்துத் திணைக்களத்தின் உயரதிகாரிகள் முதல் சாதாரண ஊழியர்கள் மற்றும் புகையிரத பயணிகள் ஆகியோர் ஒன்றிணைந்து செயற்படும் அமைப்பினால் இந்த மனித நேயத் தொடருந்து பயணம் முன்னெடுக்கப்படும் அதே வேளை, இந்த மனித நேய நற்பணியினை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்குத் தேவையான பூரண ஒத்துழைப்பை அரச தலைவர் செயலகமும் அரச தலைவர் ஊடகப் பிரிவும் வழங்கி வருவதுடன் வடக்கை நோக்கிய தெற்கின் இந்த மனித நேயத் தொடருந்துப் பயணமானது, இன்று ஒரு தேசிய செயற்பாடாக மாறியிருக்கின்றது.

உதவும் உள்ளம் படைத்த நீங்களும் இதனை ஒரு வாய்ப்பாக அமைத்துக் கொள்ளலாம்.

## யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மீண்டும் கைவரிசையை காட்டிய கில்லாடிப் பெண்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 31

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தங்கச் சங்கிலியை திருடிய குற்றச்சாட்டில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட பெண், நேற்றுமுன்தினமும் அதே பாணியில் சங்கிலியைத் திருடிச் சென்றுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரும் நோயாளிகளிடம் தங்க ஆபரணங்களைத் திருடுபவர்கள் தொடர்பில் மருத்துவமனை நிர்வாகத்துக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. கடந்த 4ஆம் திகதி மருத்துவமனையில் உள்ள மறைகாணிகளின் (சிசிரிவி) உதவியுடன் இத்தகைய திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் சிலர் இனங்காணப்பட்டு மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் இரு நாள்களுக்கு முன்னர், மருத்துவமனைக்கு வந்த வயோதிபத் தாயாரை ஏமாற்றி 2 பவுண் தங்கச் சங்கிலி திருடப்பட்டுள்ளது. இது தொடர்பில் அவர் மருத்துவமனை நிர்வாகத்திடம் முறைப்பாடு செய்துள்ளார். மருத்துவமனை நிர்வாகத்தினர் மறைகாணி உதவியுடன் ஆராய்ந்து பார்த்தனர். தங்கநகைகளை திருடிய குற்றச்சாட்டில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட பெண்ணே, வயோதிபத் தாயின் தங்கச் சங்கிலியை ஏமாற்றி திருடிச் செல்வது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பொலிஸாரிடம் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பெண்ணை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப் பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (5,105)

## சோதனைக்காக முச்சக்கரவண்டியை மறித்த பொலிஸாருக்கு நேர்ந்தகதி

யாழ்ப்பாணம், டிசெ. 31

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் அலுவலர் ஒருவர், காயங்களுடன் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளார். நேற்று இரவு 10 மணியளவில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, வீதியால் சென்ற முச்சக்கரவண்டியை நிறுத்துமாறு பொலிஸ் அலுவலர் கையால் சைகை காண்பித்துள்ளார். முச்சக்கர வண்டி, பொலிஸ் உத்தியோகத்தரை இடித்துத் தள்ளிவிட்டு தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் நெல்லியடியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். முச்சக்கரவண்டிச் சாரதி பொலிஸாரால் விரட்டிப் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (5,7,26)

## சுனாமிக்கு பின்னரான இந்தோனேசியா

இந்தோனேசியாவின் சுந்தா ஜலசந்தியில் உள்ள சைல்டு எரிமலை கடந்த 23ஆம் திகதி இரவு வெடித்துச் சிதறியது. இதனால் ஏற்பட்ட சுனாமி பேரலைகள் மேற்கு ஜாவா, தெற்கு சுமத்ரா தீவுப் பகுதிகளைத் தாக்கின. இதன் காரணமாக கடற்கரையோரம் இருந்த ஆயிரக்கணக்கான குடியிருப்புகள் இடிந்தன. இடிபாடுகளில் பலர் சிக்கிக் கொண்டனர். சுமார் 600 பேர் உயிரிழந்தனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சுனாமியின் கொடூரத்தன்மையை வெளிப்படுத்தும் வகையிலான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான றொயிட்டர்ஸ் ஒளிப்படக் கோர்வையாக வெளியிட்டது.





# நியூசிலாந்து அணியிடம் சரணடைந்தது இலங்கை

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி 423 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

இலங்கை அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் சமநிலையில் முடிந்ததை அடுத்து இரண்டாவது ஆட்டம் கடந்த 26ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பித்து நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. நியூசிலாந்து அணி 178 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சவுத்தி 68 ஓட்டங்களையும், வற்லிங் 46 ஓட்டங்களையும், றெய்லர் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் லக்மல் 5 இலக்குகளையும், குமார 3 இலக்குகளையும், பெரேரா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணிக்கு முன்வரிசை முழுவதுமாக ஏமாற்றியது. அந்த அணி 104 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. மத்தியூஸ் 33 ஓட்டங்களையும், சில்வா 21 ஓட்டங்களையும், குசல் மென்டிஸ் 15 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களைத் தவிர வேறு எவரும் பதின்மத்தை எட்டவில்லை. பந்துவீச்சில் போல்ட் 6 இலக்குகளையும், சவுத்தி 3 இலக்குகளையும், கிராண்ட்ஹோம் ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 585 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. நிக்கொல்ஸ் 162 ஓட்டங்களுடனும், கிரான்ட்ஹோம் 71 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். பந்துவீச்சில் குமார 2 இலக்குகளையும், சமீர, பெரேரா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்றுமுன்தின நான்காம் நாள் முடிவில் 6 இலக்குகளை இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இலங்கையின் வெற்றிக்கு இன்னும் 429 ஓட்டங்களும் நியூசிலாந்தின் வெற்றிக்கு மேலதிகமாக 4 இலக்குகளும் தேவை என்ற நிலையில் நேற்றைய நாள் ஆரம்பித்தது. டில்ருவான் பெரேரா 22 ஓட்டங்களுடனும் லக்மல் 16 ஓட்டங்களுடனும் களமிறங்கினார்கள்.

மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் பெறாமல் ஆட்டமிழந்தார் டில்ருவான் பெரேரா. 18 ஓட்டங்களுடன் லக்மலையும், மூன்று ஓட்டங்களுடனும் சமீரவையும் பவிலியனுக்குத் திருப்பினார் போல்ட். 236 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 423 ஓட்டங்களால் தோல்வியடைந்தது இலங்கை அணி.

பந்துவீச்சில் வாக்னர் 4 இலக்குகளையும், போல்ட் 3 இலக்குகளையும், சவுத்தி 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள். (ம)

## ஞானமுருகன் அணி இலகுவான வெற்றி!

யாழ்ப்பாணம், டிசெ. 31

வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஞானமுருகன் அணி வெற்றிபெற்றது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஞானமுருகன் அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் அணி மோதியது. 4:0 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணி வெற்றிபெற்றது.

ஞானமுருகனின் சார்பில் பவித்திரன் இரண்டு கோல்களையும், வாகிசன், சயந்தன் இருவரும் தலா ஒவ்வொரு கோல்களையும் பதிவுசெய்தனர். (ம-23)

## கலைவாணி அணி போராடி வென்றது

யாழ்ப்பாணம், டிசெ. 31

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கலைவா ணி அணி வெற்றிபெற்றது.

அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கலைவாணி விளையாட்டுக் கழகு அணியை எதிர்த்து சில்வெஸ்ரார் அணி மோதியது.

கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் ஐந்தாவது நிமிடத்தில் கலைவாணியின் கோலைப் பதிவுசெய்தார் பார்த்தீபன். முடிவில் அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## வென்றது ஸ்கந்தா

யாழ்ப்பாணம், டிசெ. 31

கரைச்சி கால்பந்தாட்ட லீக் நடத்தும் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஸ்கந்தா அணி வெற்றிபெற்றது.

கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஸ்கந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜெயந்திநகர் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தா அணி வெற்றிபெற்றது. (ம-23)

## உருத்திரபுரம் அபார வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 31

கரைச்சி கால்பந்தாட்ட லீக் நடத்தும் ஏ பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் உருத்திரபுரம் அணி வெற்றிபெற்றது.

கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கனகபுரம் விளையாட்டுக் கழக அணி மோதியது. 5:0 என்ற கோல் கணக்கில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அண வென்றது. (ம-23)

## பாரதியை தோற்கடித்தது றோயல் அணி

யாழ்ப்பாணம், டிசெ. 31

வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர், சங்கம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் றோயல் அணி வெற்றிபெற்றது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி பாரதி அணி மோதியது. முதல் பாதியில் றோயலின் சார்பாக மூன்று கோல்களும் பாரதியின் சார்பாக ஒரு கோலும் பதிவாகின. றோயலின் சார்பில் நிதர்சன் ஒரு கோலையும் கபில் இரண்டு கோல்களையும் பதிவுசெய்தனர். பாரதியின் சார்பில் சுரேந்திரன் கோலைப் பதிவுசெய்தார்.

இரண்டாம் பாதியில் றோயலின் சார்பாக இரண்டு கோல்களும் பாரதியின் சார்பில் ஒரு கோலும் பதிவாகின. றோயலின் சார்பில் நிதர்சனும், பாரதியின் சார்பில் சுரேந்திரனும் அந்தக் கோல்களைப் பதிவுசெய்தனர் முடிவில் 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது றோயல். (ம-23)



# ஆஸியைப் புரட்டியது இந்தியா!

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக மெல்பேர்ணில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி 137 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்று கிண்ணத்தை வெல்வதை உறுதி செய்தது.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரின் முதல் இரண்டு ஆட்டங்களில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாவது ஆட்டம் கடந்த புதன்கிழமை ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 7 இலக்குகளை இழந்து 443 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தினார் கோக்லி. அதிகபட்சமாக புஜாரா 106 ஓட்டங்களையும், கோக்லி 82 ஓட்டங்களையும், ரோகித் 76 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். பந்துவீச்சில் கம்மின்ஸ் 3 இலக்குகளையும், ஸ்ராக் 2 இலக்குகளையும், ஹசில்வூட், லயன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 151 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஹரிஸ் 22 ஓட்டங்களையும், பெய்ன் 22 ஓட்டங்களையும், கவாயா 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பும்ரா 6 இலக்குகளையும், ஜடேயா 2 இலக்குகளையும், இசாந் சர்மா, சமி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இந்திய அணி 8 இலக்குகளை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக அகர்வால் 42 ஓட்டங்களையும், பன்ட் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நேற்றுமுன்தின நான்காம் நாள் முடிவில் 8 இலக்குகளை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு இன்னும் 141 ஓட்டங்களும், இந்திய அணியின் வெற்றிக்கு 2 இலக்குகளும் தேவை என்ற நிலையில் ஆட்டத்தின் இறுதி நாள் நேற்று ஆரம்பமானது. கம்மின்ஸ் 61 ஓட்டங்களுடனும், லயன் 6 ஓட்டங்களுடனும் களமிறங்கினார்கள். 63 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கம்மின்ஸ். லயன் 7 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். இதையடுத்து 261 ஓட்டங்களுடன் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி 137 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரில் 2:1 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது இந்தியா. (ம)







## சிட்னியிலும் வெற்றி தொடரும் கோக்லி எச்சரிக்கைத் தொனி!



இந்திய அணியின் வெற்றி நடையை எவரும் தடை செய்ய முடியாது. சிட்னியிலும் அது தொடரும் என்று தெரிவித்தார் அந்த அணியின் தலைவர் கோக்லி.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களில் இரண்டில் வெற்றிபெற்ற இந்திய அணி கிண்ணம் வெல்வதையும் உறுதிசெய்தது. இந்த நிலையில் சிட்னியில் நடைபெறவுள்ள் நான்காவது ஆட்டத்திலும் இந்திய அணியின் வெற்றி தொடரும் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

நாங்கள் இந்த வெற்றியோடு நிறுத்திக்கொள்ளப் போவதில்லை. இந்த வெற்றி எங்களுக்கு அதிகமான நம்பிக்கையைக் கொடுத்துள்ளது. இந்த வெற்றி சிட்னியிலும் தொடரும். பந்துவீச்சு, துடுப்பாட்டம், களத்தடுப்பு என்று மூன்று துறைகளிலும் சிறப்பாகச் செயல்பட்டுள்ளோம், அதனால்தான் நாங்கள் கிண்ணத்தைத் தக்கவைத்துள்ளோம். தென்னாபிரிக்காவிலும் இதேபோன்ற நம்பிக்கையான கிரிக்கெட்டைத்தான் வெளிப்படுத்தினோம். அடுத்து வரும் ஆட்டங்களில் நான் நீண்ட நேரம் நிலைத்து நின்று துடுப்பெடுத்தாட விரும்புகிறேன். இந்த வெற்றிக்கு முக்கிய காரணம் எங்கள் பந்துவீச்சாளர்கள்தான். குறிப்பாக பும்ரா. 3 வேகப் பந்துவீச்சாளர்களும் சேர்ந்து அதிகமான இலக்குகளை ஓர் ஆண்டில் அணிக்காக வீழ்த்தி இருக்கிறார்கள். கூட்டாக இருந்து இவர்கள் சிறப்பாக பந்துவீசுவதைப் பார்க்கும் போது, தலைவராக நான் பெருமைப்படுகிறேன் என்று கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

## கோக்லியிடம் இருந்து கற்கவேண்டும் ஆஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்கள்!

### கிரேம் ஹிக் தெரிவிப்பு

ஆஸ்திரேலிய வீரர்கள் விராட் கோக்லியிடம் இருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளர் கிரேம் ஹிக்.

மெல்பேர்ணில் இந்திய அணியிடம் தோல்வியடைந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கோக்லி எப்படி இன்னிங்சை கொண்டு போகிறார் என்பதை நாங்கள் விவாதித்தோம். அவருக்குச் சமமானவர்களாக இல்லாவிட்டாலும் ஆஸ்திரேலிய வீரர்கள் அவரைப்பார்த்து கொஞ்சமாவது கற்றுக் கொள்ள வேண்டும். அவரிடமிருந்து எமது வீரர்கள் சிலவற்றை எடுத்துக் கொள்வதில் தவறில்லை. அவரது இன்னிங்ஸில் இருந்த கட்டுக்கோப்பு கற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. கோக்லி அடித்து ஆடக்கூடியவர், ஆனால் அவர் மிகவும் சாந்தமான முறையில் இந்தத் தொடரில் துடுப்பெடுத்தாடுகிறார்.

எமது துடுப்பாட்ட வரிசை கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. எனக்கு ஏமாற்றமளிக்கிறது. ஒரு துடுப்பாட்டப் பயிற்சியாளராக எவ்வளவோ முயற்சி எடுத்து சரியான விடயங்களைச் செய்கிறோம், சிறிது காலத்தில் வீரர்கள் கற்றுக் கொள்வார்கள் என்றுதானே முயற்சி செய்கிறோம் அவ்வாறு கற்றுக்கொள்ளப்படவில்லையென்றால் நிச்சயம் ஏமாற்றமே இருக்கும்" என்று ஹிக் மேலும் தெரிவித்தார். (ம)

## சிட்னி டெஸ்ட் ஆட்டத்துக்கு முன்னர் லாங்கருக்கு தலை வழுக்கையாகும்

### ஹடிச் கிண்டல்

இந்தியாவுக்கு எதிராக ஜனவரி மூன்றாம் திகதி சிட்னியில் நடைபெறவுள்ள நான்காவது டெஸ்ட் ஆட்டத்துக்கு முன்னர் ஆஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்சியாளர் லாங்கரின் தலை வழுக்கையாகிவிடும் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் ஹடிச்.

மெல்பேர்ணில் ஆஸ்திரேலிய அணிக்கு நேற்றுக் கிடைத்த தோல்வியின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் ஹடிச்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மிச்செல் மார்ஷ் ஆட்டமிழந்ததைப் பார்த்தபோது என்னிடம் வார்த்தைகள் இல்லை. அவருக்கு மூளை மழுங்கி விட்டது என்று நினைக்கிறேன். 3 ஓட்டங்களில் இருந்த போது ஜடேஜாவின் பந்துவீச்சை தலைக்கு மேல் தூக்கி அடிக்க முயன்றார் எப்படியோ தப்பினார். ஆனால் 10 ஓட்டங்களில் பவிலியனுக்கு நடையைக் கட்டினார். சிட்னி டெஸ்ட்டுக்கு மிச்செல் மார்ஷ், ஆரோன் பின்ஞ் இருவரும் அணியில் இருக்கக் கூடாது. ஜஸ்டின் லாங்கர் இவர்கள் ஆட்டத்தைப் பார்த்து முடியைப் பிய்த்து கொண்டிருப்பார். முடியைப் பிய்த்துப் பிய்த்து சிட்னி டெஸ்ட்டுக்குள் அவருக்கு வழுக்கையே விழுந்து விடப் போகிறது - என்றார். (ம)

## பிரத்தியேக வகுப்பு

**வணிகக்கல்வி** (A/L) துரித மீட்டல் & Paper Class.
**வரலாறு** (10-11). **வணிகமும் கணக்கீடும்** (10-11).
வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.
யாழ். நகர் - 077 656 9911

A/L 2021 கணக்கீடு
Mr. Balakajen
KBK CENTRE
Sat, Sun 4 - 5 pm
Tue, Fri 5 - 6 pm
ஆரம்பம் - 05.01.2019
ஆரம்பம் - 04.01.2019
075 077 5660

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள், இளைஞர் யுவதிகளுக்கான 3 மாத உரையாடல் மூலமான ஆங்கிலப்பயிற்சிநெறி.

ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்களும் தமிழ்போல சரளமாக மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 05.01.2019 சனி

1. காலை : 08-10
2. காலை : 10-12
3. மதியம் : 01-03
4. மாலை : 03-05

ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்.

முன்பதிவு செய்வோருக்கு
16 பாடப்புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் முற்றிலும் இலவசம்.

3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியுமென நிரூபிக்கப்பட்ட பாடநெறி

SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்.
077 621 4567 222 4282

## கலை | வர்த்தகம் தொழில் நுட்பம்
A/L 2021
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
ஆரம்பம்: 06.01.2019 ஞாயிறு காலை 9.00 மணி
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
A/L 2018 உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் யாழ் மாவட்டத்தில் முன்னனி பெறுபேறுகளுடன்...
A/L DAY CLASS NEC

## SKB யிடம் வணிகக்கல்வி கற்று உயர் பெறுபேறு பெற்றவர்கள்
A,B பெற்றவர்கள் மற்றும் மாவட்ட நிலையில் முதல் 10 இடங்களை பெற்றவர்களை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

S.K. பாலசபேஷ்
வலிகாமம் கல்வி வலய வணிகக் கல்வி வளவாளர்
B.Com HND in.Acc (AT I)/P.G.Dip in Edu (OUSL)
Tutorial Staff Jaffna College Vaddukkoddai

மாவட்ட நிலையில் முதல் 10 இடங்களை பெற்றவர்கள்



சாம்பவி (3A)
01
NEC கல்வி நிறுவனம்



துவாரகேசன் (3A)
02
HAC கல்வி நிறுவனம்



தர்மிலன் (3A)
05
HAC கல்வி நிறுவனம்



மகிழரசி (3A)
06
NEC கல்வி நிறுவனம்



வினுஜா (2AB)
09
HAC கல்வி நிறுவனம்



தமிழ்நிலா (3A)
09
HAC கல்வி நிறுவனம் (கிளிநொச்சி

### வணிகக் கல்வியில் A,B பெற்ற மாணவர்கள்

| பெயர் | கல்வி நிறுவனம் | பெறு பேறு | வணிக கல்வி | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|
| 01. சாம்பவி | NEC | 3A | A | 01 |
| 02. துவாரகேசன் | HAC | 3A | A | 02 |
| 03. தர்மிலன் | HAC | 3A | A | 05 |
| 04. மகிழரசி | NEC | 3A | A | 06 |
| 05. வினுஜா | HAC | 2A B | A | 09 |
| 06. தமிழ்நிலா | HAC | 3A | A | 09 (கிளிநொச்சி) |
| 07. பெலிண்டன் ஜான்சன் | NEC | 2A B | A | 15 (மன்னார்) |
| 08. இலக்கியா | NEC | 3A | A | 18 |
| 09. குகவதனி | HAC | A2B | A | 18 (கிளிநொச்சி) |
| 10. சரண்யா | NEC | 3A | A | 20 |
| 11. மேனகா | NEC | A2B | B | 21 (கிளிநொச்சி) |
| 12. டெனுசன் | NEC | 2BC | B | 24 (கிளிநொச்சி) |
| 13. கஜவரன் | NEC | 3A | A | 29 |
| 14. ரொனால்ட் | NEC | 3A | A | 34 |
| 15. றொசான் | NEC | 3A | A | 38 |
| 16. தமிழினி | HAC | B2C | B | 48 (கிளிநொச்சி) |
| 17. தனலக்ஷன் | HAC | 2AC | A | 50 |
| 18. அபிசாளினி | HAC | A2B | A | 57 |
| 19. நஸ்மா | NEC | 2AB | B | 64 |
| 20. றொமின்ஷியா | NEC | A2B | B | 75 |
| 21. துவாரகன் | NEC | A2B | B | 79 |
| 22. ஹறிஸ் பாபு | NEC | 2AB | B | 81 |
| 23. டிசானி | NEC | 2AB | A | 90 |
| 24. டிலக்ஷனா | NEC | 2AB | A | 114 |
| 25. மதுரிகா | NEC | A2B | B | 127 |
| 26. கோகிலராஜ் | NEC | A2B | B | 133 |
| 27. உஷாளினி | NEC | A2B | B | 136 |
| 28. கிருஷ்ணாங்கி | HAC | 2BC | B | 144 |
| 29. அமண்பூ | NEC | A2B | B | 158 |
| 30. சிவகனா | NEC | 3B | B | 184 |
| 31. சயன் | NEC | ABC | B | 154 |
| 32. மதுசா | NEC | 3B | B | 163 |
| 33. மாதங்கி | NEC | 3B | B | 210 |
| 34. லோஜி | NEC | 2BC | B | 44 (கிளிநொச்சி) |
| 35. திவ்யா | NEC | ACS | A | |
| 36. மொறிஸ்ரன் | BPI | A2B | B | 137 |
| 37. நிதுசனா | NEC | 2BC | B | |
| 38. மேரிபிரியங்கா | BPI | 2B C | B | |
| 39. தக்ஷயன | NEC | BCS | B | |
| 40. தர்ஷனா | பாரதி | B2C | B | |
| 41. யாக்ஷினி | BPI | ABC | A | |
| 42. தனுஷன் | NEC | 2BC | B | |
| 43. கோபிஷா | NEC | 2BC | B | |
| 44. துவாரகா | HAC | B2S | B | |
| 45. ஹிந்துசா | NEC | BCS | B | |
| 46. தமிழ்ப்பிரியன் | NEC | 3B | B | 41 (கிளிநொச்சி) |
| 47. தேனுஜன் | NEC | 2BC | B | 59 (கிளிநொச்சி) |

"நாங்கள் எதையும் சொல்லமாட்டேம் செய்து காட்டுவோம்:

## Techno World (யாழ்ப்பாணம்)

### A/L தொழில்நுட்ப பிரிவு
கடந்த வருடத்தின் வெற்றியும் 2018 ஆம் ஆண்டின் சாதனையுடன்

**உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் (43 மாணவர்கள் 5 மாவட்டம்)**
கலக்சிகா - 01 (Rank) 25 I.R (யாழ்.)
ரஜிதா - 01 (முல்லைத்தீவு)
லிதுர்சன் - 01 (கிளிநொச்சி)

**பொறியியல் தொழில்நுட்பம் (25 மாணவர்கள் 5 மாவட்டம்)**
விசுராதன் - 04 (Rank) A. 2B
வேனுயன் - 08 (Rank) 2A, B

**உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்**
தனுசியந்தன் - 03
ஜெனன், ரினுயா - 04
கிரியனா - 05
கிசோரகா - 06
நளாஜினி, கம்சிகா, அஸ்மாபானு - 07
நிலவன் - 08
கஜானி - 09

(இதுவரை 68 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியுடன்)
(C 32333/15/17)
- 077 017 5346

## NEC
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி

### வர்த்தகப் பிரிவு A/L 2021
கணக்கீடு K.பாலகஜன்
வணிகக்கல்வி SK.பாலசபேஷ்
பொருளியல்
S.ஜெயக்குமார் K.பிரதீபன்
ஆரம்பம்: 06.01.2019 ஞாயிறு காலை 9.00 மணி
A/L 2018 உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் யாழ் மாவட்டத்தில் வர்த்தகப்பிரிவில் 1ஆம், 6ஆம் நிலை உட்பட 3A - 12 பேர், 2A B - 10 பேர், A 2B - 09 பேர, பெற்றுக் கொண்ட மாணவர்களை NEC கல்வி நிறுவனம் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.
A/L DAY CLASS
ஆரம்பம்: 02.01.2019 புதன் காலை 7.00 மணி

## விஸ்டம்
விஸ்டம்
### தொழில் நுட்பக் கல்லூரி
இல63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

A/L2018 தொழில்நுட்பப் பிரிவில் சித்தி பெற்றுள்ள எமது கல்லூரி மாணவர்களை
### பாராட்டி வாழ்த்துகின்றோம்
(பல்கலைக்கழக நுழைவுத் தகுதியைப் பெற்றுள்ள எமது மாணவர்களில் ஒரு தொகுதியினர்)

**பொறியியல் தொழினுட்பவியல்**

| இல. | மாணவர் பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 01. | தே.பிரதீபன் | 3B | 01 | கிளி |
| 02. | தே.வேந்துஷன் | 2BC | 01 | முல்லை |
| 03. | சி.திருக்குமார் | 2BC | 02 | கிளி |
| 04. | அ.கபிசங்கர் | 3C | 02 | முல்லை |
| 05. | வி.தினேஷ் | 2BC | 03 | கிளி |
| 06. | ப.டார்வின் | BCS | 03 | முல்லை |
| 07. | ர.தர்சியப்பிரியன் | 3B | 05 | யாழ் |
| 08. | ஏ.டக்சன் | 3C | 06 | கிளி |
| 09. | யோ.அனந்தன் | B2C | 06 | வவுனி |
| 10. | க.அபிராம் | A2B | 07 | யாழ் |
| 11. | ப.தனுசிகன் | 3C | 07 | வவுனி |
| 12. | ர.திலக்சன் | 3C | 08 | வவுனி |
| 13. | ரா.சுமித்தா | ABC | 09 | யாழ் |
| 14. | கி.டெறிக்சன் | 2AC | 11 | யாழ் |
| 15. | ச.சர்மன் | 2AB | 12 | யாழ் |
| 16. | இ.சிந்துஜன் | ABC | 14 | யாழ் |
| 17. | சி.விதுஷன் | ABC | 18 | யாழ் |
| 18. | சி.சிவதர்ஷன் | 2BC | 19 | யாழ் |
| 19. | ரா.ஸ்ரீராஜதீபன் | 3B | 20 | யாழ் |
| 20. | சி.சங்கவி | 3B | 21 | யாழ் |
| 21. | நி.துஜீபன் | 3B | 22 | யாழ் |
| 22. | சு.துவாரகன் | 2BC | 24 | யாழ் |
| 23. | ச.பிரத்யுன்மன் | B2C | 25 | யாழ் |
| 24. | கு.நவநீதன் | 2BC | 26 | யாழ் |
| 25. | ஸ்ரீ.கபிலன் | B2C | 31 | யாழ் |
| 26. | சி.நிரோஜன் | 2BC | 36 | யாழ் |
| 27. | க.சஜீபன் | 2BC | 42 | யாழ் |
| 28. | சு.பிரசாத் | B2C | 44 | யாழ் |
| 29. | ச.ஜங்கரன் | 2BC | 50 | யாழ் |
| 30. | வ.தகிலன் | 2BS | | யாழ் |

**உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்**

| இல. | மாணவர் பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 01. | பா.தர்ஷன் | A2B | 01 | திருகோ |
| 02. | ப.உகந்தன் | 2BC | 02 | முல்லை |
| 03. | க.கோபிகன் | 2AB | 03 | யாழ் |
| 04. | ச.பிரியங்கா | 2BC | 03 | முல்லை |
| 05. | நா.நாகசீலன் | 2AB | 05 | யாழ் |
| 06. | ஆ.கம்சிகா | BCS | 06 | கிளி |
| 07. | க.ரக்சிகா | ABC | 07 | யாழ் |
| 08. | ஜீ.சர்மிளன் | B2C | 08 | முல்லை |
| 09. | சி.கிருஷ்ணா | A2B | 10 | யாழ் |
| 10. | எஸ்.விதுஷன் | BCS | 10 | முல்லை |
| 11. | ர.விஜித்தா | 2BC | 12 | யாழ் |
| 12. | பா.லக்ஷனா | 3B | 14 | யாழ் |
| 13. | மொஹமட் சதார் | B2C | 14 | திருகோ |
| 14. | ப.மாதுமை | 2BC | 15 | யாழ் |
| 15. | இரா.துர்க்கா | 3B | 16 | யாழ் |
| 16. | க.ஹரிஷ் | 2BC | 17 | நுவரலி |
| 17. | சே.கோபிகிருஷ்ணா | 2BC | 18 | யாழ் |
| 18. | ச.சஜீபன் | 2BC | 19 | யாழ் |
| 19. | ந.பேபிகா | 2BC | 20 | யாழ் |
| 20. | வி.பூர்ணிமா | 2BC | 22 | நுவரலி |
| 21. | ஜெ.பிறின்சிஹா | 2BC | 25 | யாழ் |
| 22. | சி.சிவதனுஷா | B2C | 28 | யாழ் |
| 23. | கு.துஷாந்தன் | B2C | 29 | யாழ் |
| 24. | சி.லவன் | 2BC | 32 | யாழ் |
| 25. | வி.நிருஷா | 2BS | 39 | யாழ் |
| 25. | ர.நவீனா | B2C | 41 | யாழ் |
| 26. | சு.சுரேந்திரன் | B2C | 47 | யாழ் |
| 27. | அ.கர்சிகா | B2C | 50 | யாழ் |

தொழினுட்பப் பிரிவில் ஒவ்வொரு வருடமும் அதிகளவான மாணவர்களைப் பல்கலைக்கழகம் அனுப்புகிறோம் என்ற பெருமையுடன்
A/L 2021, 2019 DAY பிரிவுகளுக்கான புதிய வகுப்புக்கள் 05.01.2019 காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகின்றன.

077 248 7774

## ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.